இலங்கை பற்றிய பான் கீ மூனின் நிபுணர் குழுவின் அறிக்கை



03

இஸ்லாமிய நிதி நிறுவனங்கள் இலாபத்தை மாத்திரம் நோக்காகக் கொண்டவையல்ல



கலாநிதி எஸ்.எம்.எம். நபீஸ் (நளீமி)

05

நூலகம்

அமெரிக்காவிலுள்ள இலங்கை முஸ்லிம்கள்



08

# மீள்பார்வை

இலங்கை முஸ்லிம்களின் தனித்துவக் குரல்
15 வருடங்களையும் தாண்டி...
இதழ் - 220 ✱ 22 ஏப்ரல் 2011 ✱ வெள்ளிக்கிழமை ✱ ஜுமாதுல் அவ்வல் 1432 ✱ விலை 30.00





Wholesale Dealers In Mobile Phone Accessories
R I MOBILE
No. 151/11, Mumbai Plaza
Second Cross Street, Colombo 11.
Mobile: 077 3050949 Tel: 011 2439470


# வடக்கு, கிழக்கில் புதிதாக தொல்பொருள் முக்கியத்துவமிக்க 85 இடங்கள்:

## எல்லாவல மேதானந்த தேரர்



யுத்தம் முடிவுற்ற பின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் புதிதாக தொல்பொருள் முக்கியத்துவமிக்க 85 இடங்கள் இனம் காணப்பட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் முக்கியஸ்தர் எல்லாவெல மேதானந்த தேரர் அறிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு முழுமைக்கும் பௌத்த கேந்திர முக்கியத்துவமிக்க இடங்களை விடுதலைப் புலிகள் அழித்துவிட்டதாக குற்றம் சாட்டியுள்ள அவர், எஞ்சியுள்ள சிற்சில தடயங்களைக் கொண்டே தொல்பொருள் முக்கியத்துவமிக்க இடங்களைக் கண்டறிய வேண்டியுள்ளதாகவும் குறிப்பிடுகின்றார்.

அவ்வாறு இனம் காணப்பட்டுள்ள பல இடங்கள் இதுவரை எந்தவொரு தொல்பொருளியலாளரும் தண்டுபிடிக்காத, பௌத்த மத தலைவர்கள் கேட்டறியாத இடங்களாக இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

தற்போதைக்கு புதிதாக இனம் காணப்பட்டுள்ள தொல்பொருள் முக்கியத்துவமிக்க இடங்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்துடன் இணைந்து பல செயற்திட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



கொழும்பு பெரிய பள்ளிவாசலும் ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் இணைந்து நடத்திய க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஹமீதிய்யா மாணவர்களைப் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கும் வைபவம் கடந்த 08-04-2011 வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையின் பின் பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படம். இங்கு பாராட்டப்பட்டோர் முறையே இடமிருந்து வலமாக: தமிழ் மொழி மூலம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற கெகுணுகொல்ல தேசிய பாடசாலை மாணவன் முஹம்மத் இர்ஷாத், அனைத்து மொழிகளிலும் நாடளாவிய ரீதியில் இரண்டாவது இடத்தைப் பிடித்த குருணாகல் மலியதேவ கல்லூரி மாணவன் முஹம்மத் ரிஸான் முஹம்மத் ஆதிப், கொழும்பு ஹமீத் அல் ஹுஸைனியில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற ஹாபிஸ் ஹக்கீம் ஆகியோரை படத்தில் காணலாம். (படம்: அப்ழல் பளீல்)

# மூவாயிரம் வருடங்களுக்கு முந்திய கல்லறைகள் ஹல்தும்முல்லையில் கண்டுபிடிப்பு




மூவாயிரம் வருடங்களுக்கு முந்திய கல்லறைகள் ஹல்தும்முல்லைப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹல்தும்முல்லையின் வேஎலிய பிரதேசத்தில் தொல்பொருளியல் ஆய்வாளர்கள் குழுவொன்று மேற்கொண்ட அகழ்வுப் பணிகளின் போதே குறித்த கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்பொருளியல் துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவே பிரஸ்தாப அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டிருந்தது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய மூன்று கல்லறைகளையும், நினைவுத் தூபியையும் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.


குறித்த கல்லறைகள் தொடர்பான அகழ்வாராய்ச்சியை விரிவாக மேற்கொள்ளும்போது மலைநாட்டின் தென்பகுதிச் சரிவில் முற்காலத்தில் வளர்ச்சியடைந்திருந்த ஒரு விசேட நாகரிகப் பரம்பல் குறித்த விடயங்களை அறிந்து கொள்ள முடியுமாக இருக்கும் என்று அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்தையே கட்டுப்படுத்தியது! போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை



## அஸ்கிரிய மகாநாயக்க தேரர்

இலங்கையில் போர்க் குற்றங்கள் நிகழ்ந்ததாக எவர் குற்றம் சாட்டினாலும், அதில் உண்மையில்லை. பயங்கரவாத அமைப்பொன்று நாட்டு மக்களைப் படுகொலை செய்யும்போது எந்தவொரு அரசாங்கமும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்றும் அவர் வலியுறுத்துகின்றார். விடுதலைப் புலிகளுக்கெதிரான போரில் இலங்கை அரசாங்கம் போர்க்குற்றங்களை இழைத்துள்ளதாக வெளியாகியுள்ள ஐ.நா. அறிக்கை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே (பக்.19)

NEW CITY HARDWARE
No. 58, MESSENGER STREET, COLOMBO-12.
Tel: 011 7212213, 011 5830188, 0115857541 Fax: 011 2387744
E-Mail: newcityh@hotmail.com




**வாசகர்கள் மீள்பார்வையில் வெளிவரும் செய்திகள், ஆக்கங்கள் தொடர்பான தமது கருத்துக்களை வழமை போன்று கடிதம் மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பலாம். குறுஞ்செய்தி (SMS) மூலம் கருத்துக்களை அனுப்புவோர் தமது பெயர், ஊர் என்பவற்றை குறிப்பிட மறக்க வேண்டாம். (ஆ-ர்)**

கடந்த மீள்பார்வையில் கணவன் மனைவி கடமைகளும் உரிமைகளும் என்ற கட்டுரை குடும்ப வாழ்கைக்கு மிகப் பொருத்தமானது. அதனை வழங்கிய மீள்பார்வைக்கு எனது வாழ்த்துக்கள். **-எம்.எம். இமார், ஓட்டமாவடி -**

கடந்த மீள்பார்வைஇதழ் மிகச் சிறப்பாக இருந்தது. மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன். இரண்டு விமர்சனங்கள் இருக்கின்றன. பிழைகளைத் திருத்துவதில் இன்னும் கவனம் தேவை. உமர் முக்தாரின் பரம்பரையை வாழ விடுங்கள் என்ற தலைப்பு யாரிடமோ கெஞ்சுவதுபோல உள்ளது, இது வீரம் செறிந்த உமர் முக்தாரின் பணியல்ல. ஸஹாபாக்களின் வாழ்க்கை தொடர்பான ஆக்கங்களுக்கு அரைப்பக்கம் ஒதுக்குவது சிறந்ததாகும். **-முஹம்மத் தாஹா, பேருவளை -**

Student @ மீள்பார்வை பகுதி மிகச் சிறப்பாக உள்ளது. அதனை இன்னும் பல கல்வி தொடர்பான அம்சங்களுடன் வளர்த்திடுங்கள். அல்லாஹ் உதவி செய்வான். **- மீள்பார்வை வாசகர் -**

பொறியியலாளர் அப்துர் ரஹ்மானின் நேர்காணல் பாராட்டத்தக்கது. **-எம்.எம். அப்துர் ரஹ்மான் இக்பால் (நளீமி) மொறட்டுவ -**

கருத்து மாற்றுக் கருத்துப் பகுதி அனைவரையும் நிச்சயம் சிந்திக்க வைக்கும். மீள்பார்வையின் வளர்ச்சிக்கு இறைவன் அருள் புரிவானாக. **- என்.எம். நிப்ரான், ஹெட்டிபொல -**

மீள்பார்வையின் தஃவாப் பார்வை, Student @ மீள்பார்வை பகுதிகள் மிகச் சிறப்பாக உள்ளன.மீள்பார்வைக்கு நன்றிகள். **- எப்.டி.எஸ்., மருதானை / எம்.ஸீ.எம். மஃபூரா, மீராவோடை -**

பதினைந்து வருடத்தைத் தாண்டிய பயணம் இலட்சியத்தை அடைந்த புனித பயணமாக பிரார்த்திக்கிறேன். எம் சகோதரர்களின் நிலைமைகளை எனக்கு அறியத்தருவது மீள்பார்வைதான். வாழ்த்துக்கள். **- றியாப், வவுனியா பல்கலைக்கழகம் -**

Student @ மீள்பார்வையில்வந்த ரோஜா எனும் கதை சிறப்பாக இருந்தது. இது போன்று சிறுவர்களுக்கு விளங்கக் கூடிய கதைகளை பிரசுரிக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன். **-சஹ்லா ஹுஸைன்தீன், பட்டுபிடிய -**

கடந்த மீள்பார்வையில் வெளிவந்த கணவன், மனைவி கடமைகளும் உரிமைகளும் என்ற கட்டுரை என்னை மிகவும் கவர்ந்தது. விரைவில் திருமணத்தில் இணையவுள்ள எம் இருவருக்கும் மிகவும் பிரயோசனமாக இருந்தது. ஜஸாகல்லாஹ். **- ஸப்னா ஆயத்துல்லா, பேருவளை -**

மீள்பார்வைக்கு உடன்பாடில்லாத மாற்றுக் கருத்துக்களையும் பிரசுரிப்பது சிறந்தது. இலங்கையில் இஸ்லாமிய வங்கிகளை ஆரம்பிப்பது தொடர்பாக எழுதினால் சிறப்பாக இருக்கும். **- ஈ.எல்.எம். இர்ஸாத், மீராவோடை -**

வைத்திய ஆலோசனைகளை அதிகமாக பிரசுரிக்கவும். **-எம்.எம். ஸனூஸ், மீராவோடை -**

கடந்த இதழில் வெளியான கணவன், மனைவி கடமைகளும் உரிமைகளும் எனும் கட்டுரை இன்றைய காலத்திற்கு மிகவும் பொருத்தமானது. **-ஏ.எம். அக்ரம், மூதூர்-**

பெருமானாரின் இரக்கத்தில் கட்டுண்ட மூதாட்டி என்ற கவிதை என்னை மிகவும் கவர்ந்தது. மீள்பார்வையின் இந்தப் பணி தொடர துஆ செய்கிறேன். **-ஏ.ஜே.எம். பார்ஹான் வாழைச்சேனை -**

இஸ்லாமிய அழைப்புப் பணியில் காத்திரமான பங்களிப்பை மீள்பார்வை செய்கிறது. **-முஷ்பிக், பாணந்துறை -**

சிறந்த கட்டுரைகள் மூலம் இஸ்லாமிய அரசியலுக்கான முயற்சிகளை ஊக்குவிக்கலாம். **- ஹனீ, காத்தான்குடி -**

மீள்பார்வை அறிவுசார் பத்திரிகை. நான் அதனை முழுமையாக வாசிக்கின்றேன். Student @ மீள்பார்வை பகுதி மிகவும் சிறந்தது. **-எம். பாத்திமா ஸுஜா, காத்தான்குடி -**

இறுதியாக வெளியான மூன்று மீள்பார்வை இதழ்களும் இன்னும் இணையத் தளத்தில் பதிவேற்றப்படவில்லை. **-சியாம், திஹாரி-**

மீள்பார்வையில் வெளிவரும் சர்வதேசப் பார்வை மூலம் பல விடயங்களை தெரிந்து கொள்கின்றேன். ஜஸாகுமுல்லாஹ் **- ஸப்னா நௌபர், வரக்காபொல -**

மீள்பார்வையின் தரம் தொடர்ந்தும் பேணப்பட வேண்டும். **- இர்பான், தர்கா நகர் -**

காலத்தின் தேவை கருதி காலத்திற்கேற்ற வகையில் காத்திரமான ஆக்கங்களை வழங்கிவரும் மீள்பார்வைக்கு ஒரு ஆலோசனை; மீள்பார்வையை வாராந்த பத்திரிகையாக வெளிக்கொணர்வீர்களா? **- அஸ்லம், வெலிமட -**

இஸ்லாம் உலகை நிர்வகிக்க வேண்டும் என்ற நன்னோக்கில் வெளிவரும் மீள்பார்வையின் ஆசிரியர் குழாத்திற்கு நான் வாழ்த்துகிறேன், பிரார்த்திக்கிறேன். **- எம்.ஐ. நஸீர், வாழைச்சேனை -**

மீள்பார்வையின் தேடல் பகுதி என்னை அதிகம் கவர்ந்துள்ளது. இலங்கையில் சிறுபான்மையினராகிய எமக்கு இழைக்கப்படும் அநீதிகளும் அவற்றின் போது நாம் நடந்துகொள்ள வேண்டிய முறைகளும் பற்றிய கட்டுரை சிறப்பாக இருந்தது. **- ரிப்கான், வெலிகம -**

கருத்துக்களம்

**சொல்வதை தெளிவாகச் சொல்லுங்கள்**

கருத்துக் களத்தில் எழுதப்படுவன வாசகர்களின் கருத்துக்களே. மீள்பார்வையின் உத்தியோகபூர்வ கருத்தாக அவை இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை (ஆ-ர்)

# மனதைப் புண்படுத்தும் ஒரு சுவரொட்டி

நாட்டில் சமாதானம், நல்லிணக்கம், ஒற்றுமை, அபிவிருத்தி ஏற்படுவதற்காக அரசு துரிதமாகச் செயல்படும் வேளையில் அவற்றுக்குக் குந்தகம் விளைவிக்கும் செயல்கள் எங்கேனும் தெரிந்தோ, தெரியாமலோ நடந்தால் அவற்றைச் சுட்டிக் காட்டி, களையமுற்படுவது தேசாபிமானமுள்ள பிரஜைகளின் கடமையாகும்.

கம்பஹா மாவட்டத்திலுள்ள ஒரு பொலிஸ் நிலையத்தில் ''பொதுமக்கள் அலகு'' என்ற அறைக்குள் நுழையும் போது 'அநகாரிக தர்மபாலவின் எச்சரிக்கைகள்' என்ற சுவரொட்டியைக் காணலாம். அதில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் 'மாட்டிறைச்சி புசிக்காதீர்; மாட்டைக் கொலை செய்யாதீர்; மாட்டிறைச்சி புசிப்பவன் சக்கிலியன்' என்ற கூற்றும் ஒன்றாகும். இதில் இறுதியாகவுள்ள வசனம் மாட்டிறைச்சி புசிக்கும் இந்நாட்டு பிரஜைகளில் கணிசமான தொகையினரின் மனதைப் புண்படுத்துவதாகியுள்ளது.

மக்கள் பாதுகாப்பு, சமாதானம், நீதி மற்றும் பல தேவைகளை நாடிச்செல்லும் ஒரு பொது இடத்தில் இத்தகைய சுவரொட்டிகளைக் காட்சிப் படுத்துவதுதான் வேதனையைத் தருகின்றது. சம்பந்தப்பட்டோரின் மேலான கவனத்திற்கு இதனைத் தாழ்மையுடன் கொண்டு வருகிறேன்.

'சமாதான விரும்பி'
கஹட்டோவிட்ட

# தமிழ் - சிங்கள புத்தாண்டு கால பகுதி விபத்துக்களில் 18 பேர் உயிரிழப்பு, 600 க்கும் மேற்பட்டோர் காயம்

தமிழ் - சிங்கள புத்தாண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற வெவ்வேறு விபத்துக்களில் 18 பேர் உயிரிழந்துள்ளதுடன் 600 க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் விபத்துக்களின் போது உயிரிழந்திருப்பவர்களில் நால்வர் 12 வயதுக்கு குறைந்த சிறுவர்கள் என்றும், ஐவர் இளைஞர்கள் என்றும் ஏனையவர்கள் நடுத்தர மற்றும் முதுமை வயதை உடையவர்கள் என்றும் பொலிஸார் கூறினர்.

வாகன விபத்துக்கள், கத்திக்குத்து, கங்கைகளில் நீராடிய போது ஏற்பட்ட விபத்து மற்றும் உமா ஓயாவின் நீர்மட்டம் திடீரென உயர்ந்ததால் விபத்து என்பன காரணமாகவே இந்த உயிரிழப்புக்கள் இடம் பெற்றிருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

உங்கள் விளம்பரங்களை மீள்பார்வையில் விளம்பரம் செய்திட நாம் உங்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குகிறோம்.

விபரங்களுக்கு:
சகோதரர் ஹாரிஸ் 0777560222

**Diploma in Nursing**
(2nd Batch)

இன்று சுகாதார. வைத்தியத்துரையின் வேகமான வளர்ச்சி, பல தனியார் வைத்திய சாலைகளையும் மருத்துவ நிலையங்களையும் தோற்றுவித்துள்ளது. இதற்கு ஈடுகொடுக்கும் விதமாக Nursing, Pharmacy, MLT, Radiogrpahy போன்ற பாடநெறிகளில் மாணவர்களின் ஈடுபாடு அத்தியவசியமாகி உள்ளது.

AGRA கல்வி நிறுவனம் Pharmacy பாடநெறியுடன் இணைந்து Nursing பாட நெறியையும் ஆரம்பித்துள்ளது.

(Practical in Hospital)

அரசாங்கத்தின் NAITA மற்றும் TVEC ன் அங்கிகாரம் பெற்ற பாடத்திட்டம்

**Duration**
12 Months with 03 months Full time practical. (Practical in well established private hospitals)

**Medium**
Tamil and Sinhala With English Nursing Terminology

**Lecture Panel**
Highly qualified MBBS Doctors and professional Nurses in government hospitals.

**Pharmacy Course**
(Pharmaceutic)
நான்காவது Batch இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Qualification**
- O/L பரீட்சை எழுதியவர்கள் (இவர்களுக்கு AGRA வின் Course Certificate வழங்கப்படும்.)
- 3S in Maths / Science in A/L (இவர்களுக்கு Medical Council இன் Pharmacy Licence வழங்கப்படும்)

**Benefits**
- ☑ Pharmacy Licence பெறலாம்
- ☑ Pharmacy களிலும் Hospital களிலும் வேலை வாய்ப்பு
- ☑ Medical Company களில் Medical Rep வேலை வாய்ப்பு
- ☑ Dip. in. Pharm பாடநெறிக்கான முன் அனுமதி வாய்ப்பு.

Duration : 18 Months
Medium : English & Tamil

**Diploma in Nursery Teaching & Training**
- சிறார்களின் திறன்கள் குழந்தை உளவியல், பண்பாட்டு விருத்தி, மார்க்க விழுமியங்கள் என்பவற்றை இலக்காகக்கொண்டு கற்பிக்கப்படும் ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி.
- இத்துறையில் ஆறு மாத பாடநெறிகள் மூன்றினைப் பூர்தி செய்த அனுபவத்துடன் ஆக்ரா கல்வி நிறுவனம் ஒரு வருட பாடநெறியை ஆரம்பிக்கின்றது.

அரச அங்கீகாரம் பெற்ற ஒரு வருட பாடநெறி
DIPLOMA சான்றிதழ் வழங்கப்படும்

யாருக்கு?
- பாடசாலை கல்வியை முடித்தவர்கள்
- முன்பள்ளி ஆசிரியர்கள்
- அரபு, குர்ஆன் மத்ரஸா ஆசிரியர்கள்
- சர்வதேச பாடசாலை ஆசிரியர்கள்
- தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள்
- பெற்றோர்கள் போன்றோருக்கு

காலம்: 1 வருடம் (Theory & Practical)
தகைமை: G.C.E. A/L சித்தியடைந்திருத்தல்(3S) (இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) G.C.E. O/L பரீட்சை எழுதியிருத்தல்

விண்ணப்பம்: பெயர், முகவரி,TP இல. கல்வித்தகைமை. என்பவற்றுடன்தெரிவு செய்யும் பாட நெறியையும் குறிப்பிட்டு ஒரு சுய விண்ணப்பத்தை 16.05.2011 இற்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பவும்.

**ÂGRA Institute**
No. 66/20C, Ali Jinna Mw, Warapalana Road, Thihari - 11875.
Tel: 0718 07 37 97

மீள்பார்வை

ஆசிரிய பீடத்திலிருந்து...

Meelparvai Media Centre (MMC)
2 A, Hill Castle Place, Bandaranayake Mawatha, Colombo 12. Tel/Fax: 0112 336272
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# தனியார் துறையினருக்கான ஓய்வூதியம்: யாருடைய நலனுக்காக?

தனியார் துறையினருக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வரவு-செலவுத் திட்டத்தின் போது அறிவித்திருந்தார். யாருடைய பணத்திலிருந்து இதற்கான நிதி பெறப்படப் போகிறது என்ற கேள்வி வரவு-செலவுத் திட்ட உரையை அடுத்து எழுந்தது.

இதற்குப் பதிலளித்த அரச தரப்பு தொழில் வழங்குனர்களைப் பாதிக்காத அணுகுமுறை தொடர்பாக கருத்து வெளியிட்டது. அரசின் திரட்டு நிதியிலிருந்து இதற்கான நிதியை ஒதுக்குவதற்கு தற்போதுள்ள பொருளாதார நிலையில் அரசு தயாரில்லை.

அவ்வாறாயின், தொழிலாளர்களது நிதியிலிருந்தே இதற்கான பணம் பெறப்படப் போகிறது என்பது தெளிவாகிறது. இதனால் பல தொழிற்சங்கங்கள் கலவரமடைந்துள்ளன. இது தொழிலாளர்களை நேரடியாகப் பாதிக்கும் என்பதால் இந்த உத்தேச ஓய்வூதிய முறையை அவர்கள் எதிர்க்கின்றனர்.

ஏற்கனவே, ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மொத்த சம்பளத் தொகையில் 8 வீதத்தினை தொழிலாளர்கள் செலுத்துகின்றனர். மீதமுள்ள 12 வீதத்தை தொழில் வழங்குனர் செலுத்துகின்றார். அதேபோல ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான 3 வீதத்தை தொழில் வழங்குனரே செலுத்துகின்றார்.

மொத்தமாக சம்பளத் தொகையில் 23 வீதம் இவ்வாறு செலுத்தப்படுகிறது. புதிய ஓய்வூதியத்திற்காக இன்னும் 2 வீதம் தொழிலாளர்கள் செலுத்த வேண்டும் என்ற சட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளது. ஆக மொத்தம், சம்பளத் தொகையில் நான்கில் ஒரு பங்கு இவ்வாறு செலுத்தப்படப் போகிறது.

இந்த ஏற்பாடுகள் தொழிலாளர்களது நலனை அடிப்படையாகக் கொண்ட ஒன்று என்றே கூறப்படுவது வழக்கம். ஆனால், நடைமுறையில் அரசாங்கத்தின் பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் நிதியாகவே இது இருந்து வருகிறது.

ஏற்கனவே சம்பள அதிகரிப்புக்காக தொழிலாளர்கள் போராடி வருகின்றனர். இந்நிலையில் கையில் கிடைக்கும் சம்பளத் தொகையில் ஒரு சிறிய பகுதியை வெட்டுவது கூட அவர்களை அதிகளவு பாதிக்கும்.


தொழிலாளர் நலத் திட்டங்களை அரசு முன்னெடுப்பது வரவேற்புக்குரிய விடயம்தான். ஆயினும், அதன் சாதக பாதகங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டே இவ்விடயம் சட்டமாக்கப்பட வேண்டும்.

அரசுக்கு தற்போது பாராளுமன்றத்தில் போதியளவு பெரும்பான்மைப் பலம் இருப்பதால் வேகமாக சட்டங்களை ஆக்க முனைவது அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

எதிர்வரும் மே தினத்திற்கு முன்னர் இதனை பாராளுமன்றத்தில் சட்டமாக்குவதற்கு அரசு அதிக ஆர்வம் காட்டுகிறது. தொழிலாளர்களது உரிமையை உத்தரவாதப்படுத்துவதற்கு என குறியீட்டளவில் கருதப்படும் அந்நாளில் நமது தொழிலாளர்களுக்கு நல்ல செய்தியையே அரசு கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.

இது குறித்து அவர்களோடு கலந்தாலோசித்தே இறுதி முடிவுக்கு வர வேண்டும். யாருடைய நலனை மையமாகக் கொண்டு இந்தப் பணி முன்னெடுக்கப்படுகிறது என்பது எல்லாவற்றை விடவும் முக்கியமானது.

# இலங்கை பற்றிய பான் கீ மூனின் நிபுணர் குழுவின் அறிக்கை



டி.பி.எஸ்.ஜெயராஜ்



யுத்த வெற்றியானது மஹிந்த ராஜபக்ஷவின் புகழை அளவற்ற விதத்தில் உயர்த்தியுள்ளது. இந்த யுத்த வெற்றியின் பலத்தில்தான் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதோடு பாராளுமன்றத் தேர்தலிலும் உள்ளூராட்சி அதிகார சபைகளின் தேர்தல்களிலும் எதிர்ப்புகளை இல்லாதொழித்தது.

அப்படியான ஒரு பின்னணிக்கு எதிராக சர்வதேச விசாரணைக்கு சம்மதம் தெரிவிப்பது அவரது அரசியல் தற்கொலை போன்ற ஒன்றாகவிருக்கும். ஒரு உள்நாட்டு விசாரணை மேற்கொள்வது கூட அரசியல் பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். மேலும், அப்படியான ஒரு முயற்சி ஆயுதப் படையினரிடையே ஒரு கிளர்ச்சியை வெடிக்க வைக்கவும் கூடும்.

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும்** இடையே நடைபெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாகச் சொல்லப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் பொறுப்பு சுமத்தும் தன்மை ஆகியவற்றைப் பற்றி ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்காக அவரால் நியமிக்கப்பட்ட மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட நிபுணர் குழு தனது அறிக்கையை ஏப்ரல் 12ல் கையளித்துள்ளது.

ஊடகங்களின் ஒரு பகுதியினர் -குறிப்பாக தந்திச் சேவைகள்- நகரங்களெங்கிலும் இந்த அறிக்கையை ஐ.நா. அறிக்கை மற்றும் ஐ.நா. போர்க்குற்ற அறிக்கை என்றும் விபரித்துள்ளன. தெரிந்தோ தெரியாமலோ இந்த ஊடகங்களின் திரிபு அந்த அறிக்கைக்கு ஒரு உயர் முக்கியத்தை வழங்கிக் கௌரவித்துள்ளன. ஆனால் இறுதிக் கட்ட ஆராய்வுகளுக்கு அது பயன்படப் போவதில்லை.

இந்த நிலையில் குறிப்பிட்டுக் கூறவேண்டியது கேள்விக்கு உள்ளாகியிருக்கும் இந்த அறிக்கை ஐ.நா. அறிக்கையுமல்ல அல்லது ஐ.நா. போர்க் குற்ற அறிக்கையுமல்ல என்பதைத்தான்.

### சர்ச்சை

பான் கீ மூனுடைய எதிர்பார்ப்புகள் எவ்வாறிருப்பினும், நிபுணர் குழுவினது நியமனமும் மற்றும் அந்த நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட விடயங்களும் பிற்பாடு சர்ச்சைகளின் வலையில் அகப்பட்டுத் தத்தளித்தது என்னவோ மறுக்க முடியாத உண்மை. அறிக்கைகளில் அடங்கியுள்ள விடயங்**கள் பகிரங்கமாகுமிடத்து நிலமை இன்னமும் மோசமாக மாறலாம்.**

சில முன்னணி மேற்குலக நாடுகள் அறிக்கை வெளியான பிறகு இலங்கை மீது மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஐ.நா.வுக்கு அழுத்தங்களைச் செலுத்துவதற்கு முன்னேறலாம் என்பதற்கான சாத்தியங்கள் நிறையவே உள்ளன. இந்த முயற்சிகளை அங்கீகாரம் பெற்ற சில சர்வதேச மனித உரிமை அமைப்புகள், தமிழ் புலம் பெயர் சமூகக் குழுக்கள் மற்றும் உலகின் பிரபலமான ஊடகங்களின் சில பிரிவுகள் என்பன பின்தாங்கவும் செய்யலாம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இந்த நகர்வுகளை திடமாக எதிர்ப்பதுடன் விட்டுக் கொடுத்து அதற்கு இணங்கவும் மறுக்கலாம். ராஜபக்ஷவின் ஆட்சியைப் பற்றி என்னதான் வேறுபாடான எண்ணங்கள் இருந்தாலும் பெரும்பான்மையான இலங்கை மக்கள் இந்த ஒப்புக்கொள்ள மறுக்கும் குறிப்பிட்ட காட்சியில் தங்கள் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் உறுதியான ஆதரவினை வழங்குவார்கள்.

எதிர்க் கட்சிகள் கூட இந்த விடயத்தில் அரசாங்கத்துடன் ஒன்றுபடுவது பெரும்பாலும் நிகழக்கூடியதே. இந்த தேசிய நிலைப்பாட்டின் தத்துவத்தை கண்டுபிடிப்பது ஒன்றும் சிரமமான விடயமல்ல. பான் கீ மூனினால் இலங்கை மீது சுமத்தப்படும் மனித உரிமை மீறல்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்கள் போன்றவற்றிற்கான ஒரு பொறுப்**புக் கூறலை நிலைநாட்ட முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட போதே** இலங்கையில் அது கசப்புடன் எதிர்க்கப்பட்டது.

ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நிபுணர் குழு நியமிக்கப்பட்ட போதே இலங்கை தனது அதிருப்தியை கடுமையான வார்த்தைகளால் பதிவு செய்திருந்தது. அதற்கும் மேலாக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரும் தேசிய விடுதலை முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்சவினால் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாக ஒரு ஆர்ப்பாட்டம் அப்போது இடம் பெற்றது. வீரவன்ச தானே சாகும்வரையான ஒரு உண்ணாவிரதப் போராட்டத்திலும் அச்சமயம் இறங்கியிருந்தார்.

### காட்சிகள்


நிபுணர் குழுவின் அறிக்கை வெளியானதும் பதிலுக்கு எப்படியான காட்சிகள் அரங்கேறக் கூடும் என ஐ.நா. அச்சமடைந்திருந்தது. மார்ச் 31ல் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் தங்கள் ஊழியர்களுக்கு திரும்ப

(பக்.04)

A.J.

அபாயா தைப்பதற்கான
துணி வகைகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Dealers In Textiles & Specialist For
Abaya Materials



J.B SUPER MARKET
196E, Keyzer Street, Colombo - 11.
T.P. 2446696

# இலங்கை பற்றிய...

(03ம் பக்கத் தொடர்



வும் ஒரு இக்கட்டான நிலை உருவாகுமாக இருந்தால் அவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் எனக் கற்பிப்பதற்காக அவர்களுக்கு ஒருவகையான பயிற்சி இடம்பெற்றது.

அதற்கும் மேலாக அதிகாரிகள் அறிக்கையை கையளிக்கும் நிகழ்வும் கூடத் தாமதப் படுத்தப்பட்டது. மார்ச் மாதத்தில் அறிக்கை தயாராக இருந்தபோதிலும் இலங்கையில் ஏப்ரல் மாதத்தில் இடம்பெறும் சிங்கள-தமிழ் புத்தாண்டு கொண்டாட்ட காலத்துடன் அது ஒருங்கிணைய வேண்டும் என்ற காரணத்தால் அதன் வெளியீடு தாமதப்படுத்தப் பட்டது. விடுமுறை கால மனநிலை பாரிய ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றுகூடுவதை தடுக்கக்கூடும் என்று கணக்குக் கூட்டப்பட்டது.

இதுவரை எந்தவித எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் இடம்பெறவில்லை ஆனால்; அறிக்கை பகிரங்கமாக்கப்பட்ட பின்னரோ அல்லது புத்தாண்டு கொண்டாட்ட மகிழ்ச்சிகள் நிறைவடைந்த பின்னரோ அது இடம்பெறக் கூடிய வாய்ப்புகள் பலமாக உள்ளன. எப்படியாயினும் அரசாங்கம் தனது சொந்தக் காரணங்களுக்காக கீழிறங்கி வந்தால் மட்டுமே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அநேகமாக இல்லாமல் போகலாம்.

எதிர்பார்த்ததைப் போலவே அரசாங்கம் அறிக்கையினை நிராகரித்துள்ளது. வெளிவிவகார அமைச்சு அறிக்கை கிடைக்கப் பெற்றதும் ஒரு காரமான அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

இது தெளிவுபடுத்துவது வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் கூட தாங்கள் அறிக்கையினைப் பற்றி படித்து தெரிந்த விமர்சனங்களை வெளியிட்டது புத்தாண்டு கொண்டாட்டங்கள் முடிவுற்ற பிறகே. அமைச்சு அதிகாரிகளின் வெறுப்பு அவர்களது அறிவிப்பில் ஐ.நா. செயலாளர் நாயகம் என்பதில் ஐ.நா. என்பது தவிர்க்கப்பட்டிருப்பதிலிருந்தே கண்கூடாக காணக் கூடியதாக உள்ளது. அது வெறுமனே செயலாளர் நாயகம் என்று மட்டுமே குறிப்பிடுகிறது. ஐ.நா. செயலாளர் நாயகம் என்றல்ல.

## இழப்புகள்

யுத்தம் முடிவடைந்ததும் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இறுதிக் கட்ட யுத்தம் நிகழ்ந்த முள்ளிவாய்க்கால் பகுதியை விமானத்தில் பறந்த படியே அவர் பார்வையிட்டார். அங்கு சென்று திரும்பிய பின் அங்கு ஏராளமான பொது மக்களின் இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம். ஏனெனில், பெரியளவு சனத்தொகை உக்கிரமான போர் நடைபெற்ற சிறிய ஒரு பிரதேசத்தில் அடைபட்டுக் கொண்டது என ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ராஜபக்ஷவைச் சந்தித்தபின் 23 மே, 2009ல் ஒரு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்புத்தான் ஐ.நா. வட்டாரங்களில் இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்கான ஒரு பொறிமுறையை அமைப்பதற்கான ஆதாரமாகத் தெரிவிக்கப் பட்டது.

இந்தக் கூட்டறிக்கையை ஆழமாகப் பரிசீலித்தால் அது வெளிப்படுத்துவது பான் கீ மூன் தனது மனக் கண்ணில் கண்டது போல இந்தப் பொறுப்புக் கூறும் பொறிமுறை ஒன்றை அமைப்பதைப் பற்றி தெளிவான அல்லது திடமான உறுதிப்பாட்டை அல்லது வாக்குறுதியை இலங்கை வழங்கவில்லை. அறிக்கையின் இறுதிப் பந்தியில் இதற்குப் பொருத்தமான பாதை உள்ளது.


அது தெரிவிப்பது; மனித உரிமைகளைப் பாதுகாப்பதனை முன்னேற்றுவதிலும் அதனை சர்வதேச மனித உரிமைத் தரங்களுடன் பேணுவதற்கும் மற்றும் இலங்கையின் சர்வதேசக் கடப்பாடுகளை காப்பதற்கும் இலங்கை கடும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்பதை வலியுறுத்தித் தெரிவிக்கிறது என்று.

அந்தப் பந்தியின்படி -செயலாளர் நாயகம் சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்டங்கள் மீறப்பட்டதனை பரிகரிப்பதற்காக ஒரு பொறுப்புக் கூறும் நடைமுறையின் முக்கியத்துவத்தை உறுதியாக வரைவிட்டுக் காட்டியுள்ளார் என்று தெரிவிப்பதோடு, பிறகு கூறுவது அந்தத் துயரங்களை ஈடு செய்வதற்குத் தேவையான நடைமுறைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்று.

## பொறுப்பு கூறும் தன்மை

இதிலிருந்து தெரிந்து கொள்ளக் கூடியது; இலங்கை அரசாங்கம் சர்வதேச பொறுப்புக் கூறும் நடைமுறையினையோ அல்லது பொறிமுறையையோ தான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறுவது அதன் உறுதியான நிலைப்பாடுதான் என்பதனையே. கூட்டறிக்கை பல மேற்கோள்களை தெரிவிக்கிறது. ஆனாலும், திட்டமாக உறுதிப்படுத்தப்பட்ட சான்று அதிலில்லை.

இலங்கையின் இறையாண்மையைப் பொறுத்தமட்டில் ராஜபக்ஷ ஆட்சி விட்டுக்கொடுப்பில்லாமல் கடைப்பிடித்து வரும் போக்கினை நோக்கும்போது வெளிநாடுகளின் தலையீடுகளுக்கு ஜனாதிபதி இசைவது சாத்தியம் போலத் தெரியவில்லை. எப்படியாயினும், கூட்டறிக்கையில் உள்ள வார்த்தைகள் பொறுப்புக் கூறும் பொறிமுறை ஒன்றை அமைப்பது பற்றிய கோரிக்கையுடன் ஒத்துப் போகவில்லை.



எப்படியாயினும், என்ன நடந்தது என்றால் ஆரம்பத்தில் ஐ.நா.வும் அமெரிக்காவைப் போன்ற ஏனைய மேற்கு நாடுகளும் இறுதிக் கட்டப் போரில் நடந்தவைகளைப் பற்றி விசாரணை செய்து சாத்தியமான போர்க் குற்றங்களைக் கண்டறிந்து அதற்கு யாராவது பொறுப்பாக இருந்தால் அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்காக இலங்கை தனது சொந்தப் பொறிமுறையினை அமைப்பதனையே விரும்பியிருந்தன. ஆனால் இது தொடர்பில் இலங்கை அதற்கு நேர் எதிரான நிலைப்பாட்டையே எடுத்தது.

சாத்தியமான மனித உரிமை மீறல்களோ அல்லது யுத்தக் குற்றங்களோ நிகழ்ந்துள்ளனவா என்கிற கேள்விக்கு இலங்கையின் உத்தியோகபூர்வமான நிலைப்பாடாக விரைவான மறுதலிப்பே பதிலாக இருந்தது. அப்படியான மீறல்களோ அல்லது குற்றங்களோ நடக்கவில்லை என்பதே கொழும்பின் நிலைப்பாடாக இருந்தது.

இந்தக் கண்ணோட்டத்தில் பேச்சாற்றல் திறத்துடன் ஜனாதிபதி ராஜபக்ஷ, இராணுவ வீரர்கள் போரிட்டது, ஆயுதத்தை ஒரு கையிலும் மனித உரிமைச் சட்டங்களை மறுகையிலும் ஏந்தியவாறு என்றே விளக்கமளித்தார். பொறுப்புக் கூறும் பொறிமுறை ஒன்றை அமைப்பது இந்த நிலைக்கு முற்றிலும் எதிர்மாறானது.

எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை இராணுவம் போரின் வெற்றியாளர்கள். உலகமெங்கும் சக்தி வாய்ந்த பயங்கரவாத இயக்கமென கண்டிக்கப்பட்ட ஒரு அமைப்பினை அவர்கள் தோற்கடித்துள்ளார்கள். இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெற்ற அவர்களின் நடத்தையைப் பற்றி விசாரணை நடத்துவதற்காக ஒரு பொறுப்புக் கூறும் நடவடிக்கை அமைப்பினை ஏற்படுத்துவது, வெற்றி வீரர்களை தோல்வியடைந்தவர்களைப் போல நடத்துவதற்கு சமமானதாகவும் வெற்றியாளரின் நீதி முறையிலிருந்து விலகி தண்டனை வழங்கியது போலவும், கொழும்பின் அதிகார சக்தியின் வாயில்களை உணர்ச்சிகள் ஆட்கொள்ளும்.

மேலும், யுத்தத்தின் பின் ஆயுதப்படையினர் வெற்றி நாயகர்களின் அந்தஸ்தைப் பெற்றுவிட்ட படியால் அவர்களின் அந்த பிம்பத்தினை மழுங்கடிக்க மேற்கொள்வதாக உணரப்படும் எந்த முயற்சியும் பெரும்பாலான மக்களின் கடுஞ்சினத்தை கிளறிவிடக் கூடும்.

இதைத் தவிர யுத்த வெற்றியானது மகிந்த ராஜபக்ஷவின் புகழை அளவற்ற விதத்தில் உயர்த்தியுள்ளது. இந்த யுத்த வெற்றியின் பலத்தில்தான் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதோடு பாராளுமன்றத் தேர்தலிலும் உள்ளூராட்சி அதிகார சபைகளின் தேர்தல்களிலும் எதிர்ப்புகளை இல்லாதொழித்தது.

அப்படியான ஒரு பின்னணிக்கு எதிராக சர்வதேச விசாரணைக்கு சம்மதம் தெரிவிப்பது அவரது அரசியல் தற்கொலை போன்ற ஒன்றாகவிருக்கும். ஒரு உள்நாட்டு விசாரணை மேற்கொள்வதுகூட அரசியல் பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். மேலும் அப்படியான ஒரு முயற்சி ஆயுதப் படையினரிடையே ஒரு கிளர்ச்சியை வெடிக்க வைக்கவும் கூடும்.

## யதார்த்தமற்றது

இவ்வாறான சூழ்நிலைகளில் ஐ.நா.வும் இதர சில மேற்கு நாடுகளும் ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் பொறுப்புக்கூறும் நடைமுறையை அமைக்க சம்மதத்தை எதிர்பார்ப்பது தீவிர யதார்த்தமற்ற செயல். தரப்பட்ட கடுஞ்சிக்கலான இலங்கையின் சூழ்நிலைப் பரிமாணங்களில் அது சாத்தியப்படாத ஒன்று.

எதிர்காலத்தில் ஒரு ஐ.தே.க ஜனாதிபதி வந்தால்கூட அமைதியின்மை மற்றும் அரசியல் தில்லுமுல்லுகளால் ஏற்படக்கூடிய ஆபத்துகளைச் சந்திக்காமல் ஆயுதப் படையினரின் நடத்தைகளை விசாரிப்பது இயலாத காரியம்.

இது ஒரு பொறுப்புக் கூறும் நடவடிக்கையை பான் கீ மூன் தேடுவது தவறு என்று கூறவில்லை. இலங்கையில் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் அப்படியான எதிர்பார்ப்புகள் உகந்தவையாக அமையாது என்பதை மட்டும் கருதுகிறது. அந்தப் பருப்பு இந்தத் தண்ணீரில் அவியாது.

அப்படியான ஒரு நிலையில் இந்த விடயம் பற்றி திரைமறைவில் சண்டைகள் இடம்பெற்றன. சில மேற்கத்தைய நாடுகளின் பின்பலத்தோடு ஐ.நா. இலங்கையை ஒரு பொறுப்புக் கூற வைக்கும் நடைமுறையை அமைக்க வைக்க தன்னால் இயன்றளவு முயற்சி செய்தது. இது ராஜபக்ஸ ஆட்சியினால் பலமாக எதிர்க்கப் பட்டது.

இதில் குறிப்பிட வேண்டியது அந்த நேரத்தில் இந்த முயற்சிகளில் இந்தியா தனது பங்களிப்பைச் செலுத்தவில்லை. இந்தியாவுக்கு தேவையாக இருந்தது இலங்கை யுத்தத்தை ஒருபுறமாக வைத்துவிட்டு மறுவாழ்வு, மறு கட்டமைப்பு மற்றும் அரசியல் தீர்வு போன்ற நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்பதே.

ஐ.நா. மற்றும் சில மேற்கத்தைய நாடுகள் இன நல்லிணக்கத்துக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் பொறுப்புக்கூற வைக்கும் நடைமுறை ஒரு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய விடயம் என்பதற்கு தொடர்ந்தும் முக்கியத்துவம் கொடுத்து வந்தன.

தனது சொந்த பொறுப்புக் கூறும் அமைப்பினை ஏற்படுத்துமாறு பான் கீ மூன் இலங்கை மீது தீவிர முயற்சிகள் மேற்கொண்ட போதிலும், ஜனாதிபதி ராஜபக்ஷ அதற்கு இணங்கவில்லை. இறுதியாக ஏமாற்றமடைந்த ஐ.நா. செயலாளர் நாயகம் தனது சொந்தக் குழுவை இது சம்பந்தமாகத் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கத் தீர்மானித்தார்.

அதன்படி பான் கீ மூன் தனது திட்டங்களின்படி இலங்கை அரசாங்கத்தின் எதிர்ப்பினையும் பொருட்படுத்தாது முன்சென்று குழுவினை நியமித்தார். ஊசலினோடு தேவையற்ற கழிவுகள் மோதிக் கொண்டன.

தமிழில் எஸ்.குமார்

(குறிப்பு: விடயப் பொருத்தம், காலப் பொருத்தம் கருதியே இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது. மூலக் கட்டுரை மிக நீண்டது. இடநெருக்கடி காரணமாக அவற்றின் மிக முக்கியமான பகுதிகளை மட்டும் தெரிந்தெடுத்து இங்கு தந்துள்ளோம். இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம்.)

# இஸ்லாமிய நிதி நிறுவனங்கள் இலாபத்தை மாத்திரம் நோக்காகக் கொண்டவையல்ல



கலாநிதி எஸ்.எம்.எம். நபீஸ் (நளிமி)

கலாநிதி எஸ்.எம்.எம். நபீஸ் அவர்கள் மன்னார் பண்டாரவெளியைச் சேர்ந்தவர். 1996ம் ஆண்டு பேருவலை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தில் பட்டம் பெற்று வெளியேறினார். பின்னர் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தில் LLB பட்டம் பெற்றார். அதனைத் தொடர்ந்து சட்டக் கல்லூரியில் Attorney At Law பட்டம் பெற்றார். பின் முதுகலைமாணி மற்றும் கலாநிதிப் பட்டப் படிப்பை மலேசியா சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் நிறைவுசெய்தார்.

இஸ்லாமிய பொருளாதார சட்டத்துறையில் தனது பட்டத்தைப் பெற்றுள்ள ஷெய்க் நபீஸ் அவர்களின் ஆய்வுக் கட்டுரை Evolution, Legal and Regulatory issues and dispute resolution in the islamic Banking Industry in Sri Lanka என்பதாகும். இவர் இதுவரையில் மூன்று சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கலாநிதி நபீஸ் அவர்களுடன் மீள்பார்வை மேற்கொண்ட நேர்காணலை வாசகர்களோடு பகிர்ந்துகொள்கிறோம்.

சந்திப்பு: இன்ஸாப் ஸலாஹுதீன்

★ உங்களது ஆய்வுக் கட்டுரை இஸ்லாமிய பொருளாதாரத்தில் ஒரு முக்கியமான துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உங்களது ஆய்வுக் கட்டுரை குறித்துச் சொல்ல முடியுமா?

இலங்கையில் இஸ்லாமிய வங்கித் தொழிலின் அபிவிருத்தி, சட்ட, ஒழுங்கமைத்தல் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அது தொடர்பாக எழும் பிணக்குகளை தீர்த்து வைக்கும் ஓர் ஆய்வாகவே எனது ஆய்வு அமைந்திருக்கின்றது. இது சட்டம் சம்பந்தப்பட்ட ஆய்வு என்பதால் சட்டம் தொடர்பான விடயங்களையே பெரிதும் உள்ளடக்கியுள்ளேன். முதலில் இஸ்லாமிய வங்கி தொடர்பான ஓர் அறிமுகம் இடம்பெறுகிறது. அடுத்து ஐக்கிய இராச்சியத்தையும் பஹ்ரைனையும் ஒரு முன்மாதிரியாக ஆய்வில் எடுத்துள்ளேன். ஏனெனில், UK ஒரு முஸ்லிமல்லாத நாடு. அதேநேரம் UK யின் சட்டங்களைப் பின்பற்றுகின்ற மரபு இலங்கைக் கலாசாரத்திலும் இருக்கின்றது. மற்றது பஹ்ரைன் ஒரு முஸ்லிம் நாடு என்பதால் ஷரீஆவின் வளர்ச்சியும் அங்கு அதிகமாக இருக்கின்றது. எனவே இரண்டு நாட்டினதும் நல்ல அம்சங்களை நாம் உள்வாங்கிக்கொள்ள முடியும்.

ஆய்வின் அடுத்த பகுதிகள் இலங்கை குறித்தே பேசுகின்றன. இலங்கையில் இஸ்லாமிய வங்கியை கொண்டு நடாத்துவதில் எத்தகைய சட்டப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பது பற்றிய ஆய்வு இடம்பெறுகின்றது. உரிமங்களைப் பெற்றுக் கொள்வதில் ஏற்படும் தாமதம், இஸ்லாமிய வங்கி ஒரே நேரம் ஸகாத்தையும் வரியையும் செலுத்த வேண்டி வருதல் போன்ற பிரச்சினைகளை இதற்கு உதாரணமாகச் சொல்ல முடியும்.

இறுதியாக இஸ்லாமிய வங்கிகளுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையில் பிணக்குகள் ஏற்படும்போது எந்த அடிப்படையில் நடந்துகொள்வது என்பது தொடர்பாக ஆராய்ந்துள்ளேன். நீதிமன்றத்திற்குப் பதிலாக நான் ஒரு மாற்று வழியை ஆய்வில் முன்வைக்கின்றேன். அதுதான் Arbitration முறையாகும். அதாவது பிரச்சினைகளை நீதிமன்றத்திற்கு வெளியில் தீர்த்துக்கொள்ளும் முறையை இது குறிக்கின்றது. அதாவது பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவர்கள் நடுவர்களை நியமித்து தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதாகும். இதற்கு 1995ம் ஆண்டு 11ம் இலக்க Arbitration சட்டம் வழிவகுக்கின்றது.

இலங்கையில் எந்த இஸ்லாமிய நிதி நிறுவனங்களும் இதனைப் பின்பற்றுவதில்லை. இங்கு சிறந்த நடுவர்கள் இல்லையென்றால் வெளிநாடுகளிலிருந்து நடுவர்களை அழைப்பதற்கான சட்ட ஏற்பாடு இலங்கைச் சட்டத்தில் காணப்படுகின்றது. அதேபோல, வெளிநாடுகளில் செய்யப்படுகின்ற ஒப்பந்தங்களைக் கூட இங்கு நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பு இந்த சட்டத்தினூடாக காணப்படுகின்றது.

எனவே, எனது ஆய்வினூடாக இச்சட்டத்தை இஸ்லாமிய நிதி நிறுவனங்களுக்கு குறிப்பாகவும் ஏனையவைகளுக்குப் பொதுவாகவும் நான் முன்மொழிந்திருக்கிறேன்.

★ இலங்கையிலுள்ள பாரம்பரிய வங்கிகள் இஸ்லாமிய வங்கி முறைமைகளை ஆரம்பிக்கின்றன. இவை இஸ்லாமியத் தன்மையை பேணுவது குறித்து சொல்லுங்கள்...

இலங்கையில் மட்டுமல்லாது ஏனைய நாடுகளிலும் இஸ்லாமிய வங்கி மற்றும் நிதிமுறை வேகமாக வளர்ந்து வருகின்றது. இலங்கை போன்ற முஸ்லிம் அல்லாத நாடுகளில் உள்ள பிரச்சினை என்னவென்றால் இந்தத் துறையில் கற்ற இஸ்லாமியர்கள் இல்லாததன் காரணமாக பாரம்பரிய வங்கிகளில் ஏற்கனவே பணிபுரிகின்றவர்களை வைத்துத்தான் நாம் இஸ்லாமிய வங்கிகளை ஆரம்பிக்க வேண்டியிருக்கின்றது. எனவே, அவர்களுக்கு ஷரீஆ குறித்தோ இஸ்லாமிய பொருளாதார ஒழுங்குகள் குறித்தோ எந்த அறிவும் இருக்காது. எனவே அவர்கள் இலாபத்தை உச்சப்படுத்துவதனை மட்டுமே நோக்காகக் கொண்டுதான் செயற்படுவார்கள்.

இஸ்லாமியப் பொருளாதார முறையை நன்கு விளங்கியவர்கள் இந்த நிறுவனங்களில் இல்லாமையினால் இஸ்லாமியத் தன்மையைப் பேணுவதில் சிக்கல்கள் இருக்கின்றன. எனவே, இஸ்லாமிய இயக்கங்கள் இத்தகைய நிதிநிறுவனங்களை ஆரம்பித்து முன்மாதிரியாக நடத்த முடியுமானால் மற்றவர்களும் அதிலிருந்து கற்றுக்கொள்ள முடியுமாக இருக்கும் எனக் கருதுகின்றேன்.

★ இஸ்லாமிய வங்கித் துறையில் கற்பதற்கான வாய்ப்புக்கள் குறித்து சொல்ல முடியுமா?



ஷெய்க் யூசுப் அல் கர்ளாவியுடன் கலாநிதி நபீஸ்

> இலங்கையில் இஸ்லாமியப் பொருளாதாரம் என்று பேசுகின்றபோது உலமாக்கள் இத்துறையில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் அது இஸ்லாத்தின் பெயரால் நடக்கக் கூடி யது. எனவே, யாரும் ஏமாற்றப் படக் கூடாது. யாருடைய பணமும் அபகரிக் கப்படக் கூடாது. இஸ்லாமிய வங்கி முறையின் தோல்வி சில வேளை, இஸ்லாத்தின் தோல்வி யாகக் கருதப்படலாம்.

இத்துறையில் கற்பதற்கு நிறைய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. குறிப்பாக மலேசியா, UK போன்ற நாடுகளில் இதற்கான வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. மலேசியாவில் டிப்ளோமாவிலிருந்து கலாநிதிப் பட்டம் வரை ஒருவர் கற்க முடியும். மலேசியாவின் மத்திய வங்கியினால் நடத்தப்படுகின்ற INSIF என்ற நிறுவனமும் பாடநெறிகளை நடாத்துகின்றன. மலேசியா சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்திலும் ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன.

அதேபோல லண்டன்துர்ஹாம் பல்கலைக்கழகம், Institute of Islamic Banking and Insurance போன்றவற்றிலும் கற்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. சில கற்கைநெறிகளை online மூலமும் கற்க முடியும். மேற்படி கற்கை நெறிகளுக்குப் புலமைப் பரிசில்களும் இருக்கின்றன.

புதிய துறைகளில் கற்கத் தூண்டுவது, அதற்கு உதவி செய்வது, அதற்கான வழிகளைக் காட்டிக் கொடுப்பது என்பது எமது சூழலில் மிகவும் அரிதாகத்தான் இருக்கின்றது. எனவே, புதிய கற்கை நெறிகளை இஸ்லாமிய கலாநிலையங்கள் முதலில் தமது மாணவர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும். அதனைக் கற்கத் தூண்ட வேண்டும் என்பதையும் இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

★ இலங்கையில் இஸ்லாமிய வங்கித் துறையின் வளர்ச்சி பற்றிக் கூறுங்கள்?

இலங்கையில் இஸ்லாமிய வங்கி முறையின் ஆரம்பம் பற்றிப் பேசும்போது அக்குறணையில் மௌலவி காலித் அவர்களால் முதலில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது எனச் சொல்லப்படுகின்றது. ஆனால், அது உரிய தாக்கத்தையும் தூண்டுதலையும் இந்த நாட்டில் ஏற்படுத்தவில்லை.

1990களில் சில புத்திஜீவிகளும் தனவந்தர்களும் இஸ்லாமிய வங்கிமுறை ஒன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். வங்கித் துறையில் மிகவும் பிரபல்யமான பாகிஸ்தானைச் சேர்ந்த தகீ உஸ்மானி அவர்களை இங்கு வரவழைத்து இலங்கையில் இஸ்லாமிய வங்கியொன்றை ஸ்தாபிக்க முடியுமா என பல கலந்துரையாடல்கள் நடைபெற்றதன் பின், 1997ம் ஆண்டு Amana Investment Ltd இங்கு உருவாக்கப்பட்டது. அமானா இலங்கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. வட்டியில்லாமல் ஒரு நிதி நிறுவனம் எப்படி இயங்க முடியும் என்பதனை அது காட்டியது. எனவே, 1997ம் ஆண்டைத்தான் இலங்கையில் இஸ்லாமிய வங்கி முறையின் தோற்றம் எனச் சொல்வது பொருத்தமாக இருக்கும். இன்று அதற்கு மத்திய வங்கியினால் வங்கியாகத் தொழிற்படுவதற்கான உரிமம் வழங்கப்பட்டிருக்கின்றது என்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

இது தவிர மாவனல்லை, திஹாரிய, புத்தளம், அழுத்கமை போன்ற ஊர்களிலும் இஸ்லாமிய நிதி நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. அதேநேரம், பாரம்பரிய வங்கிகளும் Islamic Windowகளை ஆரம்பித்தன. இஸ்லாமிய வங்கி முறை என்பது மனசாட்சிக்குப் பொருத்தமானது. எந்தவொரு உள்ளமும் ஏற்றுக்கொள்ளக் கூடியது. எதிர்காலத்தில் இலங்கையில் இஸ்லாமிய நிதிநிறுவனங்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கின்றது. இதனை முறையாகச் செய்தால் தென்னாசியாவில் இலங்கையை இஸ்லாமிய பொருளாதாரத்திற்கான ஒரு கேந்திர நிலையமாக மாற்ற முடியும். ஏனென்றால் இந்தியாவில் கூட மத்திய வங்கி இஸ்லாமிய பொருளாதாரத்தை அறிமுகப்படுத்த இன்னும் தயங்குகின்றது.

அதேபோல மாலைதீவிலும் அதற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை. எனவே, இலங்கையில் இதனை முறையாக மேற்கொள்ள முடியுமாக இருந்தால் வெளிநாட்டு வாடிக்கையாளர்களையும் கவர்வதற்கான வாய்ப்பு இருக்கின்றது.

மற்றது இலங்கையில் இஸ்லாமியப் பொருளாதாரம் என்று பேசுகின்றபோது உலமாக்கள் இதில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் அது இஸ்லாத்தின் பெயரால் நடக்கக் கூடியது. எனவே, யாரும் ஏமாற்றப்படக் கூடாது. யாருடைய பணமும் அபகரிக்கப்படக் கூடாது. இஸ்லாமிய வங்கி முறையின் தோல்வி சில வேளை, இஸ்லாத்தின் தோல்வியாகக் கருதப்படலாம். எனவே, சமகாலத்தில் இத்துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் தூய்மையுடனும் பரஸ்பர ஒத்துழைப்புடனும் செயற்பட வேண்டும். ஏனெனில், இது வியாபாரம் மட்டுமல்ல. ஒரு கொள்கையுமாகும்.

## ஊழலை ஒழிக்க இன்டர்போல் அக்கறை

சர்வதேச அளவில் ஊழலை ஒழிக்க உலக வங்கியும், சர்வதேச பொலீஸ் அமைப்பும் (இன்டர்போல்) தீர்மானம் இயற்றியுள்ளன. வொஷிங்டனில் நடந்த கூட்டத்தில் உலக வங்கி தலைவர் ரொபர்ட் ஜோலிக், இன்டர்போல் தலைவர் பூன் ஹூய் கூ, சர்வதேச கிரிமினல் கோர்ட் வக்கில் லூயிஸ் மொரினோ, பிரிட்டன் குற்றத்தடுப்பு இயக்குனர் ரிச்சர்ட் அல்டர்மேன், ஐரோப்பிய குற்றத்தடுப்பு பணிப்பாளர் ஜெனரல் ஜியோவானி கெஸ்லர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உலகம் முழுவதும் ஊழலை ஒக்க, இந்த கூட்டத்தில் தீர்மானம் இயற்றப்பட்டது. ''ஏழைகளின் பணத்தைச் சுரண்டும் ஊழல், சட்டப்படி குற்றத்துக்குரியது' என தெரிவித்த உலக வங்கி தலைவர் ரொபர்ட் ஜோலிக், ''வளரும் நாடுகளின் வளர்ச்சியைத் தடுக்கும் பல்வேறு வகையான ஊழல்களை இந்த தீர்மானம் தடுக்க வழி செய்யும்'' என்றார்.

சர்வதேச ஒத்துழைப்பும், தொழில்நுட்ப ஒத்துழைப்பும் தேவை என இந்த தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது. இன்டர்போல், பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய குற்றத்தடுப்பு அமைப்பு உள்ளிட்ட அமைப்புகளின் தலைவர்கள், ஊழலைத் தடுக்க முழு ஒத்துழைப்பு அளிப்பதாக உறுதியளித்தனர்.

## அணுக்கசிவு இலங்கை கடல் நீரில் கலந்துள்ளதா என்பது தொடர்பில் ஆய்வு

ஜப்பான் புகுசிமா அணு உலையில் ஏற்பட்ட அணுக்கசிவு இலங்கையை சூழவுள்ள கடல் நீரில் கலந்துள்ளதா என்பது குறித்து இலங்கை அணு சக்தி அதிகார சபை ஆய்வு நடத்தி வருவதாக அதன் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபேவிக்ரம கூறினார்.

இதற்காக கிழக்கில் இருந்து தென்பகுதி வரையான கடற்பகுதியில் இருந்து கடல் நீர் மாதிரிகள் பெறப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சமுத்திர மாசு தடுப்பு தொடர்பான அதிகார சபை, கடற்படையின் உதவியுடன் கடல் நீர் மாதிரிகளை பெற்று வருகிறது. இதுவரை 6 இடங்களில் இருந்து கடல் நீர் மாதிரிகள் கிடைத்துள்ளதாக கூறிய பேராசிரியர் அபேவிக்ரம அவற்றை பரிசோதித்து வருவதாக கூறினார்.

கடல் நீரில் அணுக்கசிவு கலந்துள்ளதா என்பது குறித்து மக்கள் அஞ்சத் தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.




## சட்டக் கல்லூரி முஸ்லிம் மஜ்லிஸினால் மீஸான் சஞ்சிகை வெளியீடு





இலங்கைச் சட்டக் கல்லூரி முஸ்லிம் மஜ்லிஸினால் வருடாந்தம் வெளியிடப்படுகின்ற ''மீஸான்'' சட்டக் கட்டுரைகள் அடங்கிய சஞ்சிகை வெளியீடு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் இலங்கைச் சட்டக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் அவர்கள் கலந்துகொள்ளவுள்ளார். அத்துடன் சட்டக் கல்லூரி முஸ்லிம் மஜ்லிஸின் சிரேஷ்ட பொருளாளரான, சட்டத்தரணி கௌஸுல் அமீன் மற்றும் இலங்கை உயர்நீதிமன்ற நீதிபதி சலீம் மர்ஸூப் ஆகியோரும் அதிதிகளாக கலந்து கொள்வர்.

மீஸான் சஞ்சிகையானது இம்முறை 45வது வருட இதழாக வெளிவருவதுடன், இதில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், ஜனாதிபதி சட்டத்தரணிகள், மற்றும் கல்வியியலாளர்கள் ஆகியோரின் கட்டுரைகளும் காணப்படுகின்றன.

இந்நிகழ்வில் சட்டத்தரணிகள் மற்றும் சட்டமாணவர்கள் என்பவர்கள் கலந்து கொள்வது வரவேற்கப்படுவதுடன், இந்நிகழ்வினை இலங்கைச் சட்டக் கல்லூரி முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாடு செய்துள்ளது.

## எஸ்.எல்.எம் ஹனீபாவின் எழுத்தும் வாழ்வும் அறிகைக்கான ஒன்றுகூடல்



ஏபிஎம் மீடியா அனுசரணையில் கல்குடா முஸ்லிம்.கொம் நடாத்திய எஸ்.எல்.எம் ஹனீபாவின் எழுத்தும் வாழ்வும் அறிகைக்கான ஒன்றுகூடல் 03,04,2011 (ஞாயிறு) நடைபெற்றது. இந் நிகழ்வில் கல்குடா பிரதேசத்தின் பிரபல இலக்கியவாதிகளும் இளம் படைப்பாளர்களும் கலந்து கொண்டனர். (தகவல் ஈ,எல்எம்,இர்சாத்)

## இலத்திரனியல் ஊடகம் தொடர்பான டிப்ளோமா கற்கை நெறி

வாமி ஊடகப் பிரிவு இலத்திரனியல் ஊடகம் தொடர்பான மூன்று மாத கால டிப்ளோமா கற்கை நெறியொன்றை நடாத்த திட்டமிட்டுள்ளது. இம்மாத இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ள இக்கற்கை நெறியில் ஆண், பெண் ஆகிய இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.

தமிழ் மொழி மூலம் நடைபெறவுள்ள இக்கற்கை நெறி சனிக்கிழமைகளில் காலை 09.00 முதல் 12.00 மணிவரை வாமி நிறுவனத்தில் நடைபெறும்.

இவ்வகுப்பில் கலந்து கொள்ள விரும்புவோர் தமது சுய விபரக் கோவையை ஏப்ரல் மாதம் 27ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு feedback_wamylanka@yahoo.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது WAMY Media Unit, 658/83, Mahawila Gardens, Colombo - 09. என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 0114616652 அல்லது 0714121980 என்ற இலக்கத்தில் சகோதரர் ராஷிதை தொடர்புகொள்ளலாம்.

منظمة رائدة لشباب مميز

## காத்தான்குடி வீதிகளின் பெயர்ப் பலகைகளில் அறபுமொழி




காத்தான் குடியின் நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பெயர்ப் பலகைகளில் அரபு மொழிக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நூறு வீதம் முஸ்லிம்கள் மட்டும் வாழும் பிரதேசம் காத்தான்குடி பிரதேசமாகும்.

தமது பிரதேசத்திற்கு தப்லீக் ஜமாத் மற்றும் தஃவா அமைப்புகள் என வருகை தரும் அறபியர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளதாகவும், வீதிகளை இலகுவாக அவர்கள் அடையாளம் காண்பதற்காகவே சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளுக்கு மேலதிகமாக நான்காவது மொழியாக அறபு மொழி சேர்க்கப்பட்டுள்ளதாக நகர சபையின் தலைவர் எஸ்.எச்.மொஹமட் அஸ்பர் பிபிசி சேவைக்கு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்படாத மொழியொன்று பெயர்ப் பலகையில் இடம் பெற்றிருப்பதை சர்ச்சைக்குரிய விடயமாக தான் கருதவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். நான்காவது மொழியாக அறபுமொழி இடம்பெறுவதற்காக மத்திய மற்றும் மாகாண உள்ளூராட்சி அமைச்சுகளிடமிருந்து எவ்வித அனுமதியையும் தான் கோரவில்லை என்றும் நகரசபைத் தலைவருக்குரிய அதிகாரத்தை தான் பயன்படுத்தியதாகவும் தெரிவித்திருக்கும் அவர், காத்தான்குடி நுழைவாயிலில் அமைந்திருந்த வரவேற்பு வளைவில் கூட ஏற்கனவே அறபு மொழிக்கும் இடமளிக்கப்பட்டிருந்ததையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

## கொழும்பு - மாத்தறை கடுகதி பாதை ஒகஸ்டில் திறக்கப்படும்

கொழும்பிலிருந்து மாத்தறைக்கு அமைக்கப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது கடுகதி பாதை எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் மக்கள் பாவனைக்காக திறக்கப்படும் என பாதை அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் ரஞ்சித் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

தற்போது கொழும்பிலிருந்து மாத்தறைக்கு செல்வதற்கு 4-5 மணித்தியாலங்கள் செல்கின்றன. ஆனால் அந்த தூரத்தை இந்த கடுகதி பாதையை பூர்த்தி செய்ததன் பின்னர் சுமார் ஒன்றரை மணித்தியாலங்களில் சென்றடைய முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பாதையில் மெதுவாக செல்லும் முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், டிரக்டர் போன்ற வாகனங்கள் செல்வதை தடை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




இப்பாதையை அமைப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர் நிலையம், சீனாவின் எக்ஸிம் வங்கி மற்றும் இலங்கை அரசாங்கம் என்பன 600 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்துள்ளன.

## இலங்கை மாணவர்களுக்கு ஜப்பான் அரசாங்கத்தின் புலமைப்பரிசில்


ஜப்பான் அரசாங்கம் இலங்கை மாணவர்களுக்கு MEXT புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளது. பட்டப்பின்படிப்பு, பட்டப்படிப்பு மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளுக்காக இப்புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

விண்ணப்ப படிவங்களை உயர்கல்வி அமைச்சிற்கு மே 06 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும். மேலதிக தகவல்களை உயர் கல்வி அமைச்சின் www.mohe.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து பெறலாம்.

# உயர்தர பொருளியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு

பொருளியல் கடந்த இரு நூற்றாண்டுகளாக வளர்ந்து வரும் ஒரு துறையாக விளங்குகின்றது. Economics எனும் பதம் Occonimicus எனும் கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். குடும்ப நிருவாகம், தேச நிருவாகம் ஆகிய கருத்துகளைத் தரும் இச்சொல், சமகாலத்தில் விரிந்த அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றது. நீண்டகாலமாக மேற்கத்தேய பொருளியல் அரசியல் பொருளாதாரம் (Political Economy) என்றே வழங்கப்பட்டு வந்தது. நவீன பொருளியல் சமூக விஞ்ஞானங்களின் அரசி (Queen of Social Sciences) என அழைக்கப்பட்டாலும் கடந்த ஓரிரு தசாப்த கால இடைவெளியிலேயே கோட்பாட்டு ரீதியாக விரிவு பெற்றது. பொதுவில் விஞ்ஞானம் என்பது; குறித்த ஒரு விடயப் பரப்பு தொடர்பான தரவுகளைச் சேகரித்து, அவற்றைப் பகுப்பாய்வு செய்து, பின்னர் அவை பற்றிய தர்க்க ரீதியான முடிவுகளுக்கு வரும் செயற் கிரமத்தைக் குறிக்கும்.

> **"தொடக்க காலத்தில் பொருளியலானது மெய்யியல் (Philo sophy) இறையியல் (Theology) அரசியல் போன்றவற்று டன் இணைந்ததாகவே இருந்தது. ஆயினும் இன்று பொருளியல் மனித நடத்தை பற்றி ஆய்வு செய்யும் விஞ்ஞானம் எனும் வகையில் சமூக விஞ்ஞானங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. அதேவேளை, பொருளியலை தூய விஞ்ஞானம், பிரயோக விஞ் ஞானம் எனக் கருதுகின்றவர் களும் உள்ளனர்."**



இந்த வகையில் பொருளியலானது ஒரு சமூகத்தின் பொருளாதார நடத்தைகள் பற்றிய தரவுகளைச் சேகரித்து, அவற்றைப் பகுப்பாய்வு செய்து அவை பற்றிய முடிவுகளையும் தீர்மானங்களையும் மேற்கொள்கின்றது. அதாவது ஒரு சமூகத்தின் நடத்தைகளையும் ஒரு சமூகத்திலுள்ள பல்துறை தனிநபர்களின் நடத்தைகளையும் பற்றி பொருளியல் ஆய்வு செய்வதால் அது ஒரு சமூக விஞ்ஞானம் (Social Science) என அழைக்கப்படுகின்றது.

தொடக்க காலத்தில் பொருளியலானது மெய்யியல் (Philosophy) இறையியல் (Theology) அரசியல் போன்றவற்றுடன் இணைந்ததாகவே இருந்தது. ஆயினும் இன்று பொருளியல் மனித நடத்தை பற்றி ஆய்வு செய்யும் விஞ்ஞானம் எனும் வகையில் சமூக விஞ்ஞானங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. அதேவேளை, பொருளியலை தூய விஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானம் எனக் கருதுகின்றவர்களும் உள்ளனர்.

18ம் நூற்றாண்டில் ஐரோப்பிய எழுத்தாளர்களில் சிலர் பொருளியலையும் அரசியலையும் இணைத்து அரசியல் பொருளாதாரம் என்ற துறையின் கீழ் நூல்களை எழுதி வந்தனர். அதனால் ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நவீன பொருளியலின் தந்தை எனக் கருதப்படும் அடம் ஸ்மித் என்பவர் தனது நூலுக்கு அரசியல் பொருளாதாரம் எனப் பெயரிடாது "நாடுகளின் செல்வத்தின் தன்மையும் காரணங்களையும் பற்றிய விசாரணை" (An Inquiry in to the nature and causes of the wealth of nations) எனப் பெயரிட்டார். அடம் ஸ்மித்தின் இந்நூல் வெளியானதை அடுத்தே பொருளியல் கோட்பாடு வளர்ச்சியடைந்ததாகக் கூறுவர்.

பொருளியல் என்பதற்கு காலாகாலம் பல்வேறு வரை விலக்கணங்களை பொருளியலாளர்கள் முன்வைத்து வந்துள்ளனர். இவற்றை ஒப்புநோக்கும் போது தொடக்க கால வரை விலக்கணங்களை விட நவீன காலத்தில் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் பொருளியலின் உள்ளடக்கத்தையும் எல்லைகளையும் விரிவடையச் செய்து வந்துள்ளன என்பதை உணரலாம். அது போன்றே பொருளியல் பற்றிய கோட்பாடுகள் முழுமை அற்றவை என்பதையே இவ்வரை விலக்கணங்கள் காட்டுவதாகவும் கொள்ளலாம்.

இதுவரை பொருளியலுக்கு முன்வைக்கப்பட்ட விளக்கங்கள் குறித்து நீண்ட சர்ச்சைகள் நிலவுகின்றன. இதுவரை முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணங்களை பின்வரும் நான்கு பிரதான பிரிவுகளாக வகுத்து நோக்கலாம்.

1. செல்வம் பற்றிய ஆய்வு
2. பொருள் சார் நலன் பற்றிய ஆய்வு
3. அருமை பற்றிய ஆய்வு
4. நவீன விளக்கம்

### செல்வம் பற்றிய ஆய்வு

பொருளியலின் தந்தை எனக் கருதப்படும் அடம் ஸ்மித் என்பவரே இக்கருதுகோளை முன்வைத்தார். அவரது கருத்தில், பொருளியல் என்பது செல்வம் குறித்து ஆராயும் அறிவுத் துறையாகும். இப்பின்னணியிலேயே அவர் 1776ல் வெளியிட்ட பொருளாதாரம் பற்றிய நூலுக்கு "நாடுகளின் செல்வத்தின் தன்மையையும் காரணங்களையும் பற்றிய விசாரணை" எனப் பெயரிட்டார். இந்நூலை தேசங்களின் செல்வம் என்று சுருக்கமாகக் கூறுவர். செல்வத்தினை எவ்வாறு உற்பத்தி செய்வது? அதனை எவ்வாறு பெறுவது போன்ற விடயங்களையே பொருளியல் ஆராய வேண்டும் என அடம் ஸ்மித் வலியுறுத்தியுள்ளார். இவரது கருத்து தொடர்பாக பின்வரும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. செல்வத்தை உற்பத்தி செய்வது பற்றியே அடம்ஸ் வலியுறுத்துகின்றார். அவ்வாறாயின் செல்வத்தை உற்பத்தி செய்வதற்கான வழிமுறைகள் என்ன என்ற கேள்வி எழுகின்றது. நேர்மையற்ற முறையிலும் செல்வத்தைச் சேர்க்கலாமா என்ற கேள்வியை பலர் எழுப்புகின்றனர். அதாவது பொருளியலோடு இணைந்த ஒழுக்கவியலை இவரது வரைவிலக்கணம் மறுப்பதாக உள்ளது.

2. மனிதனையும் அவனது நலனையும் முற்படுத்தி கூறத் தவறிவிட்டது. பொருள் அல்லது செல்வத்தை விட மனித நலனே முதன்மையானது. ஆனால், அடம் ஸ்மித்தின் வரைவிலக்கணத்தில் மனித நலன் முக்கியத்துவம் பெறவில்லை. மாறாக சடப்பொருளே முக்கியத்துவம் பெற்றுள்ளது.

3. செல்வத்தினை மையமாக வைத்து கூறப்பட்டுள்ள இவ்வரைவிலக்கணத்தில் உற்பத்திக்குப் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பொருளாதார செயற்பாட்டின் ஏனைய பகுதிகளான நுகர்வு, பங்கீடு போன்றவை குறித்து எதுவும் கூறப்படவில்லை.

4. செல்வம் என்பதன் கீழ் பொருட்களை மட்டுமே அவரது வரைவிலக்கணம் கவனத்தில் எடுக்கின்றது. மக்களுக்கு அவசியமான சேவைகள், ஆன்மீக திருப்திகள் என்பன குறித்து எதுவும் கூறப்படவில்லை.

இத்தகைய குறைபாடுகள் அடம் ஸ்மித் மற்றும் அவரோடு இணைந்திருந்த பொருளியலாளர்களின் கருத்துகளில் காணப்பட்டதனால் பொருளியல் செல்வம் பற்றிய கருத்து 19ம் நூற்றாண்டின் முடிவில் செல்வாக்கு இழக்கத் தொடங்கியது. அந்நூற்றாண்டின் பிற்பகுதியில் செல்வத்தை விட மனித நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கும் போக்கு தோன்றியது. பிரித்தானிய பொருளியலாளரான அல்பிரட் மார்ஷல் என்பவரின் கருத்து இதற்கு ஆதரவளித்தது. அவர் 1890ல் வெளியிட்ட பொருளியல் தத்துவம் Principles of Economy என்ற நூலில் பொருளியலுக்கான தனது விளக்கத்தை முன்வைத்தார்.

(தொடரும்)

# நமது வியாபாரம் எங்கே செல்கிறது?

இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் வியாபாரமும் ஒன்றோடொன்று இணைத்துப் பேசப்படும் பாரம்பரியம் வெகு நாட்களாய் நீடிக்கின்றது. இலங்கை முஸ்லிம்களின் வரலாறு முஸ்லிம் வணிகத் துறையுடன் நெருங்கிய தொடர்புகொண்டது. அறேபிய, இந்திய முஸ்லிம் வணிகர்கள் மூலமே இலங்கையில் இஸ்லாம் பரவியதாகக் கூறப்படுகின்றது.

இப்பின்னணியில் இருந்தே இலங்கை முஸ்லிம்கள் வியாபார சமூகம் (Business Community) என அழைக்கப்பட்டு வருகின்றனர். ஆனால், தற்போது வியாபாரத் துறையில் முஸ்லிம்கள் எந்த இடத்தில் உள்ளனர் என்பது ஆய்வுக்குரியது.

19ம் நூற்றாண்டின் இறுதி வரை உள்நாட்டு வணிகத்தில் மட்டுமன்றி ஏற்றுமதிப் பொருளாதாரத்திலும் முஸ்லிம்களே முன்னணியில் இருந்தனர். இலங்கையின் தேசிய பொருளாதாரம் குறித்த ஆய்வுகள் அதனை உறுதிசெய்துள்ளன.

வாசனைத் திரவியங்கள், புடவைத் தொழில், நகை, மாணிக்கம், பலசரக்கு ஆகிய அனைத்துத் துறைகளிலும் முஸ்லிம் வணிகர்களே முன்னணியில் இருந்தனர். கறுவா, தெங்கு, கோப்பி மற்றும் வாசனைத் திரவியங்களை ஏற்றுமதி செய்வதில் கணிசமான முஸ்லிம் வியாபாரிகள் செல்வாக்குப் பெற்றிருந்தனர். 20ம் நூற்றாண்டில் நகை மற்றும் மாணிக்க வியாபாரத்தில் முஸ்லிம்களின் செல்வாக்கு குறிப்பிடத்தக்கது.

## உள் முற்றம்

ஆலிப் அனாம்

ஆனால், முஸ்லிம்களின் வியாபாரம் தொடர்பான இந்த வரலாறு இன்றைய சூழலில் தலைகீழாய் மாறிவிட்டது. தற்போதைய இலங்கையின் முதற்தர பத்து ஏற்றுமதி கம்பனிகளில் (Top 10 Exports Companies) Adam Jee எனப்படும் போரா சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரே ஒரு கம்பனி மட்டுமே முஸ்லிம்களுக்குரியது.

அதேபோன்று உள்நாட்டின் முதற்தர 15 கம்பனிகளில் (Top 15 Local Companies) எதுவுமே முஸ்லிம்களுக்குரியதல்ல. புடவைத் தொழில், மாணிக்கம் ஆகிய துறைகள் கூட முஸ்லிம்களின் கைகளிலிருந்து நழுவி பல்லாண்டுகள் கடந்து விட்டன.

ஆங்காங்கே நகர்ப் புறங்களை ஒட்டியுள்ள முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மாத்திரமே எஞ்சியிருக்கின்றன. அவற்றுள் பெரும்பாலானவை உள்நாட்டில் ஏனைய சமூகத்திடமிருந்து வாங்கி விற்கும் நிலையிலேயே உள்ளன.

உற்பத்தித் துறை என நோக்கும்போது முஸ்லிம்கள் பெருத்த பின்னடைவில் உள்ளனர். இருக்கும் முஸ்லிம் வணிகர்கள் கூட எதிர்காலத் திட்டமிடலோ தூரநோக்கோ அற்ற நிலையிலேயே தமது வியாபார நிறுவனங்களை நடத்தி வருகின்றனர்.

வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் பொருளாதாரம் விவாசாயத்திலும் தெற்கில் வாழும் முஸ்லிம்களின் பொருளாதாரம் வியாபாரத்திலும் தங்கியுள்ளது. இலங்கையில் ஏனைய சமூகங்கள் வியாபாரத் தொழில்நுட்பம், சிறந்த முகாமை, திட்டமிடலுடன் கூடிய பாரிய உற்பத்தி, நிதி நிறுவனங்களை நடாத்தி வரும் இன்றைய சூழலில் முஸ்லிம்களின் பொருளாதாரம் வேகமாக விழுந்து வருகின்றது.

இதுவரை எந்தவொரு ஆய்வும் இடம்பெறாத துறையாக முஸ்லிம்களின் பொருளாதாரமே விளங்குகின்றது. இன்னும் நாம் ஒரு வியாபார சமூகம் என்று புகழ்பாடிக்கொண்டிருக்கின்றோம். மிகுந்த போட்டித் தன்மையும், பாரிய முதலீடுகளும் பொருளாதார சந்தையை ஆக்கிரமித்து வரும் சூழலில் முஸ்லிம்கள் வெறுமனே வாங்கி விற்பவர்களாக மாறி வருகின்றனர்.

சில முஸ்லிம் வியாபாரிகள் சிங்களவர்களின் பெயரில் இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபடும் அளவுக்கு திட்டமிட்ட நெருக்குவாரங்கள் தொடர்கின்றன. பெருமளவு முதலீடு செய்கின்றவர்களுக்கே சந்தையைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் எனும் நிலையில் முஸ்லிம்கள் எவ்விதத் திட்டமிடலும் இன்றி வியாபாரத்தில் வீழ்ச்சியடைந்து வருகின்றனர்.

இந்நிலைக்கு உடனடிப் பரிகாரம் காண வேண்டும். இலங்கை முஸ்லிம்களின் வியாபாரம் தொடர்பான ஓர் ஆய்வு முயற்சி மிகவும் அவசியம் என்பதையே இது வலியுறுத்துகின்றது.

கருத்து — மாற்றுக் கருத்து

# அமெரிக்காவிலுள்ள இலங்கை முஸ்லிம்கள்

ஏ.ஆர்.எம். இம்தியாஸ்,
எஸ். ரட்ணஜீவன் ஹூல்

தமிழர்களுக்கு அடுத்து இலங்கை முஸ்லிம்களே இரண்டாவது மிகப் பெரிய சிறுபான்மையினர் ஆவர். இனமோதலினால் ஏற்பட்ட சனப் பரம்பல் போக்குகள் காரணமாக அவர்கள் முதலாவது மிகப் பெரிய சிறுபான்மையினராக விரைவில் மாறி விடலாம்.

கடல் வழி வணிகத்தில் ஈடுபட்ட அறேபிய வியாபாரிகளே முஸ்லிம் சமூகத்தின் ஆண் வழி முன்னோர்கள் என நம்பப்படுகிறது. இவர்கள் ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் இலங்கையை வந்தடைந்தனர். இங்குள்ள உள்ளூர் முஸ்லிமல்லாத தமிழ், சிங்களப் பெண்களைத் திருமணம் செய்தனர். அத்தோடு பிரதானமாக துறைமுக நகரங்களில் குடியேறினர்.

அடிக்கடி இடம் மாறிச் செல்லும் வணிகர்கள் என்ற வகையில் முஸ்லிம் கிராமங்கள் மெதுமெதுவாக நாட்டின் உட்புறங்களிலும் நிலைபெறச் செய்யப்பட்டன. தென்னிந்தியாவிலுள்ள பெரிய முஸ்லிம் குடியேற்றங்களுடன் உள்ள தொடர்பு அவர்களை அதிகம் தமிழ்ப் பெண்களைத் திருமணம் செய்யவும், தமிழை வீட்டு மொழியாகப் பயன்படுத்தவும் ஏதுவாய் அமைந்தது.

எவ்வாறாயினும், இன முரண்பாடும் படித்த முஸ்லிம்களது அரசியலும், அவர்களைத் தமிழர்களிலிருந்து வேறுபட்ட தனித்துவமான சமூகமாக பிரகடனப்படுத்த வழிவகுத்தது. இலங்கை அரசுக்கு எதிராக தமிழர்கள் தூக்கிய போர்க் கொடி, 1983ல் தீவிரமடைந்தது. இதில் முஸ்லிம் மக்கள் இடைநடுவில் அகப்பட்டுக் கொண்டனர்.

தமிழரது புவியியல் அலகில் (ஈழத்தில்) முஸ்லிம்களை இணைப்பதற்கு உடன்படுவதா



இல்லையா என்ற நிலை ஏற்பட்டது. இந்நிலையில் தென்னிலங்கையை மையப்படுத்தியிருந்த முஸ்லிம் அரசியல் தலைமைகள், தமிழரது நியாயமான போராட்டத்திற்கு எதிரான சிங்கள அரசாங்கத்தின் போக்கிற்கு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கின.

இந்த மேல் தட்டு முஸ்லிம்களின் ஆதரவுக்குப் பின்னாலுள்ள காரணங்கள் மிகவும் சிக்கலானவையும் புரிந்து கொள்வதற்குக் கடினமானவையும் ஆகும். எவ்வாறாயினும், சிங்கள அரசின் தமிழர் விரோதப் போக்கிற்கு முஸ்லிம் அரசியல் சக்திகள் ஆதரவளித்தமைக்கு இலங்கை அரசியல் சமூகத்தில் தமது பதவி நிலைகளை தக்கவைத்துக் கொள்வதும், வணிக நலன்களை அதிகரித்துக் கொள்வதுமே காரணங்களாய் அமைந்துள்ளதை புலமை சார் ஆய்வுகள் கூறி நிற்கின்றன.

முஸ்லிம்களது வணிக நலன்கள் ஏனைய சமூகங்களுடன் அவர்களை மிகவும் பின்னிப் பிணைத்துள்ளன. அமெரிக்காவிலுள்ள இலங்கை முஸ்லிம்கள் இந்தத் தர்க்க நியாயங்களைப் புரிந்து கொண்டுள்ளனர். இதனால், தமது இலங்கைச் சகாக்களை விடவும் ஏனைய முஸ்லிம்களுடன் மிக அதிகளவில் முற்போக்காகக் கலந்துறவாடுகின்றனர்.

பள்ளிவாசல்களை நிர்மாணித்தல், இஸ்லாமிய கல்வி நிலையங்களை உருவாக்குதல் போன்ற அமெரிக்காவில் சமூத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் அவர்கள் ஆர்வத்துடன் பங்கு பற்றுகின்றனர். அமெரிக்காவிலுள்ள ஏனைய முஸ்லிம்களின் சமூக அரசியல் செயற்பாடுகளிலும் விரிந்த இஸ்லாமிய இலக்குகளுக்கான அர்ப்பணிப்பிலும் அவர்கள் இணைந்து செயற்படுவதை இது காட்டி நிற்கின்றது.

விரிந்த முஸ்லிம் சமூகத்துடன் அவர்களது சமூக வாழ்க்கை பொருந்திச் செல்வது அதிகரித்து வருகிறது. சில வழிகளில் இலங்கையில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயல்முறைகளின் ஒரு தொடர்ச்சியே இது. புதிதாகப் பெற்ற செல்வம், சொந்த சமூகத்திலிருந்து தூர நிற்கின்றமை போன்ற காரணங்களால் அவர்கள் சாரியிலிருந்தும் வட இந்திய முஸ்லிம் ஆடைகளிலிருந்தும் மாறி வருகின்றனர். மிக அண்மைக் காலமாக இளம் பெண்கள் ஜீன்ஸ்களையும் சேட்களையும் தமது உடல் தோற்றத்தை மறைப்பதற்கான சால்வைகளையும் அணிகின்றனர்.

தென்னிந்திய முஸ்லிம்களது அடையாள உருவாக்கத்தில் சாதி முறைமை ஒரு பிரதான அம்சமாக இருந்தபோதிலும், இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை அது குறிப்பிடத்தக்க பாத்திரத்தை வகிக்கவில்லை. சீதனம் போன்ற தென்னிந்தியர்களது சமூக வழக்கோடு சிக்கலான முறையில் பொருந்திச் சென்ற போதிலும் சாதி விடயத்தில் இதுதான் நிலமை.

பொதுப்படையாகச் சொன்னால் இலங்கை முஸ்லிம்கள் சீதன வழக்கிலிருந்து விடுபட்டு வருகின்றனர். மணமகன் மணமகளுக்கு கட்டாயமாக வழங்க வேண்டிய பரிசு என்று அறபியில் அர்த்தப்படும் மஹரை இஸ்லாம் அனுமதிக்கிறது என்பதை இங்கு குறிப்பிடுவது முக்கியமானது.

முஸ்லிமல்லாதோர் இஸ்லாத்தைத் தழுவினால் அன்றி, அம் முஸ்லிமல்லாதோரை முஸ்லிம்கள் திருமணம் செய்வதை இஸ்லாம் கண்டிப்பாகத் தடைசெய்துள்ளது. இதன் விளைவாக அமெரிக்காவிலுள்ள இலங்கை முஸ்லிம்கள் வழக்கமாக இலங்கையரான தமது சொந்த சமூகத்தினுள்ளிருந்துதான் தமது வாழ்க்கைத் துணையைத் தேடுகின்றனர்.

அமெரிக்காவிலுள்ள இலங்கை முஸ்லிம்கள் மிகத் தளர்வான நிறுவன அமைப்புகளையே உருவாக்கியுள்ளனர். வடஅமெரிக்க இலங்கை முஸ்லிம் அமைப்பு (Association of Sri Lankan Muslims in North America) இதில் ஒன்று. முஸ்லிமல்லாத இலங்கையர்கள் நடத்தும் அமைப்புகளில் இலங்கை முஸ்லிம்கள் குறைந்தளவே ஆர்வம் காட்டுகின்றனர். தமது மார்க்கத்திலிருந்து வேறுபட்டு நிற்பதே இந்த ஆர்வமின்மைக்குக் காரணமாகும்.


உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்களைப் பாதிக்கும் பனிப் போருக்குப் பிந்திய சர்வதேச நிலை தொடர்பாக அமெரிக்காவிலுள்ள இலங்கை முஸ்லிம்கள் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டுள்ளனர். இதில் அறபு-இஸ்ரேலிய மோதலும் உள்ளடங்கும். அமெரிக்கா தலைமை தாங்கி முன்னெடுக்கும் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் தொடர்பாக அவர்கள் கடும் விமர்சனங்களைக் கொண்டுள்ளனர். இது முஸ்லிம்களை இலக்கு வைக்கிறது என்பதே அவர்களது பார்வையாக உள்ளது. இலங்கை முஸ்லிம்கள் உள்ளடங்கலாக அமெரிக்காவிலுள்ள எல்லா முஸ்லிம்களுக்கும் எதிரான ஒரு மோதல் போக்கு நிலவுகிறது என்றே அவர்கள் நோக்குகின்றனர்.

அவர்களது உணவு, ஆடை, சிந்திக்கும் முறை, போன்ற சமூக வாழ்வுடன் தொடர்பான தெரிவுகள், மனப்பாங்குகள் என்பன அவர்களது மார்க்கத்துடன் குறியீட்டு ரீதியான பிணைப்பை ஏற்படுத்தும் வகையில் தீவிரமாக மாற்றமடைந்து வருகின்றன.

சமீபத்தில் பதின்ம வயது இலங்கை பெண்ணொருவர் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியமையும் வீட்டை விட்டு ஓடிச் சென்றமையும் அமெரிக்க நீதிமன்றம் அச்சிறுமியை அவளது பெற்றோருடன் தங்கியிருப்பதற்கு தடுத்ததையும் அவளது தந்தை அவளை கொன்றுவிடக் கூடும் என்று நீதிமன்றம் குற்றம் சாட்டியமையும் முற்றுகை உணர்வை அதிகரிக்கச் செய்ததோடு, இலங்கை முஸ்லிம்களது வகை மாதிரியான பண்பை வரைந்து காட்டும் வகையிலும் அமைந்துள்ளது.

(கட்டுரையாளர்கள் இரு வரும் அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஏ.ஆர்.எம். இம்தியாஸ் அரசியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். பேராசிரியர் ஹூல் பொறியியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர்.)

---



கலாநிதி தௌபீக் அல் வாஇ

# உண்மையான மனிதர்கள்


''முஃமின்களில் சில மனிதர்கள் இருக்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வுக்களித்த வாக்குறுதியை உண்மைப்படுத்திவிட்டனர். அவர்களில் சிலர் ஷஹீதாகி விட்டனர். இன்னும் சிலர் அதனை எதிர்பார்த்திருக்கின்றனர். அவர்களில் எவ்வித மாற்றத்தையும் செய்யவில்லை. (அல் அஹ்ஸாப்: 23)

அல்லாஹ்வுடன் உண்மையாக நடந்துகொள்வதென்பது உளவிருப்புகள், மனோஇச்சைகள், ஷைத்தானிய ஊசலாட்டங்களிலிருந்து கழன்று விட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

இங்கு அல்லாஹ்வின் உதவி இல்லாவிட்டால் மனிதனுக்கு இவ்விடயம் இயலாதவொன்றாகிவிடும். ''எப்பொழுதேனும் ஷைத்தானிடமிருந்து ஊசலாட்டம் எமக்கு ஏற்பட்டால் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருங்கள். நிச்சயமாக அவன் அனைத்தையும் செவியுறுபவனாகவும் நன்கறிந்தவனாகவும் உள்ளான்'' (அல் அஹ்ராப்: 200)

''(நபியே) நீர் கூறும், நான் எனக்கு எவ்விதப் பயனையும் நஷ்டத்தையும் ஏற்படுத்தும் ஆற்றல் பெற்றவனல்லன். அல்லாஹ் எதை நாடுகிறானோ அதுவே நடக்கிறது.'' (அல் அஹ்ராப்: 188)

''அல்லாஹ்வின் வழிகாட்டலின்றி தன்னுடைய மனோ இச்சைகளை மட்டுமே பின்பற்றி வாழ்கின்றவனை விட வழிகெட்டவன் யார்?'' (அல்கஸஸ்: 50)



மனிதர்களை வழிகெடுக்கும் முதல் பொறிமுறை மன ஊசலாட்டமும் ஷைத்தான்களைப் பின்தொடர்தலும் மன விருப்புகளும் நேர்வழியை விட்டுத் தூரமாவதும் அல்லாஹ்வின் உதவி இல்லாமையும் ஆகும்.

மனிதர்களில் சிலர் அல்லாஹ்வுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது விடுகிறார்கள்.

''அவர்களில் சிலர் இருக்கின்றனர், அவர்கள் அல்லாஹ் தன் அருளில் இருந்து நமக்கு ஏதும் கொடுத்தால் நிச்சயமாக நாம் அதனை தானம் செய்து நல்லடியார்களாகி விடுவோம் என்று அல்லாஹ்விடம் வாக்குறுதி செய்தனர். அவன் அவர்களுக்கு தன் அருட்கொடைகளை அளித்த பொழுது அவர்கள் கஞ்சத்தனம் செய்து (வாக்குறுதியிலிருந்து) பின்வாங்கி விட்டனர். அவர்கள் புறக்கணிப்பவர்களாகவே இருந்து வருகிறார்கள். எனவே அவர்கள் அவனது வாக்குறுதிக்கு மாறு செய்ததற்காகவும் பொய் சொல்லியதற்காகவும் அவர்கள் அவனை சந்திக்கும் மறுமைநாள் வரை அவன் அவர்களது உள்ளங்களில் நயவஞ்சகத்தை ஊட்டி விட்டான். அவர்கள் மறைத்து வைத்திருப்பதையும் அவர்களின் இரகசியத்தையும் அல்லாஹ் நன்கறிகிறான் என்பதையும் அல்லாஹ் ரகசியங்கள் அனைத்தையும் நன்கறிகிறான் என்பதையும் அவர்கள் அறிய வேண்டாமா'' (தௌபா: 75-78).

வாக்குறுதி அளித்துவிட்டு மாறுசெய்வதை விளங்கப்படுத்த அறபிகள் ''அர்கூபின் வாக்குறுதிகள்'' என்ற சம்பவத்தைப் பாவிப்பர். அர்கூப் பெரும் திறமைசாலி. அர்கூபிடம் அவனது சகோதரன் உணவு தேடிவந்தபோது அர்கூப்;

(பக்.19)

மீள்பார்வை
22 ஏப்ரல் 2011 - வெள்ளிக்கிழமை

# சர்வதேசப் பார்வை

எல்லைகளுக்கு அப்பால்...

# லிபியா: அமைதிப் பேச்சுவார்த்தையை புரட்சியாளர்கள் நிராகரிப்பு

## கடாபி பதவி விலக வேண்டும் என மீண்டும் வலியுறுத்து

லிபியாவின் ஜனநாயக மாற்றத்திற்கான தேசிய சபை ஆபிரிக்க ஒன்றியத்தின் பிரேரணையை நிராகரித்துள்ளது. லிபியாவில் தீவிரமடைந்து வரும் நெருக்கடியை நிறுத்துவதற்கு ஆபிரிக்க ஒன்றியம் முன்வைத்துள்ள யோசனையை பெங்காஷியை தளமாகக் கொண்டு செயற்படும் தேசிய சபை மறுத்துள்ளது. கடாபியும் அவரது மகன்மார்களும் நாட்டை விட்டு வெளியேறுவதை வலியுறுத்தாத எந்த யோசனையும் காலாவதியானது என இச்சபை கூறியுள்ளது.



சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பேச்சுவார்த்தைத் திட்டமொன்றையே ஆபிரிக்க ஒன்றியம் முன்வைத்துள்ளது. இதனை நிராகரித்துள்ள தேசிய சபை ''அன்றாடம் அதிகரித்து வரும் எமது மக்களின் வேண்டுகோள் கடாபி பதவி விலக வேண்டும் என்பதே. இக்கோரிக்கையை உள்ளடக்காத தீர்வுத் திட்டம் செல்லுபடியற்றது'' என வலியுறுத்தியுள்ளது.

பெப்ரவரியில் கடாபியின் அரசாங்கத்திற்கு எதிராகத் தொடங்கிய மக்கள் புரட்சி, தற்போது முழு அளவிலான சிவில் யுத்தமாக மாறியுள்ளது. யுத்த சூனியப் பிரதேசத்தை பிரகடனப்படுத்தியுள்ள நேட்டோ, தற்போதைய சிவில் யுத்தம் நீடிப்பதற்கு ஊக்கமளித்து வருவதாக பல அறபு நாடுகள் குற்றம் சுமத்தியுள்ளன. இதேவேளை, கடாபியின் ஆகாய வழித் தாக்குதலிலிருந்து கிழக்கு லிபியாவின் மக்களைக் காப்பாற்ற வேண்டுமாயின் நேட்டோ படையின் ஆதரவு அவசியம் என்று கிளர்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.


மேற்கு நாடுகள் லிபியாவின் உள் நாட்டு நெருக்கடியை மிகக் கவனமாகப் பயன்படுத்தி வருவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில், சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் ஆபிரிக்க ஒன்றியம் தீவிரமாக இறங்கியுள்ளது. இரு தரப்பினருக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு, ஓர் இடைக்கால அரசாங்கத்தின் உதவியோடு லிபிய மக்கள் கோரும் அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்பதே ஆபிரிக்க ஒன்றியத்தின் நிலைப்பாடு.

எவ்வாறாயினும், பிரேரிக்கப்பட்டுள்ள இவ்வாலோசனை கடாபியின் வெளியேற்றத்தை உள்ளடக்கவில்லை என்பதனால் அது குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளதாக கிளர்ச்சியாளர்கள் கூறி வருகின்றனர். ஆபிரிக்க ஒன்றியத்தின் தீர்மானத்தை பிரிட்டன், இத்தாலி, போன்ற நாடுகள் வரவேற்றுள்ளன. இதேவேளை, ஏற்கனவே கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலிருந்த அஜ்தாபிய்யா நகரத்தை மீளக் கைப்பற்றுவதில் கடாபியின் ஆதரவுப் படையினர் தீவிரமாகப் போராடி வருகின்றனர்.

ஆபிரிக்க ஒன்றியத்தின் தீர்வுத் திட்டத்தை நாம் வரவேற்கின்றோம். ஆனால், கடாபி பதவி விலக வேண்டும் என்பது அதில் உள்ளடக்கப்பட வேண்டும் என பெங்காஷி சிவில் சமூகம் கோருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ''கடாபி ஒரு மிகப் பெரும் பொய்யர். எனவே, யுத்த நிறுத்தத்திற்குச் சென்றால் அதன் பின்விளைவுகள் குறித்து நாம் அஞ்சுகின்றோம்'' என 17 வயதான அப்துல்லாஹ் பாரூத் கூறுகின்றார்.

1990களில் அறபுலகத்திலிருந்து விடுபட்ட லிபியா, சப்ஸஹாரா எனப்படும் ஐக்கிய ஆபிரிக்காவை வலியுறுத்தியது. ஸஹாரா பாலைவனத்திற்கு சமீபமாகவுள்ள நாடுகளின் தலைவர்களோடு உறவுகளை வளர்த்துக் கொண்ட கடாபி, ஐக்கிய ஆபிரிக்கா பற்றி பேசி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிரியாவின் கிளர்ச்சிகளில் மாணவர்களும் பங்கேற்பு



சிரியாவில் புரட்சியாளர்களுக்கு ஆதரவளிக்கும் முகமாக ஆயிரக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்று திரண்டு வருகின்றனர். டமஸ்கஸில் ஒன்று கூடிய இம்மாணவர்கள் ஜனநாயக ஆதரவு சக்திகளுக்கு தாம் ஒத்துழைப்பு வழங்கப் போவதாகக் கூறியுள்ளனர். டமஸ்கஸ் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பைத் தொடர் ந்து பல மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சுதந்திரம், நீதி, ஒற்றுமை. இதுவே எமது இலக்கு என்று மாணவர்கள் கோஷம் எழுப்பியுள்ளனர். மனித உரிமைகளுக்கான சிரியாவின் தேசிய அமைப்பின் தலைவர் அம்மார் குராபி, மோதலில் ஒரு மாணவர் கொல்லப்பட்டதை உறுதி செய்துள்ளார். ஆட்சியிலுள்ள பஷர் அல் அஸதின் பாத் அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் புரட்சி புதிய வடிவம் பெறுவதையே மாணவர்களின் ஆதரவுப் போராட்டம் எடுத்துக் காட்டுவதாக அம்மார் குராபி தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான அரச படையினரின் அடக்குமுறை தீவிரமடைந்துள்ளது. ஆயினும், புரட்சியாளர்களின் ஆர்ப்பாட்டம் தணியவில்லை. ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளதோடு பல பத்திரிகையாளர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். சிரியாவின் முக்கிய நகரங்களில் பதற்றம் நிலவுவதாகவும் எவ்வேளையிலும் முழுமையான புரட்சி வெடிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் அரச படையினருக்கும் இடையிலான மோதலில் அரச படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

# 2015ல் உலகப் பொருளாதாரத்தின் முதலிடத்தை சீனா கைப்பற்றும்




அடுத்த அரை தசாப்தத்திற்குள் சீனா அமெரிக்கப் பொருளாதாரத்தை விஞ்சிவிடும் என்று பொருளியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

20ம் நூற்றாண்டில் ஆசியாவின் முதல் நாடாக ஜப்பானும் தென்கொரியாவும் பின்னர் தென்கிழக்காசி யாவும் மாறின. சிங்கப்பூர், மலேசியா என்பன மிக வேகமாக பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் கண்டு வந்தன. தற்போது சீனா உலகப் பொருளாதாரத்தின் இரண்டாம் இடத்தைத் தட்டிக் கொண்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் பல மில்லியன் கணக்கானோரை வறுமைக் கோட்டின் கீழிலிருந்து உயர்த்தியுள்ளது. 2010ல் ஜப்பானை முந்திக்கொண்ட சீனப் பொருளாதாரம் 2015 அல்லது 2020ல் ஐக்கிய அமெரிக்காவை முந்திவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கோல்ட்மென் சார்ச் எனப்படும் முதலீட்டு வங்கி இதை எதிர்வுகூறியுள்ளது.

சீனாவின் மொத்த தேசிய உற்பத்தி 2020ல் அமெரிக்காவின் மொத்த தேசிய உற்பத்தியை விட அதிகமாக இருக்கும் எனவும் இவ்வங்கியின் அறிக்கை கூறுகின்றது. அமெரிக்காவின் சனத்தொகையோடு ஒப்பிடும்போது சீனாவின் சனத்தொகை பன்மடங்கு அதிகம். இந்நிலையிலும் சீனாவின் வளர்ச்சி வேகம் ஆச்சரியத்திற்குரியது என்று பொருளியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அமெரிக்க சனத்தொகை 300 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, சீனாவின் சனத்தொகை 1500 மில்லியனாகும். பொருளாதாரத்தில் மட்டுமன்றி, இராணுவத் துறையிலும் சீனா முன்னேறி வருகின்றது. நடப்பு ஆண்டில் இராணுவத் துறை செலவீனத்தை 12 வீதமாக சீனா உயர்த்தியுள்ளது. சீனா தனது அயல் நாடுகளுடன் கூட்டணிகளை உருவாக்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# மொரிட்டானியா:

## அரசியல் மாற்றத்திற்குத் தயார்



மொரிட்டானியாவில் அரசாங்கம் எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றது. நாட்டின் முக்கிய அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்கிலேயே எதிர்க்கட்சிகளுடனான பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக பிரதமர் வூல்த் முஹம்மத் அஃலப் தெரிவித்துள்ளார். ஆபிரிக்காவின் பல நாடுகளில் அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் புரட்சி தீவிரமடைந்து வரும் நிலையில் மொரிட்டானிய அரசாங்கம் எதிர்க்கட்சியோடு பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய முற்போக்கு கட்சியே அந்நாட்டின் பலமான எதிர்க்கட்சியாகும். தற்போதைய அரசாங்கத்தை இக்கட்சி எதிர்த்து வருகின்றது. அதேபோன்று அபிவிருத்திக்கும் சீர்திருத்தத்திற்குமான தேசிய ஒன்றியம் எனப்படும் கட்சியே பிரதான இஸ்லாமிய கட்சியாகும். பெரும்பாலும் நாட்டின் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஐக்கிய முன்னணியொன்றை உருவாக்கியுள்ளன. அதில் இஸ்லாமியக் கட்சி பங்குபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதன் இரண்டாம் நிலைத் தலைவர் முஹம்மத் வூல்த் மன்ஸூர் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் எந்தத் தரப்பும் அரசியல் சீர்திருத்தம் குறித்து சீரியஸான உரையாடல்களை முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

# பல்கேரியா:

## ஹிஜாப் அணியத் தடை




பல்கேரியாவில் அரசாங்க பாடசாலைகளில் ஹிஜாப் அணிவதைத் தடைசெய்யும் உரிமை பாடசாலை நிருவாகத்திற்கு உள்ளது என்று அந்நாட்டின் அரசியலமைப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. பல்கேரியாவில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களுக்கும் அரசாங்க பாடசாலைகளுக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவி வரும் முரண்பாட்டை நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு ஐரோப்பிய நாடான பல்கேரியாவில் முஸ்லிம்கள் மிகக் குறைந்தளவு சிறுபான்மையாக வாழ்கின்றனர். அந்நாட்டின் தலைநகரிலுள்ள அரச பாடசாலைகளில் முஸ்லிம் மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர்.

கடந்த காலத்தில் இவர்கள் ஹிஜாப் அணியக் கூடாது என்று பாடசாலை நிருவாகம் தடைசெய்திருந்தது. தற்போது ஹிஜாப் தடையை நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது. எதிர்வரும் செப்டம்பரிலிருந்து நீதிமன்றத் தீர்ப்பு நடைமுறைக்கு வரும் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

# ஊழல் மலிந்த நாடுகளில் இந்தியாவுக்கு 4வது இடம்



ஆசியா பசிபிக் பிராந்திய நாடுகளில், ஊழல் மலிந்த 16 நாடுகளில் இந்தியா முக்கிய இடத்தை பிடித்துள்ளது. 'பெர்க்' என்ற வர்த்தக ஆலோசனை நிறுவனம் மேற்கொண்ட கருத்துக் கணிப்பில், மிக மோசமான ஊழல் மிகுந்த நாடுகளின் பட்டியலில், 10-க்கு 8.7 புள்ளிகள் பெற்று 4-வது இடத்தை பிடித்துள்ளது.

இந்த வரிசையில் கம்போடியா (9.27), இந்தோனேஷியா (9.25), பிலிப்பைன்ஸ் (8.9) ஆகிய நாடுகள் முறையே முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளன. ஊழலற்ற நாடுகளில் சிங்கப்பூர் முதலிடம் (0.37) வகிக்கிறது. ஹோங்கொங் (1.10), அவுஸ்திரேலியா (1.39), ஜப்பான் (1.90), அமெரிக்கா (2.39) ஆகிய நாடுகள் அதற்கு அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளன.

இந்தியாவில் தேசிய அளவிலான அரசியல் தலைவர்களை விட பிராந்திய மற்றும் வட்டார தலைவர்கள் அதிக ஊழல்வாதிகளாகவும், அதேபோல், தேசிய அளவை விட நகரங்களில் உள்ள அதிகாரிகள் அதிக ஊழல் மலிந்த வர்களாக இருப்பதாகவும் அந்த கருத்து கணிப்பில் தெரியவந்துள்ளது.

# உஸ்பெகிஸ்தானில் மனித உரிமை நிறுவனம் வெளியேற்றம்

உஸ்பெகிஸ்தான் அரசாங்கம் Human Right Watch எனப்படும் சர்வதேச மனித உரிமை நிறுவனத்தின் உஸ்பெகிஸ்தான் அலுவலகத்தை மூடுமாறு பணித்துள்ளது. தலைநகர் தாஷ்கண்டில் கடந்த 15 ஆண்டுகளாக இந்நிறுவனம் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. உஸ்பெகிஸ்தானில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் அரச பயங்கரவாதம் மற்றும் மனித உரிமை மீறல்களை இந்நிறுவனம் வெளியுலகிற்கு கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

மத்திய ஆசியாவில் முஸ்லிம் நாடுகளில் ஒன்றான உஸ்பெகிஸ்தான் அரசாங்கம் மிகுந்த ஊழல் மோசடி நிறைந்தது எனவும், அந்நாட்டில் இஸ்லாமியவாதம் தலைதூக்கி விடாமல் ஒடுக்குவதில் பிரபலமானது என்றும் கூறப்படுகிறது. குறிப்பாக சமீப காலமாக நாட்டில் நடைபெறும் தேர்தல்களில் ஆளும் கட்சியை அதிகாரத்தில் நீடித்திருக்கச் செய்யும் வகையில் ஊழல் மோசடிகள் திட்டமிட்டு மேற்கொள்ளப் பட்டு வந்ததை HRW வெளிப்படுத்தியிருந்தது.

உஸ்பெகிஸ்தானின் தேசிய சட்ட முறைமையை மனித உரிமை நிறுவனம் மீறிச் செயற்பட்டதே வெளியேற்றத்திற்கான காரணம் என்று அரசாங்கத் தரப்பில் கூறப்படுகின்றது.

# ஐக்கிய வளைகுடா தீர்வு அவசியம் என வலியுறுத்து

வளைகுடாவில் ஏற்பட்டுள்ள மக்கள் புரட்சியையும் அரசாங்கங்களின் நிலைப்பாடுகளையும் கவனத்திற் கொண்டு பிராந்தியத்தில் ஒரு ஐக்கிய அறபு நாடுகளின் ஒன்றியத்தை உருவாக்குவது நீண்ட காலத்திற்கு அவசியமான தீர்வு என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். வளைகுடாவின் பாதுகாப்பு, ஈரானின் திட்டம், எண்ணெய் வளத்தின் எதிர்காலம், அரசியல் சீர்திருத்தம் ஆகிய பல்வேறு அம்சங்களைக் கருத்திற் கொண்டு ஓர் ஐக்கிய வளைகுடா பிராந்தியம் உருவாக்கப்பட வேண்டும் என கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

வளைகுடா நாடுகளின் சபையில் 12 அறபு நாடுகள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. இந்நாடுகளை ஒன்றிணைத்து ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா போன்று பிராந்தியங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து வளங்களை சமமாகப் பயன்படுத்துவதற்கும் பிராந்திய எல்லை நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கும் ஐக்கிய வளைகுடா தீர்வு அவசியம் என ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

# ஐவரிகோஸ்ட்: ஜனாதிபதி பாக்போ சரணடைந்துள்ளார்



பாக்போ



ஒட்டாரா

ஐவரிகோஸ்டில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்த உள்நாட்டு மோதல்களை அடுத்து ஜனாதிபதி பாக்போ சரணடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆபிரிக்காவில் உள்ள ஐவரிகோஸ்டில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி அலஸ்ஸான் ஒட்டாராவின் ஆதரவாளர்களுக்கும் நீண்ட நாட்களாய் பதவியில் இருந்து வரும் பாக்போவின் ஆதரவாளர்களுக்கும் இடையில் நடைபெற்று வந்த மோதலில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இம்மோதல் ஆயுத ரீதியான சிவில் யுத்தமாக வெடித்ததை அடுத்து ஐ.நா. பிரச்சினையில் தலையிட்டது. இரு தரப்பினரதும் மோதலினால் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டிருந்தனர். 2010 நவம்பர் 28ல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றவர் எனக் கருதப்படும் அலஸ்ஸான் ஒட்டாராவுக்கு அதிகாரம் கையளிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச நாடுகள் கூறி வந்தன. அதேவேளை, ஏற்கனவே ஜனாதிபதியாக இருந்த லோரன்ட் பாக்போ பதவியைக் கையளிக்கத் தவறியதை அடுத்து நாட்டில் பாரிய மோதல் ஏற்பட்டது.

தற்போது லோரன்ட் பாக்போ ஒட்டாராவின் படையினரிடம் சரணடைந்துள்ளதை ஒட்டாரா தொலைக்காட்சி உரையில் உறுதி செய்துள்ளார். ஐ.நா.வின் ஐவரி கோஸ்ட் பிரதிநிதி பர்ஹான் ஹக் இதனை மீளுறுதி செய்துள்ளார். எதிர்காலத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாக்போ விசாரிக்கப்படுவதோடு அவருக்கெதிரான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஐ.நா.வுக்கான ஐவரிகோஸ்ட் தூதுவர் யூசுப் பம்பா கூறியுள்ளார்.

ஏற்கனவே வெளிவந்த அறிக்கைகளின்படி பாக்போ கைது செய்யப்பட்டார் என்று கூறப்பட்டது. ஆனால், தற்போது அவர் ஒட்டாராவின் படையினரிடம் சரணடைந்துள்ளதை ஊடக அறிக்கைகள் உறுதிசெய்துள்ளன. பாக்போ சரணடைந்ததைத் தொடர்ந்து ஐவரிகோஸ்டின் சிவில் யுத்தம் தற்காலிகமாக முடிவுக்கு வந்துள்ளது. இரு தரப்பு படையினரும் தமது ஆயுதங்களை அரசாங்கத்திடம் கையளிக்க வேண்டும் என்றும் எதிர்காலத்தில் ஸ்திரமான ஓர் அரசாங்கம் நாட்டில் செயல்படும் எனவும் ஐ.நா. செயற்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாக்போவின் ஆதரவாளர்கள் தொடர்ந்தும் ஒட்டாராவின் அரசாங்கத்திற்கு எதிராகப் போராடக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. எவ்வாறாயினும், இரு தரப்பினரும் இடம்பெற்ற படுகொலைகளுக்கு பொறுப்புக் கூற வேண்டும் என்று Human Rights Watch நிறுவனம் கூறுகின்றது. பாக்போவும் அவரது குடும்பமும் தற்போது ஒட்டாராவின் அலுவலகத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# பயங்கரவாதச் செயல்களோடு முஸ்லிம்களுக்குத் தொடர்பில்லை

## Europol தெரிவிப்பு


Europol எனப்படும் ஐரோப்பிய நாடுகளின் காவல் நிறுவனம் மேற்கொண்ட ஓர் ஆய்வில் ஐரோப்பாவில் இடம்பெறும் 99.6 வீதமான பயங்கரவாதச் செயல்களோடு தொடர்புற்றவர்கள் முஸ்லிம் அல்லாதவர்கள் என்பது தெரியவந்துள்ளது. ஐரோப்பாவில் இயங்கி வரும் தீவிர பிரிவினைவாத அமைப்புகளும் வலதுசாரிக் குழுக்களுமே பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றன என்பதையும் இவ்வாய்வு உறுதிசெய்துள்ளது.

ஐரோப்பிய வன்முறைச் சம்பவங்களோடு முஸ்லிம்களைத் தொடர்புபடுத்தும் ஊடக அறிக்கைகளை ஈரோப்போலின் இவ்வாய்வு பொய்ப்பித்துள்ளது. ஐரோப்பாவில் உருவாக்கப்பட்டுள்ள 'இஸ்லாமியப் பீதி' (Islamophobia) அடிப்படையற்றது என்பதையும் இவ்வாய்வு உறுதிசெய்துள்ளது. பிரான்ஸ், ஸ்பெய்ன் ஆகிய நாடுகளிலேயே அதிகளவிலான பயங்கரவாதக் குழுக்கள் செயற்படுகின்றன.

# ஷெய்க் யூஸுப் அல் கர்ளாவி

## உயிர் வாழும் ஓர் அறிவுப் பாரம்பரியம்

**றவூப் ஸெய்ன்**



கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி இந்நூற்றாண்டின் மிகப்பெரும் இஸ்லாமிய சிந்தனையாளர். இஸ்லாமிய தஃவா களத்தில் முன்னணியில் நிற்கும் தன்னிகரற்ற ஆளுமை. தான் வாழும் சமூகம் குறித்து ஆழ்ந்த அனுபவமும் கூர்ந்த பார்வையும் மிகுந்தவர். இஸ்லாமிய சட்டத்துறையில் அதன் அடியாழம் வரை சென்று சமகாலத் தேவைகளுக்கேற்ப சட்டப் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்பவர். எதையும் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கை (அஸாலா) வழிநின்று அதேவேளை சமகாலத்தின் செல்நெறிகளை (முஆஸிரா) கருத்திற் கொண்டு நோக்குபவர். இதனால் சட்டப் பகுதியில் முஜ்தஹிதுல் முத்லக் என்ற அந்தஸ்தை எட்டியவர்.

அரை நூற்றாண்டுக்கு மேலாக பேனை முனையில் போராடி வரும் கர்ளாவி, நூற்றுக்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். அவரது பேச்சும் பிரச்சாரமும் எழுத்தும் அரபுலகோடு சுருங்கவில்லை. தமது அடையாள நெருக்கடிக்கு (Identity Crisis) முகங்கொடுத்து, இஸ்லாமிய பண்பாட்டை பேணுவதில் போராடிக் கொண்டிருக்கும் ஐரோப்பிய, அமெரிக்க முஸ்லிம்களை நோக்கியும் அவரது சிந்தனைகள் நீண்டன.


இஸ்லாம் எல்லா காலத்திற்குமுரிய தெய்வீகத் தூது. அது ஒரு வாழும் கொள்கை, நடைமுறைச் சாத்தியமான வாழ்க்கைத் திட்டம். கால, வர்த்தமான, தேசிய எல்லைகளைத் தாண்டி எப்போதும் இளமையாய் வாழும் சிந்தனை. இதுதான் கர்ளாவியின் ஒட்டு மொத்த பிரச்சாரத்தினதும் அடி நாதம்.

அல்-அஸ்ஹரின் கீழ் இயங்கும் கல்வி நிறுவனத்தில் இணைந்து தனது ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்த கர்ளாவி கல்வி அடைவுகளில் எப்போதும் முன்னணியிலேயே நின்றார். உயர்தரப் பரீட்சையில் இரண்டாம் இடத்தைப் பெற்றார். பின்னர் அல்-அஸ்ஹர் உஸூலுத்தீன் பீடத்தில் சேர்ந்து 1953ல் 180 பட்டதாரி மாணவர்களுள் முதல் தரத்தில் சித்தியடைந்தார்.

1957ல் மொழித்துறை மற்றும் இலக்கியத்துக்கான உயர் கல்வி நிறுவனத்தின் டிப்ளோமா பட்டம் பெற்றார். 1960ல் உஸூலுத்தீன் பீடத்தில் குர்ஆன் மற்றும் ஹதீஸ் துறைகளில் முதுகலைக்குச் சமனான உயர்கல்விச் சான்றிதழ் அவருக்கு வழங்கப்பட்டது. இறுதியாக 1973ல் ''ஸகாத்தும் சமூகப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அதன் பங்கும்'' என்ற தலைப்பில் தனது கலாநிதிக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தார்.

யூஸுப் அல் கர்ளாவி பள்ளிவாசல் ஒன்றின் கதீபாக சிறிது காலம் பணியாற்றிய பின்னர் எகிப்திய வக்ப் அமைச்சின் கீழுள்ள இமாம்களுக் கான கல்வி நிறுவனத்தின் பணிப்பாளராக செயலாற்றினார். அதனைத் தொடர்ந்து அல்-அஸ்ஹரின் வெளியீட்டு முயற்சிகளை மேற்பார்வை செய்யும் தஃவா செயலகத்தில் பணிபுரியும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. 1961ல் கட்டார் மார்க்கக் கல்வி நிறுவனத்தின் தலைவரானார். 1973 வரை அதில் மிகுந்த ஈடுபாட்டுடன் அயராது உழைத்தார். 1973ல் கட்டார் பல்கலைக்கழகத்தில் ஷரீஆத் துறையை நிறுவி அதனை வளர்த்தெடுக்கும் பொறுப்பையும் ஏற்றார். 1981 முதல் 1999 வரை அதன் முதல்வராகப் பணியாற்றினார்.

மக்காவிலுள்ள றாபிததுல் ஆலமில் இஸ்லாமியின் கீழ் இயங்கும் சட்டமன்றத்திலும் (மஜ்மஉல் பிக்ஹி) ஜோர்தானிலுள்ள இஸ்லாமிய நாகரிகத்துக்கும் ஆய்வுக்குமான மன்றத்திலும் இஸ்லாமிய உலகில் பல் வேறு பிக்ஹ் துறை ஆய்வு நிலை யங்களிலும் தஃவா இயக்கங்களிலும் அங்கம் வகித்து வருகின்றார். இஸ்லாமிய பிரச்சாரப் பணியில் மட்டுமன்றி சமூக நலன் புரிப் பணிகள், இலக்கிய ஆய்வுகள் என கலாநிதி கர்ளாவியின் பங்கு விரிந்து செல்கின்றது. Oxfordஇலுள்ள இஸ்லாமிய ஆய்வு நிலையத்திலும் இஸ்லாமாபாத் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக் கழக செயற்குழுவிலும் அவர் அங்கம் வகிக்கின்றார். தற்போது முஸ்லிம் அறிஞர்களின் சர்வதேச ஒன்றியத்தின் தலைவராகப் (JUMS) பணியாற்றுகின்றார்.



கட்டார் பல்கலைக்கழகத்தில் 1999ல் சுன்னா மற்றும் ஸீறா ஆய்வு நிலையத்தை நிறுவி இன்று வரை அதன் பணிப்பாளராக உழைத்து வருகின்றார். கலாநிதி கர்ளாவி இஸ்லாமிய கல்விக்காகவே தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர். பிரச்சாரப் பணிக்காக நவீனகால தஃவா உத்திகளையும் சாதனங்களையும் நன்கு கையாண்டு தனது பேச்சாலும் எழுத்தாலும் அரை நூற்றாண்டுக்கு மேல் போராடி வருபவர். தற்போது ஐரோப்பிய சிறுபான்மை முஸ்லிம்களின் சிந்தனை ஒருமைப்பாட்டையும் இஸ்லாமிய அடையாளத்தையும் நோக்காகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆய்வுக்கும் பத்வாவுக்குமான ஐரோப்பிய சபையின் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

மக்காவிலுள்ள றாபிததுல் ஆலமில் இஸ்லாமியின் கீழ் இயங்கும் சட்டமன்றத்திலும் (மஜ்மஉல் பிக்ஹி) ஜோர்தானிலுள்ள இஸ்லாமிய நாகரிகத்துக்கும் ஆய்வுக்குமான மன்றத்திலும் இஸ்லாமிய உலகில் பல்வேறு பிக்ஹ் துறை ஆய்வு நிலையங்களிலும் தஃவா இயக்கங்களிலும் அங்கம் வகித்து வருகின்றார். இஸ்லாமிய பிரச்சாரப் பணியில் மட்டுமன்றி சமூக நலன் புரிப் பணிகள், இலக்கிய ஆய்வுகள் என கலாநிதி கர்ளாவியின் பங்கு விரிந்து செல்கின்றது. Oxfordஇலுள்ள இஸ்லாமிய ஆய்வு நிலையத்திலும் இஸ்லாமாபாத் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழக செயற்குழுவிலும் அவர் அங்கம் வகிக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போது முஸ்லிம் அறிஞர்களின் சர்வதேச ஒன்றியத்தின் தலைவராகப் (JUMS) பணியாற்றுகின்றார்.

16 வயது முதலே தனது கிராமத்தை மையமாக வைத்து பல்வேறு மார்க்கப் பிரச்சார உரைகளை தொடர்ச்சியாக நிகழ்த்தி வந்தார். 19வது வயதில் இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். இமாம் ஹஸனுல் பன்னாவின் ஆன்மீகப் பாசறையில் வளர்ந்த நவீனகால இஸ்லாமிய அறிஞர்களில் கலாநிதி கர்ளாவியும் ஒருவர். இஹ்வான்களின் இரண்டாவது பொது வழிகாட்டியாக இருந்த இமாம் ஹஸன் ஹுழைபியின் பணிப்பின் பேரில் எகிப்தின் அலெக்ஸாந்திரியா முதல் உஸ்வான், சினாய்ப் பாலைவரை அவர் தஃவா பயணங்களில் ஈடுபட்டார். இதனால் சிரியா, ஜோர்தான், லெபனான் போன்ற நாடுகளிலும் கர்ளாவியின் கருத்துக்களும் சிந்தனைகளும் பெரும் செல்வாக்கைப் பெறலானது. இதனால் அவர் அறபு ஆட்சியாளர்களின் கொடுமைகளுக்கு ஆளாகியதோடு பலமுறை இருண்ட சிறைகளிலும் தள்ளப்பட்டார். 1941, 1954, 1967, 1973 போன்ற ஆண்டுகள் அவரது வாழ்வில் மிகவும் துயரம் மிகுந்தவை. இந்த ஆண்டுகளில் அவர் பல மாதங்களை சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் கழிக்க வேண்டியிருந்தது.

மஸ்ஜித்களின் குத்பா மிம்பர்களை மட்டுமன்றி நவீன வெகுசன தொடர்பு சாதனங்கள் அனைத்தையும் வெற்றிகரமாக அவர் பயன்படுத்துகின்றார். மாநாடுகள், கருத்தரங்குகள், விரிவுரைகள், ஐரோப்பிய நாடுகளில் நடாத்தப்படும் விஷேட கலந்துரையாடல்கள், பல்கலைக்கழகங்கள், என கர்ளாவியின் தஃவாக் களம் விரிந்த எல்லை கொண்டது.

அஷ்ஷெய்க் அல்லாமா கர்ளாவியின் தஃவா உத்திகள் முற்றிலும் நவீன தஃவா முறையியலைத் தழுவியதொன்றாகும். சமகாலத்தில் தஃவாவின் அடிப்படைகள் தஃவா முறையியல் (பிக்ஹுத் தஃவா) என்னும் தனிப்பெரும் கலையாக வளர்ச்சி கண்டுள்ளது. இத்தகைய பிக்ஹுத் தஃவாவை செம்மையான ஒரு தனிக் கலையாக வளர்த்தெடுத்ததில் கர்ளாவியின் சிந்தனைக்கும் கருத்துகளுக்கும் ஒரு காத்திரமான பங்கிருக்கின்றது என்பதை இலகுவில் புறக்கணிக்க முடியாது.

அழைப்பாளனின் அறிவுப் பின்னணி, கோளாறு எங்கே? இஸ்லாமி இயக்கங்கள் முதன்மைப்படுத்த வேண்டியவை போன்ற நூல்கள் நவீன இஸ்லாமிய இயக்கங்களையும் இஸ்லாமிய எழுச்சியையும் வழிநடாத்துவதில் எழுதப்பட்ட முக்கிய நூல்கள் எனலாம். கர்ளாவியின் உணர்ச்சி பூர்வமான உரைகள் உறங்கும் உள்ளங்களை உலுப்பி விடும் தன்மை வாய்ந்தவை. அவரது மிம்பர் பிரசங்கம் கேட்பவர்களின் உள்ளங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. தீவிரவாதத்தை நிராகரிக்கும் இவர் எப்போதும் நடுநிலையான போக்கைக் கொண்டவர்.

கர்ளாவி 100க்கு மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கின்றார் இவரது நூல்கள் இஸ்லாமிய உலகில் பெரும் வரவேற்பைப் பெற்றவை. அவற்றுள் சில பத்துக்கு மேற்பட்ட தடவைகள் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளன. கணிசமானவை ஆங்கிலம், பிரெஞ்சு, உருது, போன்ற மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. கலாநிதி கர்ளாவி ஆயிரக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளதோடு விரிவுரைகளையும் நிகழ்த்தியுள்ளார். இஸ்லாமிய உலகில் இவர் ஓர் அரிய எழுத்தாளர். இவரைப் போன்று எழுதியவர்கள் மிகவும் சொற்பமானவர்களே.

சமகாலத்தின் தேவைகளுக்கும் ஷரீஆவின் நெகிழ்வுகளுக்குமிடையில் ஓர் அற்புதமான சமநிலையை அவர் பேணியுள்ளார். எந்த கருத்தாழ மிக்க சிந்தனையையும் எளிய மொழிநடையில் முன்வைப்பது இவரது எழுத்தின் சிறப்பம்சம் எனலாம். ஒரு அழைப்பாளனின் உத்வேகமும் சட்ட அறிஞரின் நுணுக்கமும் சீர்திருத்தவாதியின் விரிந்த பார்வையும் இவர் எழுத்துக்களில் சம விகிதத்தில் இழையோடுவதைக் காணலாம்.

பொருளாதாரம், அரசியல், சட்டம், சமூகம், அகீதா, வரலாறு, தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், தஃவா, கல்வி, இலக்கியம் என

(பக்.19)

# மகிழ்ச்சிகரமான திருமண வாழ்வின் அடிப்படைகள்

**1. நம்பிக்கை**

முஸ்லிம் திருமணங்களின் அடிப்படையானதும் மிகவும் அவசியமானதுமான பண்பு நம்பிக்கையாகும். இதுவே அவர்கள் இருவரையும் இணைக்கின்றது. இஸ்லாம் வெறுமனே ஒரு மார்க்கமல்ல அது வாழ்க்கைக்கான வழிகாட்டியாகும். ஒரு முஸ்லிமின் வாழ்க்கைக்கு அவசியமான அனைத்து விடயங்களையும் இஸ்லாம் வரையறுத்துக் கூறியுள்ளது.

இஸ்லாம் நம்பிக்கையின் அடிப்படையிலே குடும்ப வாழ்வு அமைய வேண்டுமென எதிர்பார்க்கின்றது. இந்த நம்பிக்கை தம்பதிகளுக்கிடையே அன்பையும் உறவையும் வளர்ப்பதில் மிகப் பாரிய பங்களிப்பை வழங்குகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்;

**அநேகமான குடும்பப்ப பிரச்சினைகளுக்கு பணம் பிரதான காரணமாக காணப்படுகின்றது, 80% ஆன விவாகரத்துகளுக்கு பணம் தொடர்பான பிரச்சினை கள் காரணமாக இருப்பதாக இத்துறைசார் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். எனவே, தம்பதியர் இணைந்து மாதாந்தம் அல்லது வருடாந்தம் வரவு செலவுத் திட்டமொன்றை தயாரித்துக் கொள்ள வேண்டும்.**

ஒரு கணவன் தனது மனைவிக்கு உணவளிக்கும் போது அவன் இந்த செயலுக்காக அல்லாஹ்விடம் மகத்தான கூலியை பெறுகின்றான். அத்துடன் அல்லாஹ் அவர்களுக்கிடையில் இறுக்கமான அன்பையும் அதிகரிக்கின்றான். எனவே, நாம் ஒவ்வொருவரும் அல்லாஹ்வுக்காக மற்றையவரை நேசிப்போம். எங்களுடைய நம்பிக்கை உண்மையாகவே அதிகரிக்கும்.

**2- பொறுமை**

பொறுமை ஆரோக்கியமான குடும்ப வாழ்வை நடாத்திச் செல்வதற்கு மிகவும் அத்தியவசியமான ஒரு விடயமாகும். நம்பிக்கையோடும் பொறுமையோடும் இருக்கும்போது வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பல்வேறுவிதமான நிகழ்வுகளை எதிர்கொள்கின்ற சக்தி ஏற்படும். அல்லாஹு தஆலா ஸூறதுல் 'அஸ்ரில் நிச்சயமாக மனிதர்கள் நஷ்டத்திலே இருக்கின்றார்கள்; ஈமான் கொண்டு நற்செயல்களைச் செய்து பரஸ்பரம் நன்மையைக் கொண்டும், பொறுமையைக் கொண்டும் உபதேசித்துக் கொள்வோரைத் தவிர' என்று கூறுகின்றான்.

**3- துணையுடனான நட்பு**

திருமண வாழ்வில் நட்பு மூன்று பகுதிகளாக பிரிகின்றது. முதலாவது, எமது துணையுடனான நட்பினை விருத்தி செய்துகொள்வது. நட்பின் அடிப்படையில் உருவான உறவின் மூலம் எமக்கு வெளியில் இருந்து வரும் பல்வேறு அழுத்தங்களை எதிர்கொள்ள முடியுமாக இருக்கும். எங்களுக்கிடையில் வேறுபாடுகள் இருந்தாலும் நாங்கள் நேர்மையாகவும் நம்பிக்கையோடும் மதிப்பளித்தும் ஏற்றுக்கொண்டும் நண்பர்களை கவனித்துக் கொண்டும் இருப்போம். இதுதான் நட்பின் வடிவம். எமது திருமணங்களை நாம் இதனை நோக்கி கொண்டு செல்ல வேண்டும். என்றாலும், துரதிஷ்டவசமாக திருமண வாழ்வை ஒரு சிறிய பகுதிக்குள் மக்கள் சிந்திக்கின்றார்கள். இஸ்லாமிய ஷரீஆ கணவனுக்கு தலைமை பொறுப்பை வழங்குகின்றது. எனவே, கணவன் நல்லொழுக்கம் கொண்டவராக இருக்க வேண்டும்.



எமது துணையுடன் நண்பர்கள் போல கலந்தாலோசிக்கின்ற பண்பை நாம் மேற்கொள்ளாவிட்டால் ஒழுங்கான முறையில் குடும்பத்தை வழிநடாத்த முடியாமல் இருக்கும். கணவன் குடும்பத்தின் தலைவன் என்பதன் கருத்து, அவன் ஒரு சர்வாதிகாரி என்பதல்ல. மாற்றமாக ஒரு மந்தை கூட்டத்திற்கு பொறுப்பாக இருக்கின்ற மேய்ப்பாளனைப் போன்றவன். எனவே, அவன் தன மந்தைகளுக்கு பொறுப்புக் கூற வேண்டியிருக்கிறது.

குடும்பத்தவர்களுடனான நட்பு: நட்பின் இரண்டாவது வடிவம் உறவினர்களுடன் நட்பை ஏற்படுதுதிக் கொள்வதாகும். திருமணம் முடித்தவர்களுக்கு பிரதானமாக பெற்றோர் அமைகின்றனர். அவர்களே சுக, துக்கங்களில் அதிகம் பங்களிக்கின்றனர். இங்கு நாம் அவசியம் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் ஒரே நாளில் எமது துணை எமது பெற்றோர்மீது அன்புகொள்ளும் என்று எதிர்பார்க்கக் கூடாது. அதற்கு சில காலம் செல்லலாம். இவ்விடயத்தில் நாம் யாரையும் நிர்ப்பந்திக்கக் கூடாது.

ஏனைய நண்பர்கள்: நட்பின் மூன்றாவது வடிவம் எம்மை சூழவுள்ள நண்பர்களாவர். எங்களுக்கு தனிப்பட்ட முறையில் நண்பர்கள் இருக்கலாம். ஆனால், இங்கு நாம் குறிப்பிடுவது குடும்ப ரீதியான நண்பர்களாகும். இதன் போது நாம் தெரிவு செய்யும் நண்பர்கள் அல்லாஹ்வைப் பயப்படுகின்ற தக்வா உடையவர்களாக இருக்க வேண்டும் என்பது முக்கியமானது.

**4- மகிழ்ச்சி:**

தம்பதிகள் சிரிப்பதற்கும் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் சேர்ந்து வேலை செய்வதற்கும் பழகிக் கொள்ள வேண்டும். நபி (ஸல்) அவர்கள் தமது மனைவிமாருடன் விளையாடியுள்ளார்கள். ஒரு பூந்தோட்டத்தில் சிறிது தூரம் ஒன்றாக நடப்பது கூட நல்லுறவை வளர்க்கும். அத்துடன் மகிழ்ச்சி ஏற்படுத்தக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளையும் பார்க்கலாம்.

**5- நிதி முகாமைத்துவம்**

அநேகமான குடும்பப்ப பிரச்சினைகளுக்கு பணம் பிரதான காரணமாக காணப்படுகின்றது, 80% ஆன விவாகரத்துகளுக்கு பணம் தொடர்பான பிரச்சினைகள் காரணமாக இருப்பதாக இத்துறைசார் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். எனவே, தம்பதியர் இணைந்து மாதாந்தம் அல்லது வருடாந்தம் வரவு செலவுத் திட்டமொன்றை தயாரித்துக் கொள்ள வேண்டும். அதனை இடைக்கிடையே மீள்பரிசீலனை செய்து கொள்ள வேண்டும்.

**6- குடும்பத்தை மதித்தல்**

குழந்தை வளர்ப்பு என்பது பெற்றோர் சரியான அறிவில்லாதவர்களாக இருக்கும்போது மிகவும் கஷ்டமானதாக அமைந்துவிடும். அது திருமண வாழ்க்கைக்குக் கூட மேலதிக அழுத்தத்தை வழங்கக் கூடியதாக மாறிவிடும். தம்பதியருக்கு முதுமையடைந்த பெற்றோர் இருந்தால் அவர்களை பராமரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். இதற்கும் பெற்றோர் தயார் இல்லாத நிலையில் இருந்தால் மன அழுத்தங்களுக்கு உட்பட வேண்டியிருக்கும். அத்துடன் தம்பதியரின் உடன்பிறந்தவர்களிடமும் நல்லுறவொன்றை பேணிக் கொள்ள வேண்டும்.

**7- சுதந்திரம்**

இஸ்லாத்தில் திருமணம் என்பது ஒரு பங்குடைமையாகும். மாற்றமாக அது ஓர் அடிமைத்துவம் அல்ல. மனைவி ஒரு அடிமை அல்ல. இங்கு சுதந்திரம் என்பது மேற்கத்தேயர்கள் கூறுவதுபோல எதனையும் செய்வதற்கான உரிமை அல்ல. மாற்றமாக தனது துணையுடன் கலந்துரையாடி அவளுடைய கருத்துக்களை மதிப்பதாகும்.

**8- எதிர்காலத்திற்காகத் திட்டமிடுதல்**

நல்ல தம்பதிகள் எப்போதும் தமது எதிர்பார்ப்புக்காக ஒன்றாகத் திட்டமிடுவார்கள். தமது நிதி மற்றும் ஏனைய தேவைகளுக்காக அவர்கள் ஒன்றாக பணியாற்றுவார்கள். அவர்கள் தமது எதிர்பார்க்கைகளை தமது குழந்தைகளோடும் கலந்துரையாடுவார்கள். இது உறவை மேம்படுத்துவதற்கு நிச்சயம் பங்களிக்கும்.

**9- அர்ப்பணிப்பு**

ஒருவர் மற்றவருக்காக எந்தவித பிரதியுபகாரத்தையும் எதிர்பார்க்காது அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். ஆனால், சில சுயநலவாதிகள் எதையேனும் எதிர்பார்த்தே எதையும் வழங்குவார்கள்.

**10- மன்னிப்பு வழங்கல்**

நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் அல்லாஹ் உங்களுக்கு மன்னிப்பளிப்பதை விரும்புகின்றீர்களா? எனக் கேட்டார்கள். அதற்கவர்கள் நிச்சயமாக யாரஸூலுல்லாஹ் என்று கூறினார்கள். அவ்வாறாயின் நீங்கள் ஒருவருக்கொருவர் மன்னிப்பு வழங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். திருமண வாழ்வில் மகிழ்ச்சி நிலைத்திருப்பதற்கான அடிப்படை மன்னிப்பாகும். நான் அல்லாஹ்விடம் எமக்கு மன்னிப்பை எதிர்ப்பார்ப்பதாக இருந்தால் நாம் அதனை வழங்குவதற்கு முதலாவது தயாராக இருக்க வேண்டும்.

**11- தவறுகளை மறந்துவிடுதல்**

கடந்த காலத்தில் நிகழ்ந்தவற்றை நாம் மன்னிப்பதோடு மட்டுமல்லாது அவற்றை மறந்துவிட வேண்டும். இதனை கைக் கொள்கின்ற தம்பதியினர் அவர்களுடைய வாழ்க்கையில் வெற்றிபெறுவார்கள்.


**12- தனித்துவங்களை ஏற்றுக்கொள்ளல்**

ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கேயுரித்தான ஆளுமைகளும் விருப்பு, வெறுப்புகளும் காணப்படும். நாம் அவற்றை மதிக்க வேண்டும். நாம் அவ்வாறு நடந்து கொள்ளாதபோது தனிநபர்கள் கொண்டுள்ள வித்தியாசமான பண்புகள் எமக்கு மன அழுத்தத்தையும் மன நெருக்கடியையும் ஏற்படுத்தும்.

இவற்றுடன் எமது துணைகள் மீது நம்பிக்கைக் கொண்டிருப்பதும் நேர்மையாக நடந்துகொள்வதும் உண்மையாக நடந்துகொள்வதும் அவர்களுக்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் முக்கியமானதாகும்.

**ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கேயுரித்தான ஆளுமைகளும் விருப்பு, வெறுப்புகளும் காணப்படும். நாம் அவற்றை மதிக்க வேண்டும். நாம் அவ்வாறு நடந்து கொள்ளாதபோது தனிநபர்கள் கொண்டுள்ள வித்தியாசமான பண்புகள் எமக்கு மன அழுத்தத்தையும் மன நெருக்கடியையும் ஏற்படுத்தும்.**

(இக்கட்டுரை கனடாவைச் சேர்ந்த ஸஈனா ஸித்தீக்கி என்பவரால் எழுதப்பட்ட மகிழ்ச்சிகரமான குடும்ப திருமண வாழ்வின் அடிப்படைகள் என்ற கட்டுரையை தழுவி எழுதப்பட்டது. ஸஹீனா ஸித்தீக்கி கனடாவின் இஸ்லாமிய சமூக சேவைகள் அமைப்பின் ஓர் அங்கத்தவராக இருப்பதுடன் பல்வேறு சமூக சேவை பணிகளிலும் ஈடுபடுபவராக காணப்படுகின்றார்.)






# ஆழ்ந்த இறை தொடர்பு: தாஈயின் கட்டுச் சாதம்

அல்லாஹ்வின்பால் அழைப்பு விடுக்கின்ற தஃவாப் பணியை விட சிறப்பானதொரு செயற்பாடு இவ்வுலகில் கிடையாது. தஃவாப் பணியில் செலவிடப்படுகின்ற சொல் மிகச் சிறந்த சொல். அதற்காக செலவிடும் நேரம் மிகச் சிறந்த நேரம். அதற்காக செலவிடும் செல்வம் மிச் சிறந்தது செல்வம். அதற்காக செய்யும் தியாகம் மிகச் சிறந்த தியாகம்.

> **தாஈக்களின் தலைவரான நபி (ஸல்) அவர்கள் கூட ஆழ்ந்த இறை தொடர்பைப் பேணி வந்துள்ளமையை அன்னவர்களது ஸீராவை படிக்கும்போது மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். தனது வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் மூன்றிலொரு பகுதிக்கும் அதிகமான நேரத்தை தனக்கும் தனது இரட்சகனுக்குமிடையிலான தொடர்புக்காகவே நபிகளார் செலவிட்டார்கள்.**

இப்பணி அல்லாஹ்வின் அடியார்களில் மிகவும் சிறப்புக்குரியவர்களான ரஸூல்மார்களது பணி. அவர்களுக்குப் பின் வந்த மனத்தூய்மையோடு உழைத்த ரப்பானீக்களான ஆலிம்களது பணி. இப்பணி நிச்சயமாக கண்ணியமும் கௌரவமும் மிக்கது. தூய்மையோடு இரவு பகலாக அதற்காக உழைப்போருக்கே அந்த கண்ணியமும் கௌரவமும் உரித்தாகிறது.

அல்லாஹ்வின் பாதையில் அழைப்பு விடுக்கின்ற ஒரு தாஈ எப்பொழுதும் தூய்மையானவராக இருக்க வேண்டும். அதாவது அவரது அகமும் புறமும் தூய்மை மிக்கதாகக் காணப்படல் வேண்டும். தான் அழைக்கும் மக்களை பரிவோடு நோக்கும் உள்ளம் கொண்டவராகவும் அம்மக்களை அரவணைப்பவராகவும் அவர் காணப்படல் வேண்டும்.

தனது ரப்புடனான தாஈயின் தொடர்பு எப்பொழுதும் வலுவானதாகக் காணப்படல்



வேண்டும். அத்தொடர்பு எக்கனமும் அறுந்துவிடல் கூடாது. தனக்குத் தேவையான கட்டுச் சாதனத்தை ஆழ்ந்த இறை தொடர்பு மூலமே அவர் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு வாகனம் சீராக இயங்குவதற்கு எரிபொருள் எவ்வளவு அத்தியவசியமோ அவ்வாறே ஒரு தாஈ தன் தஃவாப் பயணத்தினை சீராக மேற்கொள்ள ஆழ்ந்த இறை தொடர்பு என்ற எரிபொருள் மிக மிக அவசியமானதாகும்.

அல்லாஹ்வுடனான ஆழ்ந்த தொடர்பு மூலம் கிடைக்கப் பெறும் இறையச்சம், இக்லாஸ் எனும் மனத் தூய்மை, ஆழமான ஞானம் போன்ற அம்சங்கள் மூலம் ஒரு தாஈ தனது தஃவாப் பணியை திறம்பட செய்திட முடியும். அவ்வாறான பண்புகள் அவரில் பிரதிபலிக்கும் போது அவர் பேசும் வார்த்தைகள், எழுதும் எழுத்துக்கள் மக்கள் மனங்களில் ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்தும்.

தாஈக்களின் தலைவரான நபி (ஸல்) அவர்கள் கூட ஆழ்ந்த இறை தொடர்பைப் பேணி வந்துள்ளமையை அன்னவர்களது ஸீராவை படிக்கும்போது மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். தனது வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் மூன்றிலொரு பகுதிக்கும் அதிகமான நேரத்தை தனக்கும் தனது இரட்சகனுக்குமிடையிலான தொடர்புக்காகவே நபிகளார் செலவிட்டார்கள்.

முஷ்ரிக்குகளிடமிருந்து வந்த கடுமையான துன்புறுத்தல்கள், சோதனைகளின் போது வலிமையோடு அவற்றுக்கு முகங்கொடுக்கவும் அவர்களோடு வீராவேஷத்தோடு போராடவும் உறுதுணை புரிந்த காரணிகளுள் நபி (ஸல்) அவர்கள் பேணி வந்த அல்லாஹ்வுடனான ஆழ்ந்த இறை தொடர்பு மிக முக்கிய பங்கு வகித்தது.

தனது இரட்சகனின் அன்பையும் அருளையும் என்றும் எதிர்பார்த்திருப்பதும், தனது செயற்பாடுகள் அங்கீகரிக்கப் பட்டிருக்குமோ என்ற அச்ச உணர்வும், தனக்கு உயர்ந்த கூலிகளை அவன் தருவான் என்ற ஆசையும் எதிர்பார்ப்பும் ஒரு தாஈயிடம் காணப்படுவதுடன் அல்லாஹ்வின் அருளையும் உதவியையும் என்றும் நாடியவராகவே அவர் தனது நீண்ட தஃவாப் பாதையில் பயணிக்க வேண்டும்.

அவ்வாறே அல்லாஹ்வின் அடியார்களது உள்ளங்களைத் தனக்காக திறந்துத்தர அருள் பாலிக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் "வல்ல அல்லாஹ்வே! எமது செயற்பாடுகளை அங்கீகரிப்பாயாக! நீயே மிகவும் ஞானம் மிக்கவனாகவும் மிகவும் செவியுறுபவனாகவும் இருக்கிறாய்" என்ற பிரார்த்தனையையும் எப்பொழுதும் ஒரு தாஈயின் நாவு மொழிந்துகொண்டே இருக்க வேண்டும்.

அல்லாஹுதஆலா அல்குர்ஆனில் குறிப்பிடுவது போன்று "இன்னும் இவ்வேதத்தைப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொணடு தொழுகையையும் நிலைநாட்டி வருகின்றார்களே அத்தகைய நல்லோர்களின் கூலியை நிச்சயமாக நாம் வீணாக்க மாட்டோம்." (அல் அஃராப்: 170) என்ற சுபசோபனத்தைப் பெற்றுக் கொண்ட சீர்திருத்தவாதிகளது பாதையில் அல்லாஹுதஆலா தன்னையும் செலுத்திவிட வேண்டும் என்ற பேரவா ஒரு தாஈயிடம் என்றும் நிலை கொண்டிருக்க வேண்டும்.

நாம் இவ்விடத்தில் தாஈ எனக் குறிப்பது பள்ளிவாசல்களில் கதீபாக, இமாமாகக் கடமையாற்றுபவர்களையும் சிறந்த மார்க்கப் பேச்சாளர்களையும் மாத்திரமல்ல. ஏனெனில், இஸ்லாமிய அழைப்புப் பணி என்பது கதீப் மார்களுக்கும் ஆலிம்களுக்கும் சிறந்த மார்க்கப் பேச்சாளர்களுக்கும் மாத்திரம் உரிய பணியன்று.

> **தான் கொண்டிருக்கும் கொள்கையை ஆழமாக விசுவாசிக்கின்ற, நம்புகின்ற அதற்காக தனது பேச்சு, எழுத்து, நடத்தை, பண்பாடு, பழக்கவழக்கங்கள் அனைத்தினூடாகவும் மக்களை அழைக்கின்ற ஒருவரையே நாம் இங்கு தாஈ எனக் குறிக்கிறோம். அவர் தஃவாவுக்காக எத்தகைய சாதனங்களையெல்லாம் பயன்படுத்த முடியுமோ அவையனைத்தையும் அவர் அதன் பரவலுக்காக பயன்படுத்தும் ஆற்றலையும் திறனையும் கொண்டிருப்பது மிக மிக இன்றியமையாததாகிறது.**

இஸ்லாத்தின் தூதை யாரெல்லாம் சுமந்திருக்கின்றார்களோ அவர்கள் அனைவர் மீதும் இப்பணி-அவர்களது தரத்திற்கேற்ப, நிலைமைக்கேற்ப- கடமையாகிறது. முஸ்லிமான ஒவ்வொருவரும் இக்கடமையை ஏதோவொரு வகையில் செய்தேயாக வேண்டும். அது இக்கடமையை நேரடியாகச் செய்தலாக அமையும் அல்லது இம்மகத்தான அழகிய பணியை செய்வதற்கு உதவி புரிவதாக அமைய முடியும்.

'தஃவா' எனும் இப்பணியை அதன் ஆழ அகலத்தோடு நோக்கும்போது அதற்காக உழைக்கும் 'தாஈ' என்பவர் சமூகக் களத்தில் தற்போதிருக்கும் நிலைமையை விட வித்தியாசமானதொரு பணியையே அவர் செய்தாக வேண்டும் என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கும்.

தான் கொண்டிருக்கும் கொள்கையை ஆழமாக விசுவாசிக்கின்ற, நம்புகின்ற அதற்காக தனது பேச்சு, எழுத்து, நடத்தை, பண்பாடு, பழக்கவழக்கங்கள் அனைத்தினூடாகவும் மக்களை அழைக்கின்ற ஒருவரையே நாம் இங்கு தாஈ எனக் குறிக்கிறோம். எனவே, அவர் தஃவாவுக்காக எத்தகைய சாதனங்களையெல்லாம் பயன்படுத்த முடியுமோ அவையனைத்தையும் அவர் அதன் பரவலுக்காக பயன்படுத்தும் ஆற்றலையும் திறனையும் கொண்டிருப்பது மிக மிக இன்றியமையாததாகிறது.

இவ்வகையில் நோக்குமிடத்து தஃவா எனும் இப்புனிதப் பணியை செய்யக் கிடைப்பது பாக்கியமாகவும், இறை அருளாகவுமிருப்பது போலவே அப்பணியை திறம்பட மேற்கொள்வதற்கான ஆற்றல்களையும் திறமைகளையும் வளர்த்துக் கொள்வதுடன் நாம் மேலே குறித்துக் காட்டிய பண்புகளையும் தனக்குள் ஏற்படுத்திக் கொள்வது ஒரு தாஈயின் தார்மீகப் பொறுப்பாக மாறுகிறது.

# நான் ஏன் முஸ்லிமானேன்?

## Harry E. Heinkel

ஆரம்பத்தில் நான் பிறப்பு வழி கிறிஸ்தவனாக இருந்தேன். பொதுவாக சிறு பராயத்தில் நாம் எமது பெற்றோரின் மதத்தையே பின்பற்றி வருகிறோம். காலப் போக்கில் அம்மதமானது எம்மோடு ஒன்றித்து விடுகிறது. எனினும், அனைத்து விடயங்களையும் ஆராய்ச்சிக்குட்படுத்துகின்ற நாம் இந்த மத நம்பிக்கையை ஆராய்ச்சி செய்வதை விட்டும் தவறிவிடுகிறோம். குறிப்பாக கிறிஸ்தவ மதத்தை அவ்வாறு யாரும் ஆய்வுக்குட்படுத்துவதில்லை.

கிறிஸ்தவ மதத்தின் வேத நூலான பைபிளை நான் மிக அதிகமான தடவைகள் வாசித்திருக்கிறேன். பைபிளில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள தகாப்புணர்ச்சி, கற்பழிப்பு மற்றும் ஏனைய ஒழுக்கக் கோடுகளுடன் தொடர்பான, இரத்தத்தை உறையவைக்கும் கொலைகள், சூறையாடல் சம்பவங்களைப் பார்த்து அதனை வாசிக்கின்ற ஒருவர் வெறுப்படையாமல் இருப்பாரா என்று சந்தேகிக்கின்றேன்.

பெரும்பாலும் எல்லாக் கிறிஸ்தவர்களின் வீடுகளிலும் பைபிள்கள் காணப்படுகின்றன. என்றாலும் அவை அங்கு அலங்காரப் பொருட்களாகவே இருந்து வருகின்றன. எனவேதான் (charles Francis Potter) என்ற எழுத்தாளர் The Story of Religion என்ற தனது நூலிலே பின்வருமாறு கூறுகிறார். ''அமெரிக்காவிலே யாராலுமே அறியப்படாத ஒரு நூல் இருக்குமாயின் அது கிறிஸ்தவ பைபிளாகத்தான் இருக்க முடியும். ஆனால், அங்கு அனைவராலும் வாசிக்கப்படுகின்ற ஒரு நூல் அல்குர்ஆன் மாத்திரமே.''

**மேற்கில் இஸ்லாம் நன்கு அறியப்பட்டிருக்கின்றது என்ற விடயத்தை கூற நான் தயங்க மாட்டேன். அது தன்னை பின்பற்றுவோர் பெற்றுள்ள வெற்றிகள் மூலம் நாகரிக உலகை பிரம்மிக்கச் செய்திருக்கிறது. எனினும், இன்று இஸ்லாம் பற்றி வெளி வருகின்ற புத்தங்களுள் பார பட்சமின்றி நடுநிலமை மனோ நிலையில் நின்று எழுதப்பட்ட புத்தகங்களைக் காண்பது கடினமாகவே உள்ளது. எவ்வாறாயினும், காலப்போக்கில் இந்த நிலமை சீராகும் என்று உறுதியாக நம்புகிறேன்.**

பைபிளானது யாராலும் அறியப்படாத நூலாக இருப்பதானது கிறிஸ்தவத்திற்கு ஒரு பெரும் அனுகூலமாகவே இருக்கின்றது. ஏனெனில், கிறிஸ்தவத்திலிருந்து நான் தூரமாவதற்குக் கூட பைபிளே மூல காரணமாகும். கிறிஸ்தவத்தின் மீதான முழு நம்பிக்கையையும் இழந்தவுடன் உலகின் ஏனைய மதங்களையும் சித்தாந்தங்களையும் படிக்க ஆரம்பித்தேன். அந்த சித்தாந்தங்களானது படைப்பாளன் பற்றி அறிதல்; அசாத்தியமானது எனும் கொள்கையையும் நாஸ்தீகவாதக் கொள்கையையும் அத்திவாரமாகக் கொண்டிருந்தன.

எவ்வாறாயினும் புலன் இன்பங்களிலும் அக்கிரமச் செயல்களிலும் தீய செயல்களிலும் ஈடுபடாத ஒரு படைப்பாளன் இருக்கிறான். அவன்தான் அல்லாஹ் என்ற உள்ளுணர்வானது பெரும்பாலும் அனைத்து மனிதர்களின் உள்ளங்களிலும் மறைந்திருக்கிறது. எனவே, மதங்கள் பற்றிய எனது ஆராய்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இஸ்லாம் காரண, காரிய விதிகளுக்கு உட்பட்டதாகும். மேலும் அது சர்வமும் துக்கம் (இந்த உலகில் பிறந்ததே பாவம். எனவே இதிலிருந்து மோட்சம் பெறுவதற்கான ஒரே வழி நிர்வாண நிலையடைதல் மாத்திரமே) எனும் பௌத்த மதத்தின் கொள்கையுடன் முரண்படுகின்றது.

மேலும் மூதாதையர்களையும் இயற்கையையும் வழிபடுகின்ற ஜப்பானின் புராதன மதங்களிலொன்றான Shintoism ஐயும் சீன Confusious சித்தாந்தத்தையும் முழுமையாக நிராகரிக்கிறது. மாத்திரமன்றி, அது ஒரு சடவாத மார்க்கமல்ல. இஸ்லாம் மக்களை நோக்கி அறிவின்பால் அழைப்பு விடுக்கிறது. ஆனால் கிறிஸ்தவ மதமானது அபிவிருத்தியினதும் நாகரிகத்தினதும் வளர்ச்சிப் பாதையில் பல்வேறு முட்டுக் கட்டைகளை இட்டு வந்திருக்கின்றது என்ற விடயம் வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டும்போது தெளிவாகின்றது. இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் கூட தமது ஹதீஸ் ஒன்றில் பின்வருமாறு கூறினார்கள்:

''யார் அறிவைத் தேடி ஒரு பாதையில் பயணிக்கிறாரோ அல்லாஹ் அவருக்கு சுவனத்தின் பாதையை இலகுபடுத்திக் கொடுப்பான்.'' அறிவைத் தேடுவோரின் பால் மலக்குமார்கள் தமது இறக்கைகளை விரிக்கின்றனர். (நீட்டுகின்றனர்). மேலும் ஒரு அறிஞரானவர் தனித்து நின்று வணக்கம் புரிகின்ற ஒரு வணக்கவாளியை விட பெறுமதியான வராகக் கணிக்கப்படுகிறார். அவர் நட்சத்திரங்களுக்கு மத்தியில் முழு நிலவைப் போன்று ஜொலிக்கின்றார்.

மேற்கில் இஸ்லாம் நன்கு அறியப்பட்டிருக்கின்றது என்ற விடயத்தை கூற நான் தயங்க மாட்டேன். அது தன்னை பின்பற்றுவோர் பெற்றுள்ள வெற்றிகள் மூலம் நாகரிக உலகை பிரம்மிக்கச் செய்திருக்கிறது. எனினும், இன்று இஸ்லாம் பற்றி வெளி வருகின்ற புத்தங்களுள் பார பட்சமின்றி நடுநிலமை மனோ நிலையில் நின்று எழுதப்பட்ட புத்தகங்களைக் காண்பது கடினமாகவே உள்ளது. எவ்வாறாயினும், காலப்போக்கில் இந்த நிலமை சீராகும் என்று உறுதியாக நம்புகிறேன்.

இந்தக் கட்டுரையை முடிவுக்குக் கொண்டுவரும் இக்கணத்தில், - வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை - என்ற உயர் கலிமாவை மொழிகின்ற மில்லியன் கணக்கான மக்களோடு நானும் இணைந்து கொள்வதில் பெருமைப்படுகின்றேன்.

தமிழில்: வை.எம். அரூஸ்
ஜாமிஆ நளீமிய்யா

# இஸ்லாத்தில் குடும்பம்

இஸ்லாத்தில் திருமணம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே செய்யப்படுகின்ற அருள்மிக்க ஒப்பந்தமாகும். அதன் மூலமாகவே இருவரில் ஒருவர் மற்றவருக்கு ஆகுமாக்கப்படுவதன் காரணமாக நீண்ட ஒரு வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்குகிறார்கள்.

இதன்காரணமாக ஒருவருக்கொருவர் நேசம் கொண்டவர்களாகவும், அன்பு கொண்டவர்களாகவும் புரிந்துணர்வு, உதவி, ஒத்தாசை கொண்டவர்களாகவும் ஒருவர் மற்றவரைக் கொண்டு நிம்மதியையும் அமைதியையும் பெறுகின்றவர்களாகவும் இருக்கின்றனர்.

அல்லாஹுதஆலா அல்குர்ஆனில் கூறும்போது ''நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள் மனைவிகளை உங்களிலிருந்தே அவன் உற்பத்தி செய்து உங்களுக்கிடையில் அன்பையும் நேசத்தையும் உண்டுபண்ணியிருப்பது அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும். (30: 21)

இவ்வாறு இறைவனால் வழங்கப்பட்டு, இறையச்சம் கொண்ட இஸ்லாமிய குடும்பப் பாசறையில் வளர்கின்ற பிள்ளைகள் ஈமானிய வழிகாட்டலுடன் வளர்த்தெடுக்கப்பட்டு இஸ்லாமிய சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் பெரும் பங்காற்றுகிறார்கள். அவ்வாறு கட்டியெழுப்புவது எமது கடமையும்கூட.

இஸ்லாமிய குடும்பத்தின் உறுப்பினர்கள் இறையச்சம் உள்ளவர்களாகவும் நன்மையில் ஒருவருக்கொருவர் உதவக்கூடியவர்களாகவும் நன்மையான விடயங்களுக்காக போட்டி போட்டுக் கொண்டு ஒருவரையொருவர் முந்துபவர்களாகவும் இருப்பார்கள். அவ்வாறே இறையச்சம் உள்ள ஒழுக்கமுள்ள பெண்ணே ஒரு முஸ்லிம் குடும்பத்துக்கு அடிப்படைத் தூணாக விளங்குகிறாள்.

உருவாக்குவதில் ஒரு பெண்ணின் பங்களிப்பு அளப்பரியது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்; ''உலகிலுள்ள அனைத்தும் செல்வமாகும். அந்த செல்வத்திலேயே மிகச் சிறந்த செல்வம் நல்லொழுக்கமுள்ள பெண்ணாவாள்.''

அல்லாஹ் ஆண்களுக்கு வழங்குகின்ற அருட்கொடைகளிலேயே பெரிய அருட்கொடை நல்லொழுக்கமுள்ள பெண் அமைவதாகும்.



அதனால்தான் மௌலானா மௌதூதி (றஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்; ''ஒரு பெண் சீர்பெற்றுவிட்டால் ஒரு சமூகம் சீர்பெற்றுவிடும் என நான் உத்தரவாதம் தருகிறேன்''.

ஆகவே, ஒரு குடும்பத்தின் சீரான வாழ்க்கைக்கு அந்தக் குடும்பத்தின் பெண்ணின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாகும். சிறந்த எதிர்கால சந்ததிகளை உருவாக்குவதில் ... அதன் மூலம் அடைகின்ற ஆறுதலுக்கும் ஆதரவுக்கும் இந்த உலகில் எந்தச் செல்வமும் ஈடாகாது. எனவே, சிறந்ததொரு குடும்பம் அமைய நற்குணமுள்ள பெண் அவசியப்படுவது போல சிறந்த ஒரு ஆணின் பங்களிப்பும் அவசியமானதாகும்.

பாஹிமா பர்வின்
விருதோடை

# சிந்தனை வேட்டை

இமாம் இப்னுல் ஜௌஸி — தமிழில்: ஹம்ஸாவி

## உணர்ந்துகொள்ளாத தண்டனைகள்

தண்டனைகளுள் மிகப் பெரியது தண்டிக்கப்படுபவன் தண்டனையை உணராதிருப்பதாகும். இதைவிடவும் மிகப் பாரியது தண்டனையின் மூலம் மகிழ்ச்சியடைவதாகும். ஹராமான செல்வத்தைக்கொண்டு மகிழ்ச்சியடைதல், பாவங்களைச் செய்யக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைதல் போன்றவற்றை உதாரணமாகக் கூறலாம்.

யாருடைய நிலை இப்படியிருக்கின்றதோ, அவர் எந்தவொரு இறை கட்டுப்படலின் மூலமும் வெற்றிபெறப்போவதில்லை.

அதிகமான உலமாக்கள், உலகப்பற்றற்ற நிலையில் வாழ்வோரது நிலைகள் பற்றி நான் சிந்தித்திருக்கிறேன். தாம் உணர்ந்துகொள்ளாத தண்டனைகளில் அவர்கள் இருப்பதனை நான் கண்டேன். அவற்றில் பெரும்பான்மையானவை அவர்களது தலைமைத்துவ வேண்டுதலினால் ஏற்பட்டதாகும்.

அவர்களுள் ஆலிம்; அவரது தவறு சுட்டிக்காட்டப்பட்டால் கோபமடைகிறார். உபதேசி தனது உபதேசத்தில் போலியாய் நடிக்கிறார். உலகப்பற்றற்றவன் நயவஞ்சகனாய் முகஸ்துதி கொண்டவனாய் இருக்கிறான். அவர்களது தண்டனைகளுள் முதன்மையானது; படைப்பினங்களில் (மனிதர்கள்) கவனத்தைச் செலுத்தி சத்தியத்தைவிட்டும் பொடுபோக்காய் இருப்பதாகும்.

யாருக்கு அவரது தண்டனை மறைக்கப்படுகிறதோ அவரை விட்டும் இறை சம்பாஷணையின் சுவை, வணக்கத்தின் இன்பம் எடுக்கப்பட்டுவிடுகிறது.

என்றாலும், முஃமினான ஆண்கள், பெண்கள் மூலம் அல்லாஹ் இப்பூமியைப் பாதுகாக்கின்றான். அவர்களது அந்தரங்கம், அவர்களது வெளிப்படையைப் போன்றது. இல்லை, அதைவிடத் தெளிவானது, சுவையானது. அவர்களது உயர்ந்த இலட்சியத் தாகம் வானை எட்டக்கூடியது. இல்லை, அதைவிட உயர்வானது.

# வெற்றி பெறுவதற்கு...

1. மாதம் ஒரு புத்தகமாவது படியுங்கள்.
2. ஆரோக்கியம் தராத உணவு வகைகள் எவ்வளவு சுவையாக இருந்தாலும் உண்ணாதீர்கள்.
3. உங்களுக்கு என்ன வயதானாலும் பரவாயில்லை. விருப்பமான துறைகளில் நடக்கும் பயிற்சி வகுப்புகளில் பங்கெடுங்கள்.
4. வருமானத்திற்கான வழி மிகவும் முக்கியம். அதில் எந்த சமரசமும் செய்து கொள்ளாதீர்கள்.
5. முடிந்தவரை கடன்களைக் கட்டி விடுங்கள். வேண்டாத செலவுகளை நிறுத்தி விடுங்கள்.
6. அதிகாலையில் எழுந்து விடுங்கள். ஒரு நாளின் அலுவல்களை முன் கூட்டியே திட்டமிடுங்கள்.
7. முப்பதுகளைக் கடக்கும் முன், மற்றவர்கள் சொல்லாமலே சர்க்கரை, உப்பு ஆகியவற்றை கணிசமாகக் குறைத்து விடுங்கள். முடிந்தால் தவிர்த்து விடுங்கள்.
8. எக்காரணம் கொண்டும் காலை உணவைத் தவிர்க்காதீர்கள்.
9. நிற்கையில் நேராக நில்லுங்கள். பேசுகையில் கண்களைப் பார்த்துப் பேசுங்கள்.
10. புன்னகை முகமும் இதமான பேச்சும் உங்கள் இயல்புகளாகவே இருக்கட்டும்.
11. வாரம் மூன்று முறையாவது உடற்பயிற்சி செய்யுங்கள். முடிந்த வரை நடந்து செல்லுங்கள்.
12. சிறு குறிப்போ, கடிதமோ, கட்டுரையோ, பிழையில்லாமல் எழுதுவதில் கவனம் செலுத்துங்கள்.
14. அரட்டைப் பேச்சுக்களை தவிர்த்து விடுங்கள்.
15. மற்றவர்களின் தவறுகளை மன்னியுங்கள்.
16. உங்கள் வாழ்வின் ரகசிய அம்சங்கள் முடிந்த வரை குறைவாகவே இருக்கட்டும்.
17. குடும்பம் என்கிற எல்லையைக் கடந்து, பொது அமைப்பு எதிலாவது ஈடுபடுங்கள்.
18. மாதம் ஒரு முறையாவது உங்கள் தகுதிகளையும் தவறுகளையும் பட்டியல் இடுங்கள்.
19. மற்றவர்களைப் பேச விடுங்கள். அவர்கள் மேல் உங்களுக்கு இருக்கும் அக்கறையை உணர்த்துங்கள்.
20. உங்கள் நேரத்திற்கும், மற்றவர்களின் நேரத்திற்கும் உரிய மரியாதை கொடுங்கள்.
21. உங்களிடம் இல்லாத தகுதிகள் இருப்பதாக நம்பவோ, நம்ப வைக்கவோ முயலாதீர்கள்.
22. உங்கள் திறமைகளை நீங்களே விவரித்துக் கொண்டிராதீர்கள். உரிய நேரத்தில் நிரூபியுங்கள்.
23. மேடைக் கூச்சம், கேமரா கூச்சம் இல்லாமல் இருங்கள்.
25. உங்கள் தனிப்பட்ட நம்பிக்கைகளையும் பழக்கங்களையும் மற்றவர்கள் மேல் திணிக்காதீர்கள்.


# ஊனம் ஒருதடையல்ல


வாழ்க்கையில் சாதிப்பதகு ஊனம் ஒரு தடையல்ல என்பதினை நிரூபிக்கும் பல விதமான மனிதர்களை பற்றி நாம் கேள்விபட்டுள்ளோம். அத்தகைய ஓர் சிறுவனைப் பற்றிய சுவாரஸ்யமான செய்தியே இது.

அமெரிக்காவைச் சேர்ந்த 9 வயதான கோடி மெக்கஸ் லேண்ட் என்ற அச் சிறுவனிடம் சுமார் 20 செயற்கைக் கால்கள் உள்ளன.

இவை அனைத்தும் வெவ்வேறு விதமான போட்டிகளில் பங்கு பற்றுவதற்காக அச்சிறுவன் தன்னிடம் வைத்துள்ளவையாகும்.

இதுவரை பல விளையாட்டுக்களில் பங்கேற்று பதக்கங்களை வென்றுள்ளான் கோடி.






இவன் குழந்தையாக இருக்கும் போதே இவனது கால்கள் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளன.

எனினும் தன்னம்பிக்கையை மட்டும் இழக்காத கோடி தனது முயற்சி மூலம் தன்னால் பல விளையாட்டுக்களில் சாதிக்கமுடியும் என்பதினை நிரூபித்துள்ளான.

இவனது வெற்றிகளுக்கான இன்னுமோர் முக்கிய காரணம் இவனது பெற்றோராகும். அவர்களது ஊக்குவிப்பே இத்தகைய ஓர் தன்னம்பிக்கை மிக்க ஒருவனாக மாற வழிவகுத்துள்ளது.

கோடியின் தற்போதைய இலக்கு உலக ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் போட்டிகளில் ஓர் தங்கப் பதக் கத்தை வெல்வதே ஆகும்




# தண்ணீர் ஆச்சரியமான தகவல்கள்



ஐ.நா. அமைப்பு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.


**ஒவ்வொரு 20 நிமிடத்திற்கும் ஐந்து வயதிற்குட்பட்ட ஒரு குழந்தை, தண்ணீர் சம்பந்தமான நோயினால் இறந்து போகின்றது.** கெட்டுபோன மற்றும் மாசடைந்த தண்ணீரை பயன்படுத்துவதால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்ற அனைத்து வகையான காரணங்களாலும் ஏற்படும் உயிரிழப்புகளை விட அதிகம்.

சுத்திகரிக்கப்படாத கழிவுநீர், தொழிற்சாலை கழிவுகள் மற்றும் வேளாண்மை கழிவுகளால் நீர் ஆதாரங்களை நாம் அன்றாடம் மாசுபடுத்தி வருகிறோம். தினமும் கிட்டத்தட்ட 20 லட்சம் தொன் கழிவுகள் ஆறுகள் மற்றும் கடல்களில் கலக்கப்படுகின்றன.

**இந்த கழிவுகளே சுற்றுச்சூழல் மாசுபடுவதற்கும்,** பல்வேறு நோய்கள் பரவுவதற்கும் ஆதாரமாக விளங்குகின்றன. இதனால் பெரிதும் பாதிக்கப் படுபவர்கள் ஏழை மக்களே ஆவர். குடிநீர் தட்டுப்பாடு, சுற்றுச்சூழல் கேடு மற்றும் சுகாதாரமற்ற கழிப்பிட வசதிகள் போன்ற பிரச்னைகள் ஏழைகளையே பெருமளவில் பாதிக்கின்றன.

ஆண்டொன்றுக்கு 18 லட்சம் குழந்தைகள் பாதுகாப்பற்ற குடிநீரைப் பயன்படுத்துவதால் உண்டாகும் நோய்களால் மட்டும் இறக்க நேரிடுகிறது.

# எமது செவித் திறனின் கூர்மை




ஒலி என்பது டெசிபள் (decibel-dB) எனும் அலகால் அளவிடப்படுகிறது. மிகக் குறைந்த அளவிலான உறுமல் முதற்கொண்டு மிக உயர்ந்த அளவுடனான சீழ்க்கை ஒலி வரை பலவகையான ஒலிகளை நாம் கேட்கிறோம்.

மிகக் குறைந்த அளவிலான ஒலிகள் சில நேரங்களில் மார்பில் உணரப்படும்; மிக ஓங்கிய கீச்சு ஒலிகள் சில சமயம் நமக்கு கேட்காமலே போகக்கூடும். மனிதர்களுக்குக் கேட்கக் கூடிய வெளவாலின் கிரீச்சிடும் ஒலியை பலர் கேட்க முடியாமல் இருப்பதுண்டு.

நமது கேட்கும்திறன் நாய் போன்ற சில விலங்குகளுடன் ஒப்பிடுகையில், கூரிய திறன் கொண்டதல்ல. மனிதர்களால் கேட்கவே இயலாத ஒலியையும் கூட கேட்கக் கூடிய திறன் நாய்களுக்கு உண்டு.

நாம் விமானத்தில் பறந்து செல்லும் போது, நமது செவியில் உள்ள காற்று விரிவடைவதால் சிறு வெடிப்பொலியைக் கேட்பதுண்டு. அத்தகைய ஒலி உண்டாகாவிடில், செவியில் உள்ள காற்று விரிவடைந்து செவிப் பறையைக் கிழித்து விடும்; அதனால் கேட்கும் திறனை இழக்க நேரிடும்.


நாம் கேட்கும் ஒலியை அளவிட டெசிபிள் எனும் அலகு பயன்படுத்தப்படுகிறது எனப் பார்த்தோம். பறவையின் ஒலி 30 டெசிபள் அளவில் இருக்கும்; நமது உரையாடல் 50 டெசிபள் அளவிலும், விமானத்தின் ஒலி 140 டெசிபள் அளவிலும், அணுகுண்டின் வெடிப்பொலி 200 டெசிபள் அளவிலும் இருக்கும்

## மஸ்ஜிதிற்கு செல்லும்போது

اَللَّهُمَّ اجْعَلْ فِي قَلْبِي نُوْرًا ، وَفِي لِسَانِي نُورًا، وَاجْعَلْ فِي سَمْعِي نُورًا
وَاجْعَلْ فِي بَصَرِي نُورًا، وَاجْعَلْ مِنْ خَلْفِي نُورًا، وَمِنْ أَمَامِي نُورًا، وَاجْعَلْ مِنْ
فَوْقِي نُورًا ، وَمِن تَحْتِي نُورًا .اللَّهُمَّ أَعْطِنِي نُورًا

( رواه البخاري ومسلم )

யா அல்லாஹ் எனது உள்ளத்தில் ஒளியை ஏற்படுத்தி விடுவாயாக. எனது நாவில் ஒளியை ஏற்படுத்திவிடுவாயாக. நான் செவிமடுப்பவற்றில் ஒளியை ஏற்படுத்திவிடுவாயாக. எனது பார்வையை ஒளியாக்கிவிடுவாயாக. எனக்கு பின்னாலிருந்து ஒளியை ஏற்படுத்திவிடுவாயாக. எனக்கு முன்னால் இருந்தும் ஒளியை ஏற்படுத்தி விடுவாயாக. எனக்கு மேலாலும் கீழாலும் ஒளியை ஏற்படுத்திவிடுவாயாக. யா அல்லாஹ் எனக்கு ஒளியை வழங்கிவிடுவாயாக.



# வாழ்வே வணக்கம்

அல்லாஹ் மனிதனை படைத்ததன் நோக்கம் அவனை வணங்கி வழிபடுவதற்காக ஆகும். ஆனால், மனிதன் அந்த நோக்கத்தை மறந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறான். எம்மில் பலர் வணக்கம் என்றால் வெறுமனே தொழுவதும், குர்ஆன் ஓதுவதும், தஸ்பீஹ் செய்வதும், நோன்பு பிடிப்பதும் மட்டும்தான் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இந்த குறுகிய எண்ணத்தை கைவிட்டு சற்று எமது பார்வையை விரிவாக்கிப் பார்க்க வேண்டும். அப்போது எம் வாழ்வின் ஒவ்வொரு அசைவையும் வணக்கமாக மாற்றிக் கொள்ள முடியும். அது எப்படி சாத்தியமாகும் என்று நீங்கள் வினா எழுப்பலாம்.

உண்மையில் வணக்கம் என்றால் அல்லாஹ் ஏவிய கட்டளைகளை நிறைவேற்றி அவன் தடுத்தவற்றை தவிர்ந்து நடத்தலுமாகும். அதாவது, நாம் வாழ்வில் செய்கின்ற காரியங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் ஏவலாகவும், நாம் விடுபவை அனைத்தும் அவனின் வெறுப்புக்குரிய செயலாகவும் இருக்க வேண்டும். செய்கின்ற அந்த கட்டளைகள் பின்வரும் நிபந்தனையின் அடிப்படையில் அமைந்தால் அவை அனைத்தும் இபாதத்தாக மாற்றப்படும்.



முதலாவது அந்த காரியத்தை அல்லாஹ்வுக்காக என்ற தூய எண்ணத்துடன் செய்ய வேண்டும். அடுத்த கட்டமாக இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட செயலாக அமைய வேண்டும். அடுத்து ஷரீஆ வரையறைகளை மீறாமல் இருக்க வேண்டும். அடுத்து, செய்யும் காரியம் நேர்த்தியானதாக இருக்க வேண்டும். இறுதியாக அந்த காரியம் அடிப்படை வணக்கங்களுக்குத் தடையாக அமையாதிருத்தல் வேண்டும்.

இஸ்லாமிய வரையறைகளை மீறாமல் அந்தக் காரியங்களை செய்யலாம். அதாவது நாம் சிரிப்பதற்காக ஜோக் சொல்கின்றோம். உண்மையில் நபியவர்கள் கூட சில நேரங்களில் பகிடியாக பேசியிருக்கிறார்கள். ஆனால், அதில் பொய்யும், ஏமாற்றமும் உள்ளத்தை மரணிக்கச் செய்யும் சிரிப்பும் தவிர்க்கப்பட வேண்டும். எனவே, நாம் இந்த அடிப்படையில், வரையறைகளுடன் செய்தால் அதுவும் ஒரு நற்காரியமாக மாறும்.

வெறுமனே தொழுவதும் நோன்பு நோற்பதும் மட்டுமல்ல நபிவழி. வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் நபியின் ஸுன்னாவில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. எனவே, இஸ்லாம் எப்போதும் நடைமுறைக்கு சாத்தியமான மார்க்கம், பின்பற்றுவதற்கு இலகுவான மார்க்கம். கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப நெகிழ்ந்து கொடுக்கும் மார்க்கம். எனவே, நாம் அனைத்து செயற்பாடுகளையும் இபாதத்தாக மாற்றி, இறைவனின் திருப்தியைப் பெற்று வாழ முயற்சிப்போம்.

பாத்திமா பாக்கிர்
முஸ்லிம் அறபுக் கல்லூரி, கல்எளிய

Students @ மீள்பார்வை

உற்சாகம், சாதனைக் கனவு, புத்தாக்கம், அர்ப்பணம்

# மரணப் பொழுதுகளில்...

மையித்து வீட்டுக்கு அல்லது கப்ருகளுக்குச் செல்லும்போதுதான் மௌத்துடைய உணர்வே தோன்றுகின்றது. உள்ளமும் உலக வாழ்வையே விரும்புகிறது. எப்போது பார்த்தாலும் பணம் பணம் என்றே அலைகிறது. 'நீ முதலாவது உலகைத் தேடு' என்றே உள்ளம் அடிக்கடி சொல்கிறது. இதனால்தான் மனிதனுடைய வாழ்விலும் பொய், களவு, முகஸ்துதி, பெருமை என்பன கலந்திருக்கிறது.

உள்ளம் நினைத்தபடி மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கிறான். மனைவி, மக்கள், செல்வம், தொழில், பதவி என்பவற்றிற்கிடையில் மிதக்கும் மனிதனுக்கு எங்கே மரணத்தின் நினைவு தோன்றப்போகிறது. இதனாலோ என்னவோ, மனிதன் ஒரு சடமாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

ஒரு நிலையாய் நின்று வாழ்வை ஜெயிக்க எவ்வளவு போராட்டங்களை சந்திக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு தருணமும் எதிர்பாராத விபத்துக்களாகவே இருக்கிறது. இத்தடைகளைத் தாண்டி ஈருலகிலும் வெற்றியடைவதே ஒவ்வொரு முஸ்லிமினதும் உயர்ந்த நோக்கமாக இருக்கிறது.

உலக வாழ்வின் முடிவே மரணமாகும். சுவனத்தை அடைவதற்கான ஒரு பரீட்சைக் கூடமே இவ்வுலகமாகும். அதில் மனிதர்கள் அனைவரும் பரீட்சார்த்திகள். மரணம் என்பது பரீட்சை முடிவுக்கான நேரம். சுவர்க்கமும் நரகமும் பரீட்சை முடிவின் பெறுபேறுகள்.

ஒருநாள் நிச்சயம் மரணம் எம்மை வந்தடையும். அந்த நிமிடம் மனிதன் வாழ்வைத் திரும்பிப் பார்ப்பதில் பயன் ஏதும் இல்லை. தனது சொத்து, செல்வம், உறவுகள் அனைத்தும் அந்தக் கணம் மௌனித்தே கிடக்கப் போகிறது. பரீட்சை முடிவுக்கான நேரம் நெருங்கும்போது அல்லாஹ்விடத்தில் இன்னும் அவகாசம் கேட்பதில் எப்பயனும் இல்லை. பரீட்சை நேரம் முடிந்துவிட்டால் எழுதுவதற்கு நேரம் கொடுக்கப்படுவதில்லை.




மரணம் உயிரின் நிழலாகவே நம்மைச் சுற்றி வந்துகொண்டிருக்கிறது. நாம் எவ்வளவுதான் மறுத்தாலும் என்றாவது ஒருநாள் நம்மைவிட்டும் பிரியத்தான் போகிறது. மரணத்தின் கடைசி நிமிடங்களில் மனிதன் கட்டி வைத்திருந்த மனக் கோட்டைகள் அனைத்தும் இடிந்துவிடும். கனவுகள் அனைத்தும் சிதைந்துவிடும். அவனது எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் புதைந்துவிடும்.

நாளையுடன் ஆரம்பமாகும் பல விடியல்களுக்காய் நாம் எம் வாழ்வை அர்ப்பணிக்கக் காத்திருக்கிறோம். அதற்காக இன்றிலிருந்தே தயாராகின்றோம். பல திட்டங்களை வகுக்கின்றோம். நாளை விடியும் என எதிர்பார்த்து உறங்குகின்றோம். ஆனால், நாளை விடியும் என்பதை யார் அறிவார்? அல்லாஹ்வைத்தவிர. ஒரு வேளை நாளை விடியாமல் போனால்...

சஸான் ஏ. ஸலாம்
பட்டுபிட்டிய

# திட்டமிடலுடன் கற்போமாயின் சிறந்த வெற்றியை அடைந்து கொள்ளலாம்

## க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ் மொழியில் தோற்றி அகில இலங்கை ரீதியாக முதலாமிடம் பெற்ற மாணவன் முஹம்மத் இர்ஷாத்




முஹம்மத் இர்ஷாத்

''கல்வி என்பது முஸ்லிம்களின் கைதவறிய பொருள் அதனை கண்ட இடத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்பது நபி (ஸல்) அவர்களின் வாக்கு. எனவே, கல்வியைத் தேடிக் கற்றுக் கொள்ளுங்கள். அவ்வாறு கற்கையில் இன்னல்கள், இடர்கள் பல ஏற்படலாம். அவற்றைப் பொறுமையுடன் எதிர்கொள்வீர்களாயின் நல்லதொரு வெற்றியை அடைந்து கொள்ளலாம்'' என்கிறார் கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ் மொழி மூலம் தோற்றி அகில இலங்கை ரீதியாக முதலாமிடம் பெற்ற குருணாகல் கெகுணுகொல்ல தேசிய பாடசாலை மாணவன் முஹம்மத் இர்ஷாத்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலும், கொ/ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் இணைந்து நடாத்திய க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கும் வைபவம் கடந்த 08.04.2011 அன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையின் பின்னர் கொழும்பு பெரிய பள்ளிவாயலில் நடைபெற்றது. இதன்போதே அந்த மாணவன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எனக்கு இப்படியானதொரு வெற்றி கிடைத்தமைக்காக நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த வெற்றியை நான் அடைந்து கொள்வதற்கு எனக்கு உதவிய ஆசிரியர்கள், எனது பெற்றோர், அதிபர், பிரதி அதிபர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும், நான் கற்ற பாடசாலைகளான கெகுணுகொல்ல தேசிய பாடசாலை, மெதேகெட்டிய மு.வி., இஸ்லாஹிய்யா அறபுக் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



கொ/ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரியில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள்.

மேலும் ஆசிரியர்களதும் பெற்றோர்களினதும் அன்பையும் துஆவையும் பெற்றுக்கொள்ளுங்கள். அத்தோடு காலத்தை சரியான முறையில் முகாமைத்துவம் செய்து சரியான திட்டமிடலுடன் கற்போமாயின் சிறந்த வெற்றியை அடைந்துகொள்ளலாம் என்றும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கொ/ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரியில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எம்.எச்.எம். நாளீர்

# இஹ்ஸானிய உணர்வு

மனித உருவில் தோன்றிய ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஸஹாபாக்களுக்கு மத்தியில் இருந்து நபி (ஸல்) அவர்களிடம்; ஈமான் என்றால் என்ன? இஸ்லாம் என்றால் என்ன என்று வினா எழுப்பி விடை கண்ட பின்னர், இஹ்ஸான் என்றால் என்ன என்ற மூன்றாவது வினாவைத் தொடுத்தார்கள்.


நீ அல்லாஹ்வைப் பார்த்துக் கொண்டிருப்பதுபோல் வணங்க வேண்டும். இல்லையென்றால் நீ பார்க்காவிட்டாலும் அல்லாஹ் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வோடு வணங்க வேண்டும். எனப் பதில் கிடைத்தது. இந்த உணர்வுதான் மனிதன் நேர்மையாக நடப்பதற்குத் துணைபோகின்றது.

'அவர்களில் மூன்றுபேர் பேசும் இரகசியத்தில் நான்காமவனாகவும், ஐந்து போர் பேசும் இரகசியத்தில் ஆறாமவனாகவும் அவன் இல்லாமல் இல்லை. இதைவிட குறைவாகவோ கூடுதலாகவோ இருந்தால்கூட அவன் அவர்களுடன் உள்ளான்' என்று வஹி கற்றுத் தருகின்றது.

'வஹியை ஏற்றுக்கொண்ட அந்த முஸ்லிம், ரமழானில் பசியால் வாடுவதையும் தாகத்தால் தவிப்பதையும் பார்க்கிறோம். அவனை கண்காணிப்பதற்கு யாருமே இல்லாத நிலையில் அவன் விரும்பினால் பசியைப் போக்கிக் கொள்ள முடியும். தாகத்தைத் தீர்த்துக்கொள்ள முடியும். ஆயினும் அவனது மார்க்க உணர்வு அவனைக் கண்காணிக்கின்றது; அவனது இரட்சகனை நினைவூட்டுகின்றது. எனவே, அவன் உண்ணவோ பருகவோ கூடாது என்ற தீர்மானத்தில் உறுதியாக நிற்கிறான். இதனைப் புலனறிவாலோ பகுத்தறிவாலோ சாதிக்க முடியாது. வஹி மூலமான அறிவின்மூலமே சாதிக்க முடியும்.

வீதியில் மாற்றான் பொருளை அபகரித்தவன்; மாற்றான் பெண்ணை வல்லுறவுக்குட்படுத்தியவன் இந்த அறிவைப் பெற்றிருந்தால் - அவனிடம் இஹ்ஸானிய உணர்வு மிகைத்திருந்தால் அவர்களின் புலனறிவும் பகுத்தறிவும் சீராக செயல்பட்டிருக்கும். இதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக தனது மாணவரை ஓர் ஆசிரியர் இவ்வாறு வழிப்படுத்தினார். மாணவனிடம் ஒரு கோழியைக் கொடுத்தார். இதைக் கொண்டு போய் யாரும் காணாத இடத்தில் அறுத்து வர வேண்டும் என்று சொல்லி அனுப்பினார். சிறிது நேரத்தின்பின்னர் அதே கோழியுடன் மாணவன் திரும்பி வருகிறான். ஆசிரியர் காரணம் கேட்டபோது, 'யாரும் காணாத இடம் தேடிப் பார்த்தேன். எந்த இடமும் கிடைக்கவில்லை. அல்லாஹ்வின் பார்வையில் சிக்காத எந்த இடத்தையும் காணவில்லை. எனவே, கோழியை அப்படியே கொண்டு வந்தேன்' என்றான்.

உமர் (றழி) அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் இவ்வாறான ஓர் ஆட்டிடையனை இனம் கண்டார்கள். 'ஓர் ஆட்டை எமக்குத் தந்துவிட்டு ஓநாய் கொண்டு சென்றுவிட்டதாக எஜமானிடம் கூறிவிடு'' என்று தந்திரத்தைச் சொல்லிக்கொடுத்தும், அந்த இடையன் அல்லாஹ்வுக்குப் பயந்து எஜமானுக்குத் துரோகம் செய்ய விரும்பவில்லை.



பாலில் நீர் கலக்குமாறு கூறிய தாய்க்கு, கலீபாவின் உத்தரவை நினைவூட்டிய மகள், 'கலீபா பார்த்துக்கொண்டா இருக்கிறார்' என்று எதிர்க் கேள்வி கேட்ட தாயிடம் 'கலீபா இல்லாவிட்டாலும் அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கின்றான்'' என்ற ஒரு கன்னிப் பெண்ணையும் இனங் கண்டார்கள். அவளில், தான் கண்ட இஹ்ஸானை மெச்சி தனது மகனுக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள்.

வஹி அறிவை ஏற்காததால் பின்னர் கவலையுற்ற இருவரை நோக்குவோம். அணுகுண்டைக் கண்டுபிடித்தவர், அதன் தீய விளைவுகளைக் கண்டு வருத்தமடைந்தார். கருத்தடை மாத்திரைகளைக் கண்டுபிடித்த இரு ஆய்வாளர்கள், பின்னர் அதன் தீய விளைவுகளைக் கண்டு கவலைப்பட்டனர். இவர்களுக்கு புலனறிவு இருந்தது. பகுத்தறிவும் இருந்தது. ஆனால், அவையிரண்டும் சுயநலத்தில் வட்டமிட்டன. வஹி அறிவு இல்லாமற் போனதால் மனித சமுதாயத்தை அழிக்கவும், ஒழுக்க வீழ்ச்சிக்கு உட்படுத்தவும் தாம் காரணமாக அமைகிறோம் என்பது பின்னர் தான் தெரிய வருகின்றது.

அவர்களுக்கு வஹி அறிவு கிடைத்திருந்தால் குறைந்த பட்சம் இரண்டு ரக்அத் ஸுன்னத் (இஸ்திஹாரா) தொழுது அல்லாஹ்விடம் பிரார்த்தித்திருப்பார்கள். எமது ஆய்வு மனித சமூகத்துக்கு நல்லதை உருவாக்குமாயின் அதனை வெற்றியடையச் செய். இன்றேல், இவ்வாய்விலிருந்து எம்மை விடுவித்துவிடு என்று அல்லாஹ்விடம் பிரார்த்தித்திருப்பார்கள்.

இந்த நிலை இல்லாமற் போனதால்தான் ஆகாயத்தில் பறக்கவும், நீரில் நீந்தவும் கற்றுக்கொண்ட - கற்றுக்கொடுத்த மனிதன் வானவூர்திகளையும், நீர் மூழ்கிகளையும் தயாரித்து பயன்படுத்தும் மனிதன், பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியாக வாழ்வதற்குக் கற்றுக்கொள்ளாமல் கற்றுக்கொடுக்காமல் ஒரு மயக்க நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறான். மனிதன் பூமியில் அல்லாஹ்வுடைய பிரதிநிதியாக வாழ்வது எப்படி என்பதை வஹி மூலமான அறிவே கற்றுக்கொடுக்கின்றது.


---

# பண்பாட்டுப் புரட்சியும் மேற்கின் வீழ்ச்சியும்

உலக வரலாறு நெடுகிலும் பல வகையான புரட்சிகள் நடந்து உலகின் போக்கையே மாற்றியுள்ளன. என்றாலும், புரட்சியின் ஆபத்தான விளைவுகளால் சமூகம் இழந்துபோனவைதான் அதிகம். உயிர்ச்சேதம், பொருட் சேதம், பொருளாதார அழிவு என இவை நீண்டு செல்கின்றன. ஆனால், மிகக் கிட்டிய அண்மைக் காலங்களில் அறபு மண்ணைத் தளமாகக் கொண்டு மையங்கொண்டு உலகை அதிர வைக்கும் பூகம்பமாக பண்பாட்டுப் புரட்சி மாறி வருகிறது. அதிகாரத்திற்குக் கட்டுண்டு அடிமைத் தளைகளில் வாழ்வை இழந்துபோன மக்களை அஹிம்சை வழியில் போராட அழைத்திருப்பதும் இந்தப் புரட்சி தான்.

உண்மையில் ஆயுதமும் அணுகுண்டும் சாதிக்கத் தவறிய அநேகமானவற்றை அர்த்தமுள்ள வார்த்தைகள் நிறையவே சாதித்துள்ளன. இங்குதான் அல்குர்ஆனும் ஸீறாவும் அழகிய பண்பாட்டுக்கு இத்தனை அழுத்தம் கொடுத்து அதனைப் பேசுபொருளாகவே மாற்றியமைத்திருப்பதன் ஆழம் புலப்படுகிறது. மேற்கின் எல்லைகடந்த தொழிநுட்ப வளர்ச்சி விண்ணோடு மோதும் உயர்ந்த கட்டிடங்களைத்தான் இன்னுமின்னும் பிரசவிக்கின்றன. மண்ணின் இயல்போடு வாழும் மனித இனத்தை கருவோடு அழித்து நிர்மூலமாக்கி விடுகின்றன. இதுதான் நவீன நாகரிகத்தின் பரிசு.

இதற்கு முற்றிலும் நேர்மாறாக இஸ்லாம் எதிர்பார்க்கும் மாற்றமும் முன்னேற்றமும் மனிதர்களை நோக்காகக் கொண்டுள்ளமையே அதன் சிறப்பம்சமாகும். இதனால்தான், ''இஸ்லாம் மார்க்கத்தின் தத்துவத்தை இரண்டே வார்த்தைகளில் சுருக்கிச் சொல்லுமாறு நான் வேண்டப்பட்டால், 'நிச்சயமாக அது பண்பாடுகளின் நிலையான தன்மைதான்' என்பேன்'' என்று வஹ்யுல் கலம் என்ற நூலில் அதன் ஆசிரியர் ராபிஈ குறிப்பிடுகிறார்.



இஸ்லாமிய அரசுக்கான அசைக்க முடியாத அடித்தளமாக அமைவது பண்பாடுகள் மட்டுமே என ஸூறதுல் ஹுஜுராத் பேசுகிறது. இப்படியாக நோக்கும் போது பண்பாடுகள் பற்றி ஏன் இந்தளவு கரிசனை செலுத்த வேண்டும் என்ற வினாவுக்கு உஸ்தாத் அம்ர் காலித் நான்கு நியாயங்களைப் பட்டியலிடுகிறார்.

1. நபித்துவப் பணியின் இலக்கை தெளிவாக அடையாளப்படுத்திக் காட்ட வேண்டும் என்பதற்காக.

''நிச்சயமாக கண்ணியம் வாய்ந்த உயர் பண்பாடுகளை முழுமைப்படுத்தவே நான் தூதராக அனுப்பப்பட்டுள்ளேன்'' என்று நபியவர்களே வஹியின் பாஷையில் பேசியுள்ளார்கள்.

2- பண்பாட்டுக்கும் வணக்க வழிபாட்டுக்கும் இடையிலான இடைவெளியை நீக்க வேண்டும் என்பதற்காக.. இதனால்தான் குறிப்பாக பிரதான இபாதத்துக்கள் பற்றி குறிப்பிடும் அல்குர்ஆன் அதனோடு இணைத்து உடனடி விளைவாக பண்பாட்டு மாற்றத்தையும் சொல்கிறது.

3- இபாதத்துகளோடு எம் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஓய்வெடுக்காமல், செயற்பாட்டாளராக சமூகக் களத்திலும் நடைமுறைவாழ்விலும் பிரதிபலிக்கச் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறது.

**இஸ்லாம் எதிர் பார்க்கும் மாற்றமும் முன்னேற்றமும் மனிதர்களை நோக்காகக் கொண்டுள்ளமையே அதன் சிறப்பம்சமாகும். இதனால்தான், ''இஸ்லாம் மார்க்கத்தின் தத்துவத்தை இரண்டே வார்த்தைகளில் சுருக்கிச் சொல்லுமாறு நான் வேண்டப்பட்டால், 'நிச்சயமாக அது பண்பாடுகளின் நிலையான தன்மை தான்' என்பேன்'' என்று வஹ்யுல் கலம் என்ற நூலில் அதன் ஆசிரியர் ராபிஈ குறிப்பிடுகிறார்.**

4- மக்களின் சோதனைகள், இழப்புகளுக்கு நாம் காரணியாய் அமையக்கூடாது என்பதற்காக. உதாரணமாக; நன்றாக தொழுபவராக, நபிலான நோன்புகளை நோற்பவராக இருப்பார். எனினும், வேலைத்தளத்தில் தூக்கமும் சோம்பலும் களைப்பும் மிகைத்தவராக இருப்பார். இது முஸ்லிமுக்கு அழகாய் அமையாது. காரணம் 'ஈமான் பரிபூரணமடைந்தவர் சிறந்த பண்பாடுடையவர்' என்பது நபிமொழி. (அபூ தாவூத், அஹ்மத்)

எனவேதான், ஜாஹிலிய்ய சமூக அமைப்பின் மாற்றம் காண எத்தனித்த நபி (ஸல்) அவர்கள் நிலப் போராட்டம் பற்றி சிந்திக்க முன் உளப் போராட்டம் பற்றி அதிகம் சிந்தித்தார்கள். பண்பட்ட விருட்சங்களாக மாறும் விதைகளைத் தூவி பயிற்றுவித்தார்கள். நாளடைவில் தன்பால் மிகப் பெரும் மக்கள் திரளை ஒன்று கூட்டினார்கள்.

எமக்கு முன்னாலும் அதுமட்டுமே தீர்வாக அமையும். இன்று பொருளாதாரம், அரசியல், கலாசாரம் அனைத்தும் அழுகி நாற்றமெடுக்கக் காரணமும் அது சார்ந்த பண்பாடுகளை சிறைப்படுத்தி வைத்திருப்பதுதான். எனவே, விண்ணில் மாற்றம் ஏற்படுத்த முன்னர் மண்ணில் வாழும் மனித மனங்களில் மாற்றம் ஏற்படுத்த தயாராகினால் மேற்கு மட்டுமல்ல, முழு உலகுமே இஸ்லாத்தின் முன் சரணடையும். இதுதான் நியதி. இதுதான் நிகழும். இது நிச்சயம், சத்தியம். ''சத்தியம் வந்தது, அசத்தியம் அழிந்தது. அசத்தியம் அழிந்தே போகும் என்று நபியே நீர் கூறுவீராக.'' (இஸ்றா: 81)

எம்.எம்.ஏ. பிஸ்தாமி
மள்வானை

# நாலுபேருக்கு நன்றி

சின்னப்பிள்ளை



எங்க சார் போனும்?'' ஆட்டோவ. நிறுத்தி ஆம மாதிரி தலய மட்டும் வெளியே நீட்டிக் கேட்டார்.

''டி.எம்.எஸ்.''
''எவ்வளவு சார் தருவ?''
''நீங்க சொல்லுங்க''

பார்க்க வயதானவர் போலிருந்தார். உள்ளே சாதாரண சட்டையும், அதுக்கு மேல காக்கி உடுப்பும் அணிந்திருந்தார். ''அறுபது ரூபா குடுசார்'' மத்தவன்லாம் எம்பது நூறுன்னு கேப்பான், நான் நியாயமா கேக்கறேன். இந்த ஆபீஸ் போற டயத்துல அதுவும் மவுண்ட்ரோட்ல சவாரி போறதுன்னா எவ்வளவு செரமம்னு உனக்கு தெரியாது சார். ''ஏறிக்கோ''.

வண்டி நந்தனம் சிக்னலைத் தாண்டி சென்று கொண்டிருந்தது. அவரேதான் பேசிக்கொண்டே வந்தார்.'' இதே ஆட்டோவ வாடகைக்கி விட்டிருந்தேன் சார், எடுத்தவன் ஒழுங்கா ஓட்றானான்னா, தெனம் தண்ணி அடிக்கிறான்சார், அதொட வந்து வண்டி எடுக்கிறான் சார், அதுனாச்சும் பரவால்ல, பொண்டாட்டியும் சேத்துக்கிட்டு தண்ணி அடிக்கிறான் சார். குடும்பமே பேஜாரு. அதோட நானே திரும்ப வண்டிய எடுத்து ஓட்ட ஆரம்பிச்சுட்டேன். ஒரு தொழில் பக்தி வேணாம்? அதுலருந்துதான் காசு வருது, கும்பிடாட்டியும் பரவால்ல, ஒரு மரியாத இருக்கணும் சார், காசும் ஒழுங்கா குடுக்கிறதில்ல, எல்லாத்தயும் தண்ணிலயே வுட்டுர்றான் சார். அதான் வேணவே வேணாம்னு சொல்லி அனுப்பிட்டேன். கொழந்த குட்டிய காப்பாத்தறதுக்கு தொழில் செய்யணும், ஒரு பயபக்தி வேணும், ஒண்ணுமே கெடியாது சார், அவங்கிட்ட''.

''என்னப்பாத்தா எத்தினி வயசாகுது சார்?''

அவரே சொன்னார்: ''அம்பத்தி ஏழு. இன்னிக்கு வரைக்கும் ஒரு கெட்டபழக்கம் இல்ல சார். சிகரெட், தண்ணி, பீடி ஏன் பாக்கு கூடப் போடறதில்ல சார், அதான் பசங்க எல்லாம் 'இன்னும் எளமயாவே இருக்க'ன்னு சொல்வானுங்க!'' பிறகு அவரே சங்கோஜத்தில் சிரித்துக்கொண்டார்.

''பேமிலி இருக்குது, ஒழக்கிற காசக் கொண்டு போயி பொண்டாட்டி கைல குடுத்துருவேன் சார். அவ பாத்து செலவுக்குன்னு குடுக்கறதக் கூட செலவளிக்க மாட்டேன் சார். அப்டி அவ சேத்து வெச்சகாசில இந்த ஆட்டோவ சொந்தமா வாங்கிட்டேன் சார்.

இந்தக்காலப் பயலுவளுக்கு எங்க என்னா தெரியுது, கைல நாலுகாசு வந்தா ஆடறானுங்க. இல்ல, எல்லாத்தியும் குடிச்சே அழிக்கிறானுங்க.''

தேனாம்பேட்டை சிக்னலில் வண்டிநின்றது.

''என்னா வெயில் சார்.'' காக்கிச்சட்டையின் காலரை உள்ளே அணிந்திருந்த சட்டையோடு சேர்த்துப் பின்னுக்குத் தள்ளிவிட்டு பேண்ட் பாக்கெட்டிலிருந்து துணியை எடுத்து கழுத்தைச் சுற்றி துடைத்துக் கொண்டார்.

சிக்னல் விழுந்து வண்டி கிளம்பிய போது பக்கத்தில் ஒரு ஆட்டோ உரசிச்சென்றது .

''ஏய் ஆறுமுகம்'' அந்த ஆட்டோ டிரைவர் திரும்பிப் பார்த்தார்.

''நம்ம நாலாவது தெரு ஆடிட்டர் இல்ல, சிவசங்கரன் இன்னிக்கு காத்தால போய்ட்டாராம்ப்பா, வா இப்ப சவாரி எறக்கி விட்டுட்டு ஒருமால வாங்கிப் போடலாம்''

''எனக்கு நியுஸ் தெரியாதுண்ணே, போய்ட்டு வந்துருவோம்ணே'' என்றபடி விலகிச் சென்றது அந்த ஆட்டோ.

''தம்பி, அந்த ஆடிட்டரு ரொம்ப நல்லவர்ப்பா, டெய்லி காலைல வீட்டுக்குப் போயி அவர ரெடி பண்ணி, பாவம் அவரால நடக்கமுடியாது, குச்சி வெச்சுதான் நடப்பார். அவரக் கூட்டிட்டுப் போயி ஆபீசுல விட்டுட்டு திரும்பக் கூட்டிட்டு வருவேன் சார். நல்ல மனுசன் சார், இந்த ஆட்டோ வாங்கறப்போ இருந்த சிக்கல்லாம் சரி பண்ணிக் குடுத்தார்பா, நன்றி விசுவாசம் மறக்கக்கூடாது, அதான் உங்கள எறக்கி விட்டுட்டு அங்க போலாம்னு இருக்கேன்'' என்றார்.

★★★

''பேச்சுலர்ஸ் ரூமக் கூட்டறது ஈஸின்னு நெனச்சு, வேலக்கு ஒத்துக்கிட்டா இந்தப் பசங்க கண்ட எடத்திலயும் குப்பயப் போட்டுவெச்சு, நாலு வீட்டுக்குப் போய் மிச்ச வேலயப் பாக்க விடாமப் பண்றானுவளே?!'' சலித்துக் கொண்டாள் வேலக்கார ஆயா. நோக்கியா சார்ஜர், நேத்து தின்னு போட்ட சிப்ஸ் பாக்கெட், ஓரத்தில கொஞ்சம் சிகரெட் துண்டும் அதோட சாம்பலும், முடிசுத்திக் கெடந்த பஸ் டிக்கெட்டும் ஒரே தள்ளாகத் தள்ளினாள் துடைப்பத்தை வைத்து. ''தம்பிகளா, வேலக்கு போறப்ப, சன்னக் கதவ சாத்தி வெச்சிட்டுப் போங்கப்பா, காத்து இல்லாத குப்பைய எல்லாம் கொண்டுவந்து உள்ள கொட்டுது, அப்பால அத்தையும் சேத்துக்கூட்ட வேண்டியிருக்கு.''

யாரும் கண்டுகொண்டது போல தெரியவில்லை.

அவரவர் வேலைக்குக் கிளம்புவதில் மும்முரமாயிருந்தனர். ''எண்ணூறு ரூபா மட்டும் வாங்கத் தெரியுது, வேல பாக்க நதுன்னா மட்டும் சலிப்பு.'' உள்ளுக்குள் முனங்கிக் கொண்டான். குளித்து விட்டு வெளியே வந்தவனோ, ஈரத்தோடு குப்பையை மிதித்துக் கொண்டே உடைமாற்றச் சென்றான்.

''ஏய்தம்பி, கண்ணு தெரியலயா உனக்கு, இப்பதானே கூட்டிவெச்சிருக்கேன், அதுல போய் ஈரக்கால வெக்கிறியாப்பா?''

''ஆயா'',
''என்னப்பா ?''

''இல்ல நாங்க இந்த வீட்டக் காலி பண்ணிட்டு வேற வீடு போலாம்னு இருக்கோம்.''

''பக்கத்திலதான், ரெண்டு தெரு தள்ளி கொஞ்சம் அந்த வீட்டுக்குப் போயி சுத்தம் பண்ணிக் குடுத்தீங்கன்னா நல்லாருக்கும்''.

''அங்க யாருப்பா இருக்கறது? பேமிலியா ?''

''இல்ல ஆயா , எங்கள மாதிரி பேச்சுலர் பசங்கதான். அவனுங்க வேற ஊருக்குப் போறாங்களாம், அதான் காலி பண்றாங்க கொஞ்சம் அங்க போயி வீட்டக் கூட்டி பெருக்கி, கழுவி விட்டீங்கன்னா நல்லாருக்கும், அப்றம் தொடர்ந்து அங்கயே தெனம் வந்துருங்க.''

''சரி தம்பி'' என்றவள் அனைத்துக் குப்பைகளையும் அள்ளி பிளாஸ்டிக் கவரில் உள்ளே அமுக்கி வைத்துவிட்டு, கைப்பிடி ரெண்டயும் ஒண்ணா சேத்து முடிச்சுப் போட்டு தூக்க வசதியாக வைத்துவிட்டுச் சென்றாள்.

பிறகு சாயங்காலம் வந்தவளிடம் கேட்டான்.

''என்ன ஆயா, புதுவீடு கழுவி விட்டீங்களா?''

''இல்ல தம்பி, அந்தப் பசங்க இன்னிக்குதான் காலி பண்றாங்களாம், அவங்க போகட்டும், அப்பால கழுவி விடறேன்.''

''இல்ல, ஏன் சொல்றேன்னா இப்பவே கழுவி விட்டீங்கன்னா காலைல வரை காஞ்சிரும், அப்பறம் நாங்க போறதுக்கு வசதியாயிருக்கும்னு தான்.''

''உங்களுக்குப் புரியல தம்பி, யாரும் வீடுகாலி பண்ணவுடனே கழுவிவிடக் கூடாது. அந்தப் பசங்க நாலு எடம் போயி வாழ வேண்டியவங்க, அதனாலதான் இன்னிக்குப் பொழுது கழியட்டும். நாளைக்கி காத்தால போயி உனக்குக் கழுவி ரெடியா வெச்சிருக்கேன்''

''ஏன் காலை?''

''இல்லப்பா, எழவு விழுந்த வீட்லதான் எல்லாம் தூக்கிட்டுப் போனவுடனே கழுவிவிடுவாங்க, அத சொல்லவேணாம்னு பாத்தா, ஐய, வாயக் கிண்டறியேப்பா ?''

★★★

''பேங்ளூர், பேங்ளூர்'' சார் பேங்ளூரா சார்?

நல்ல ஏ.சி. வண்டிசார், காலைல அஞ்சுமணிக்கிக் கொண்டு போயி எறக்கி விட்றுவாங்க சார், டிக்கெட் வேணுமா சார்?'' கூவிக் கூவி அழைத்துக் கொண்டிருந்தான். சென்ட்ரல் ஸ்டேஷன் எதிர்ப்புறம் வரிசையாக ட்ராவல் ஏஜென்சிகள். ப்ளாட்பாரத்தில் நின்றுகொண்டு தோள்பையோடு போவோர் வருவோரையெல்லாம் கையைப் பிடித்து இழுக்காத குறையாகக் கூவிக் கொண்டிருந்தான்.

''எங்க சார். இப்பெல்லாம் நேர வந்து டிக்கெட் வாங்கறாங்க எல்லாம் கம்ப்யுட்டர்லயே பண்ணி விட்டிர்றாங்க சார், நமக்கு போணி ஆவறதில்ல, ஏதோ கடைசி நேரத்தில கௌம்பறவங்க மட்டும் வந்து நிப்பாங்க.

''சார், இங்க, அதுலயும் எனக்குக் கெடிக்கிற ஷேர் கொஞ்சந் தான், தினத்துக்கு ஒருவேள சோறு துண்ணவே பத்தாது.''

''ஹைதராபாத் போணுமா சார்?'' பெரியவர் இவனை வலுக் கட்டாயமாகக் கையைப் பிடித்து விலக்கிவிட்டுச் சென்றார். ''ஒரு சீட்டுக்குப் பத்தோ, இருபதோ கூட வர்றது கஷ்டம்தான் சார். சாயங்காலம் ஏழுமணிக்கு ஆரம்பிச்சா ஒம்போது, ஒம்போதர வரைக்கும்தான் சார் தொழிலு; அப்பால எல்லா வண்டியும் நெறஞ்சிடும், மூடிட்டுப் போக வேண்டியதுதான்''.

''க்யா பையா, அப்னா டிக்கிட் பக்கிநஹி ''ஹயி?''

''இல்ல சார் சீட் நம்பர் ஒண்ணு ரெண்டு போட்டு வெச்சிருந்தேன், கடைசி நிமிஷத்துல ட்ராப் ஆயிடுச்சி சார், உங்கிட்ட அன்ரிசர்வ் டிக்கெட் இருக்கு, கோச்ல ஏறி ஒக்காந்துக்குங்க, அந்த ரெண்டு சீட்டும் காலியாத்தான் இருக்கு, டி.டி.ஆருக்குக் கொஞ்சம் வெட்டினீன்னா உனுக்கே கன்ஃபர்ம் பண்ணிக் கொடுத்துடுவாரு, வழக்கமா வர்ற நம்ம டி.டி.ஆர். இன்னிக்கு லீவு போட்டார், அதான் டிக்கெட் கரெக்ட் பண்ண முடியல. கமிஷன் துட்டு எனக்கு வேணாம், செய்யாத வேலக்கி துட்டு வாங்கமாட்டேன்.''

''பேசிக் கொண்டே இருந்தவனை அவனது சகா வந்து இடித்தான்.''

''ஏண்டா என்ன ஆச்சு?''

''அவன் அங்கயே கெடக்க றாம்ப்பா, சாப்ட்டு நாலுநாள் ஆவுதுன்னு சைகைலயே சொல்றான், உடம்பு எங்கயோ நல்லா அடிவாங்கினமாதிரி கெடக்குது, வாயிலருந்து ஒரு வார்த்த வரமாட்டேங்குது, பாத்தாலே பாவமா இருக்குடா.''

''என்னா பண்றது. நாலு காசு இன்னிக்குப் பாத்தா ஏதுனா வாங்கிக் கொடுத்து டாக்டராண்ட அழச்சிக்கிட்டு போகலாம், வருமானம் இன்னிக்கு டல்லாத்தான் இருக்கு,ம்என்ன செய்ய?''

''கோயம்பத்தூர் மூணு டிக்கெட் இருக்குமாப்பா?''

''இருக்குதுசார், ஆனா வண்டி இங்கருந்து இல்ல, டிக்கெட் போட்றேன், நம்ம பிக்கப் வண்டி வரும், அதுல ஏறி கோயம்பேடு போய்ட்டீங்கன்னா, அங்கருந்து கோயம்புத்தூர் பஸ், போறீங்களா சார்?''

''அதெல்லாம் சரி, பஸ் எப்டி வசதியா இருக்குமா ?

''நெஜம் சொல்றேன் சார் , வோல்வோல சீட் காலி இல்ல. இந்த வண்டி சுமாராத்தான் இருக்கும், ட்டூப்ளஸ் ஒன்,ஏ.சி. இருக்கு சார் வண்டில, உங்கிட்ட பொய் சொல்லி அனுப்பிவிட்டுட்டு என்னால நிம்மதியா தூங்க முடியாது சார், தொழில் தர்மம் வேணும் சார், அதான், வேணும்னா சொல்லு சார், பிக்கப் வண்டி பத்து நிமிசத்துல வந்துரும், போட்றவா?'' அவர் ஒத்துக்கொண்டார்.

''ஆச்சு, இன்னிக்கு ஏதோ மூணு டிக்கெட், கொஞ்சமாவது காசு பாக்கலாம். பாவம், அந்தப் பையன், கடய மூடனவொடனே போகணும்.''

''என்னாச்சு, யாரு அந்தப் பையன்?''

''தெர்லசார் யாருன்னே, எங்கிருந்தோ வந்தான், கைல ஒரு பேக் கூட இல்ல,எவனோ கம்மினாட்டி பேக்க அடிச்சதோட ஆளயும் அடிச்சுப் போட்டுட்டு ஓடிட்டான் போலருக்கு. இந்தப் பையனால நடக்கவே முடியல, நாங்க தங்கற எடத்துல படுக்க வெச்சிருக்கோம் சார், ரெண்டு நாளா கெடக்கான் சார். ஒழச்சு திங்க வக்கில்லாம கண்டவனயும் அடிச்சு, ஒதச்சு, சுளுவாத் துண்ணனும்ங்ற கூட்டம் இன்னும் இருக்கு சார் இங்க. என்னவோ பேர் சொன்னான் சார், வாய் கொளர்றதால ஒண்ணும் புரியல, பாவம், அடிபலமா விழுந்திருக்கும் போல, படுத்தே கெடக்கான் சார். அதான் கடய மூடனவுடனே போகலாம்னு இருக்கேன்.

நன்றி: உயிரோசை

## உண்மையான.... (08ம் பக்கத் தொடர்)


''பேரீத்தம் மரம் காய்த்தால் அதன் கனிகள் உனக்குத்தான் என்று வாக்குறுதியளித்தான். மரம் காய்த்தது. வாக்குறுதியை நிறைவேற்றுமாறு கோரி அவனது சகோதரன் வந்தபோது அர்கூப் அது முற்றிய பின் வருமாறு கூறினான்.

காய் முற்றியது. அர்கூப் அவனுக்கு சொன்னான்; அது சிவக்கும் வரை அதனைவிட்டுவிடு. அது சிவந்தது. பின்னர் அவனுக்கு அர்கூப் சொன்னான், அதனை கனியும் வரை விட்டுவிடு. அது கனிந்து பழமாகியது. அர்கூப் இரவு நேரத்திலே அப்பழங்களை வெட்டியெடுத்தான். தன் சகோதரனுக்கு எதனையும் கொடுக்கவில்லை. அவன் மாறு செய்வதில் முன்னுதாரணமாய் போனான்.

வாக்குறுதிக்கு மாறு செய்வதும், உடன்படிக்கையை முறிப்பதும் நயவஞ்சகத்தின் மிக நெருக்கமான பண்புகள். அது தைரியத்தை இல்லாமலாக்கி பெருந்தன்மையைப் போக்கிவிடுகிறது. நபியவர்கள் சொன்னார்கள்: ''நயவஞ்சகர்களின் அடையாளங்கள் மூன்று. பேசினால் பொய் பேசுவான், வாக்குறுதியளித்தால் மாறுசெய்வான். நம்பினால் துரோகம் செய்வான்.''

வாக்குறுதிகளை உண்மைப்படுத்தும் மனிதர்களே அழைப்புப் பணியின் தூண்கள். நாகரிகத்தின் கொடிகள். எனவேதான் இவர்களை சமூகத்தில் அதிகமாக காண முடியாதுள்ளது. இதனைத்தான் நபியவர்கள் சுட்டிக்காட்டினார்கள்; ''மனிதர்கள் நூறு ஒட்டகைகளைப் போன்றவர்கள். அதில் வழிநடாத்தும் ஒரு ஒட்டகையையேனும் காண முடியாதிருக்கிறது.'' (புஹாரி) அறிவும் தெளிவும் தீட்சண்யமும் நிறைந்த வாக்குறுதிகளை உண்மைப்படுத்தும் மனிதர்களைத்தான் நபியவர்கள் இங்கு சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

உமர் (றழி) அவர்கள் மதீனாவிலே தன் தோழர்களுக்கிடையே அமர்ந்திருக்கிறார்கள். அவர்களிடம் சொன்னார்கள்; ஆசை வையுங்கள். அவர்களில் ஒருவர் சொன்னார்; இந்த வீடு தங்கத்தால் நிரம்பியிருக்க அவற்றை அல்லாஹ்வின் பாதையில் நான் செலவளிக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். உமர் (றழி) அவர்கள் எதுவும் பேசவில்லை. மீண்டும் சொன்னார்கள், ஆசை வையுங்கள். இன்னுமொருவர் சொன்னார், இந்த வீடு முத்து மாணிக்கங்களால் நிரம்பியிருக்க அவையனைத்தையும்



அல்லாஹ்வின் பாதையில் செலவளிக்க நான் ஆசைப்படுகிறேன்.

மீண்டும் உமர் (றழி) அவர்கள் சொன்னார்கள்: ஆசை வையுங்கள். ஸஹாபாக்கள் சொன்னார்கள், அமீருல் முஃமினீன் அவர்களே நாங்கள் என்ன கூறுவதென்று எமக்குத் தெரியவில்லை. உமர் (றழி) அவர்கள் சொன்னார்கள், என்றாலும் நான் அபீ உபைதா இப்னுல் ஜர்ரா, முஆத் இப்னு ஜபல், ஸாலிம் மௌலா அபீ ஹுதைபா போன்ற மனிதர்களால் இந்த வீடு நிரம்பியிருக்க அவர்களை அல்லாஹ்வின் மார்க்கத்தை ஓங்கச் செய்யும் பணியில் பயன்படுத்த வேண்டுமென ஆசைப்படுகின்றேன்.

உமரே! அல்லாஹ் உங்களுக்கு அருள்பாலிக்கட்டும். நீங்கள் பெரும் நிபுணராய் இருந்திருக்கிறீர்கள், உங்கள் அனுபவங்களால் பல நாடுகள் எழுந்து நிற்கின்றன. பெரும் சமூகங்கள் எழுச்சி பெற்றிருக்கின்றன. நாகரிகங்கள் வளர்கின்றன. வீழ்ந்து போன சமூகங்கள் உயிர் பெறுகின்றன. சமூகங்களுக்கும் தூதுகளுக்கும் கணிய வளமும் பணமும், செல்வமும் தேவை என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் அதற்கு முன்னால் அவைகளுக்கு கூர்ந்த மூளைகளும், பலமான நாட்ட சக்தியும், வாக்குறுதிகளை நிறைவேற்றும் பெரும் உள்ளங்களும் தேவைப்படுகின்றன.

இந்த, பெரும் மனிதர்கள் தான் தூதுக்களின் தூண்களாக எழுச்சிகளின் ஆன்மாவாக சமூக சீர்திருத்தத்தின் ஆணிவேராக இருந்திருக்கிறார்கள். வெள்ளியையோ, தங்கத்தையோ, மாணிக்கத்துக்கோ ஆசை வைத்திடாத ஞானத்தை உமருக்குக் கொடுத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். உமர் முழு சமூகத்துக்கும் நிகரான மனிதர்களைத்தான் ஆசை வைத்தார். எனவேதான் இப்படிச் சொல்வார்கள்: ''பெரும் **இலட்சியம் கொண்டவன்தான் சமூகத்துக்கு உயிர்கொடுக்கிறான்.''**

காலித் இப்னு வலீத் (றழி) ஹியரா பிரதேசத்தை முற்றுகையிட்ட சந்தர்ப்பத்தில் அபூ பக்ர் (றழி) அவர்களிடம் படையுதவி வேண்டினார்கள். அப்பொழுது கஃகாஃ இப்னு அம்ர் அத்தமீமி என்ற மனிதரை மட்டும்தான் அனுப்பி வைத்தார்கள். அவருக்கு சொன்னார்கள், அவரைப் போன்ற மனிதர்கள் படையில் இருக்கும்வரை அதனைத் தோற்கடிக்க முடியாது. அவர்கள் சொல்லுவார்கள், ''படைகள் மத்தியிலே கஃகாஃவின் சத்தம் ஆயிரம் போராளிகளை விட சிறந்தது.''

அம்ர் இப்னு ஆஸ் (றழி) அவர்கள் எகிப்தை வெற்றி கொண்ட நிலையில் படையுதவி கேட்டபொழுது அவருக்கு உமர் (றழி) அவர்கள் எழுதிய பதில் இது; உங்களுக்கு நான்கு மனிதர்களை உதவிக்கு அனுப்பியிருக்கிறேன். அவர்களில் ஒவ்வொருவரும் ஆயிரம் மனிதர்கள். அவர்கள்தான் ஸுபைர் இப்னுல் அவாம், மிக்தாத் இப்னு அம்ர், உபாதா இப்னு ஸாமித், மஸ்லமா பின் முஹல்லத்.

மனிதர்கள் உடைகளை வைத்தோ, பதவிகளை வைத்தோ அடையாளப்படுத்தப்படுவதில்லை. வீரத்துக்கு வயதுமில்லை, உடம்பும் இல்லை. தொழிலோ பதவியோ இல்லை, செல்வமுமில்லை, புகழுமில்லை. வீரம் என்பது மனப்பலம். அது அதனை சுமந்திருப்பவனை பெரும் இலட்சியங்களை நோக்கித் தூண்டிவிடுகிறது. அற்ப விடயங்களை விட்டும் அவனை தூரமாக்கிவிடுகிறது. மனப்பலமே ஒருவனை பெரியவனாக்குகிறது. அவன் வயதில் சிறியவனாக இருக்க முடியும். அவனை பிறரிடம் கையேந்தாதவனாக மாற்றுகிறது. அவன் ஏழையாக இருக்கவும் முடியும். அவனைப் பலம் மிக்கவனாக மாற்றுகிறது. அவன் மெல்லிய உடலைக் கொண்டவனாக இருக்கவும் முடியும்.

ஆகவே, உண்மையான வீரமும் ஸாலிஹான மனிதர்களும் ஆழ்ந்த அகீதாவின் நிழலிலும் உறுதியான பண்பாட்டிலும் மகத்தான நடைமுறையிலும் தான் உருவாக முடியும். சீர்கேடு, அநியாயம், சந்தேகம், நயவஞ்சகம், ஒழுக்க வீழ்ச்சி என்பவற்றின் நிழலில் சரியான வீரம் உருவாக மாட்டாது. அங்கு எதையாவது விதைத்தால் அது முளைக்காது. அங்கு சூரியனும் உதிக்காது.

இப்பொழுது கேட்கிறோம். பெரும் மனிதர்களை உருவாக்கி உள்ளங்களில் உறுதியை விதைத்து, இளைஞர்களை வெற்றி நோக்கி வழிநடாத்தும் இந்த முறப்பிகள் எங்கே? எங்கே அந்த சிறந்த முன்மாதிரிகள். சந்தோசத்தில் குறைவாகவும் பீதியில் இருக்கும்போது அதிகமாகவும் தேவைப்படும் வெற்றிகளோ தோல்விகளோ அசைத்துவிட முடியாத மகத்தான முன்மாதிரிகள் எங்கே.

தமிழில்: டீன் ஸலாஹி

## ஷெய்க் யூஸுப் அல் கர்ளாவி.... (11ம் பக்கத் தொடர்)

எல்லாத் துறைகளிலும் பல்வேறு நூல்களை அவர் எழுதிப் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளார். சில பல்கலைக்கழகங்களில் இவரது **நூல்கள் பாடப் புத்தகங்களாக கற்பிக்கப்படுவதும் குறிப்பிடத்**தக்கது.

கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி உஸூலுத்தீன் துறையைச் சார்ந்த அகீதா, தப்ஸீர் ஆகிய பகுதிகளிலேயே தனது கல்வியைப் பூர்த்தி செய்தவர். இத்துறையில் கல்வி கற்ற அவரால் எவ்வாறு மிகப் பெரும் சட்ட மேதையொன்றாக மாற முடிந்தது. இதுவொரு சுவாரஸ்யமான விடயம். உண்மையில் கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி பள்ளிவாயலில் கதீபாகப் பணியாற்றிய காலத்திலும் தாயியாகப் பல்வேறு நகரங்களுக்கும் நாடுகளுக்கும் பயணம் செய்த காலத்திலும் அவரிடம் பிக்ஹு சார்ந்த பிரச்சினைகளை முன்வைத்தே மக்கள் விளக்கம் கேட்டனர். தான் சென்ற இடங்களிலெல்லாம் மக்களிடமிருந்து வந்த சட்டப் பிரச்சினைகளே கர்ளாவியை மிகப் பெரும் சட்ட அறிஞராக மாற்றியது.

இவ்வகையில் இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களைப் பற்றியும் மத்ஹப்களைப் பற்றியும் அவர் விரிவாக ஆராய்ந்ததன் விளைவாக ஒரு முஜ்தஹித் என்ற அறிஞனின் அளவிற்கு புலமைப்



பெற்றார். சட்டத்துறையில் ஒருவர் பெற முடியுமான கடைசி நிலை இதுவே.

கர்ளாவி எல்லா மத்ஹபுகளின் சட்டம் வகுக்கும் ஒழுங்குகளையும் ஆராய்ந்துள்ள போதும் அவர் ஒரு தனித்த, சுதந்திர சிந்தனையாளராகவே விளங்குகின்றார். கர்ளாவி பிறந்த கிராமம் ஷாபி மத்ஹபை பின்பற்றும் பிரதேசம். இவர் மிக ஆழமாக கற்றது ஹனபி மத்ஹபின் சட்ட மரபுகளையே. எனினும் அவர் மத்ஹப்களிலேயே முற்று முழுதாகத் தங்கியிருக்கும் குறுகிய சிந்தனைக்கு அப்பால் பிக்ஹை காலத்தின் தேவைக்கேற்ப முன்வைக்கும் அபார திறமையும் ஆற்றலையும் கொண்டிருக்கிறார்.

இஜ்திஹாத் பணியைப் பொறுத்தவரை மத்ஹப் மரபுகளிலிருந்து விலகி சுதந்திரமாக குர்ஆனையும் சுன்னாவையும் ஆராய்கின்ற அதேவேளை மத்ஹபிலிருந்து காலத்திற்குப் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்கும் போக்கையும் அவர் பின்பற்றுகின்றார். சமகால, சமூக-அரசியல், பொருளாதார மாற்றங்களால் நேர்ந்த பிரச்சினைகளை **மிக ஆழமாக உள்வாங்கிக் கொண்டு அதற்கான தீர்வுகளை இஸ்லாதின் மூலாதாரமான குர்ஆனிலும் சுன்னாவிலும் தேட** முயல்வதுதான் இவரது இஜ்திஹாதின் சிறப்பம்சமாகும்.

கர்ளாவியைப் பொறுத்தவரை ஒவ்வொரு சட்ட அறிஞனும் தனித்து இயங்காமல் கூட்டு இஜ்திஹாத் மேற்கொள்வது மிகப் பயனுள்ளதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கும் எனக் கருதுகின்றார். இத்துறையில் அவர் எழுதிய 'அல் இஜ்திஹாத் பீ ஷரீஆ இஸ்லாமிய்யா' என்ற நூல் குறிப்பிடத்தக்க ஒரு முயற்சி எனலாம். கர்ளாவியின் இஜ்திஹாத் அடிப்படையைப் பற்றி விரிவாக ஆராயலாம். இங்கு இவ்விடயம் சுருக்கமாகவே தரப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

இஸ்லாத்தை ஒரு பாடத் திட்டமாக கற்கும் எந்த ஒரு மாணவனுக்கும் கர்ளாவி என்பவரை தெரியாமல் இருக்க முடியாது. அந்தளவுக்கு அவரது சிந்தனை வீச்சும் பார்வைப் பரப்பும் மிக விரிந்தவை. இத்தகைய மகத்தான மனிதர்களின் ஆயுளை அல்லாஹ் இன்னும் பல்லாண்டு நீடித்து வைக்க நாம் பிரார்த்திப்போமாக.

## இலங்கை அரசாங்கம்.... (01ம் பக்கத் தொடர்)

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் உடுகம புத்தரக்கித தேரர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அத்துடன் நாட்டு மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையினை மனிதாபிமான அடிப்படையிலேயே அரசாங்கம் பாதுகாப்புப் படை யினரும் முன்னெடுத்திருந்தனர். அதன்போது தமிழ் சிவிலியன் களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

மீள்பார்வை

உள்நாட்டு - வெளிநாட்டு சந்தா விபரம்

மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 30.00
ஆறு மாத சந்தா - ரூபா 450.00
ஒரு வருட சந்தா - ரூபா 900.00

இந்தியா
தனிப் பிரதி - ரூபா 75.00
ஒரு வருடம் - ரூபா 2000.00

மத்திய கிழக்கு நாடுகள், மலேசியா
தனிப் பிரதி - ரூபா 90.00
ஒரு வருடம் - ரூபா 2500.00

ஐரோப்பிய நாடுகள், ஜப்பான், தென்கொரியா
தனிப் பிரதி - ரூபா 120.00
ஒரு வருடம் - ரூபா 3000.00

காசுக் கட்டளை அனுப்ப விரும்புபவர்கள், காசுக்கட்டளை பெறுவோர்: Meelparvai Publishers எனவும், தபால் நிலையம்: Grandpass எனவும் குறிப்பிட்டு அனுப்புமாறு வேண்டுகிறோம். முகவரி: MMC, 06 Abhaya Place, Kolonnawa Road, Colombo 09.

MMC

மீள்பார்வை

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/101/NEWS/2011 - ISSN 2012-5038

# இலங்கையில் கப்பம் பெறும் குழுக்கள் கோலோச்ச அரச ஆதரவே காரணம்: கரு ஜயசூரிய



இலங்கையில் கப்பம் பெறும் குழுக்கள் கோலோச்ச அரச ஆதரவே காரணம் என்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையில் நடைபெறும் கப்பம் கோரல் சம்பவங்களில் அமைச்சர்களின் ஆதரவு பெற்ற பாதாள உலகக் கும்பல்களின் உறுப்பினர்களும், சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொலிஸாரும் இணைந்து கப்பம் கோரல் சம்பவங்களில் தொடர்புபட்டிருப்பதற்கு அவர்களுக்கு வழங்கப்படும் அரச ஆதரவே காரணம் என்று அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

Fathih Institute

புதிய சிந்தனை புதிய அணுகுமுறை

திஹாரியில் ஒரு புதிய இஸ்லாமிய கலாபீடம்

இம்முறை க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்தோர் விண்ணப்பிக்கலாம்.

நேர்முகப் பரீட்சை:
மே 01ம் திகதி ஞாயிற்றுக்கிழமை

விபரங்களுக்கு:
அஷ்ஷெய்க் ஏ.எல்.எம். றிப்கான் ஹாபிஸ் (நளீமி)
0774407474



மீள்பார்வை

அலுவலக இடமாற்றம்

மீள்பார்வை ஊடக மையம் இடம் மாறியுள்ளது.

சகல தொடர்புகளுக்கும்:

MMC
2 A, Hill Castle Place,
Bandaranayake Mawatha,
Colombo 12.
Tel/Fax: 0112 336272 Mobile: 0772227569

வெளிவரவுள்ள வெளியீடு

தர்பியா அமர்வுகளுக்கான இதழ்–29

பயணம்

நீங்களும் வாங்கி பயன்பெறுங்கள்...

விலை ரூபா 50.00




BAIRAHA
CONVENIENT AND DELICIOUS
Marinated Chicken




**Bairaha now introduces a range of pre-cooked marinated chicken products in attractive new packaging.** The range includes wings, drumsticks, thighs and whole legs. No hassle, no mess Just delicious gourmet, mouth watering style of chicken in an instant.

These products are available at "A grade" retail shops and also at selected supermarkets.

BAIRAHA FARMS PLC. (ESTD. 1975)
407, GALLE ROAD, COLOMBO 03. Tel: +94 112 575 255

BRIGHT®
HOME APPLIANCES



BRIGHT LANKA TRADING COMPANY
Sales Outlet 59, 2ND CROSS STREET
COLOMBO-11
HOT LINE : 011 4 932 932
Importers & Distributors : Ever Bright Holdings (Pvt) Ltd